
# இந்திய விவசாயிகளின் கடன்



# இந்திய விவசாயிகளின் கடனும் புதிய சட்டமும்

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

ஆசிரியர் :

A. முத்தையா, M. A.,

பொருளாதார உதவிப் பேராசிரியர்,

(Assistant Professor of Economics)

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை.

தேசீய வித்யா சங்கம்,

16, செம்புதாஸ் தெரு,

சென்னை.

1938

பதிப்புரிமை]

[விலை அணா 8

டதோ, அந்தந்த இடங்களிலெல்லாம் அரசாங்கத்தார் இம்மாதிரி மசோதாக்களை நிறைவேற்றி இருக்கின்றனர் என்பதும், இதில் எதுவும் ஆச்சரியமில்லை என்பதும் இப்புஸ்தகத்தைப் படிப்பவர்களுக்கு விளங்கும். விவசாயிகளின் கடன் பளுவின் அந்தரங்கக் காரணங்களை ஸ்ரீமான் முத்தையா ஆராய்ச்சி செய்து, புள்ளி விவரங்களுடன் விளக்கிக் காட்டியிருக்கிறார். நம் நாட்டு மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இவ்வித ஆராய்ச்சிகள் அவசியம். தமிழ் மக்கள் ஸ்ரீமான் முத்தையாவின் முயற்சியை ஆதரித்து, அவர்க்கு உற்சாகமூட்டுவார்களென எதிர் பார்க்கிறேன்.

சென்னை,
12—1—1938

S. ராமநாதன்

# முதற் பதிப்பின் முகவுரை

---

சென்னை மாகாணக் காங்கிரஸ் மந்திரி சபையார் பொது மக்களுக்குப் பல வகையாலும் நன்மை செய்வதற்கு முன் வந்திருக்கின்றனர். அவர்களுடைய வேலைத் திட்டத்தில் விவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிப்பது என்பது மிகச் சிறந்தது. விவசாயியின் கடன் உண்டான வகை, கடன் நிலை, இப்போது புகுத்தப்பட்டுள்ள கடன் நிவாரண மசோதாவைப் பற்றிய முழு விவரம், இவைகளை நன்றாக அறிந்தால்தான் மந்திரி சபையாரின் வேலைச் சிறப்புத் தெள்ளிதில் புலனாகும். இவ்விஷயங்களெல்லாம் எளிய நடையில் எல்லோரும் தெரிந்துகொள்ளும்படி இந்நூலில் காட்டப்பட்டுள்ளன. இந்நூல் தமிழ் தெரிந்த எல்லோருக்கும் பெரிதும் பயன் தருமென எண்ணுகிறேன்.

சென்னை,
12—1—38

அ. முத்தையா

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

தமிழ்ப் பெரியோர்களின் பேரன்பினாலே இந்நூலின் முதற்பதிப்புப் பிரதிகள் சில நாட்களுக்குள்ளேயே செலவாகிவிட்டபடியால், இந்நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிடலானேன். சமீபத்தில் கடன் நிவாரண மசோதாவில் சில திருத்தங்களைச் சட்டசபையில் நிறைவேற்றி வைத்துள்ளனராதலால், அச்சட்டத்திருத்தங்களை இந்நூலில் சேர்த்துள்ளேன். சட்டம் நிறைவேறிய பிறகு, அநாவசியமாகத் தோன்றிய சிற்சில வாக்கியங்களை நீக்கிவிட்டேன்.

திரு. சத்தியநாதன் அறிக்கையை ஒட்டி இந்திய விவசாயியின் வருஷவருமானம் சுமார் 15 ரூபாய் என முதல் பதிப்பில் எழுதினேன். பின் நிகழ்த்திய ஆராய்ச்சியில் அது சரியல்லவெனத் தோன்றியபடியால், அதை இப்பதிப்பில் களைந்துவிட்டேன்.

முன்போலவே இந்நூலைத் தமிழ்ப்பேருலகம் நன்கு ஆதரிக்குமென எண்ணுகின்றேன்.

" குருவிலாஸம் "
சிங்கார முதலியார் தெரு,
தியாகராய நகர்.
14—2—'38.

அ. முத்தையா

# உரிமையுரை

---

பாரதமாதாவின் உயிர் நாடியாகிய

பரம ஏழைக்

காந்தி அடிகளாருக்கு.

ஆசிரியன்.

# உள்ளுறை

விஷயம் | பக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| 1. இந்திய விவசாயிகள் .... .... | 1 |
| 2. விவசாயிகள் கடனாளிகளே ! .... | 12 |
| 3. கடனுக்குரிய காரணங்கள்—I .... | 17 |
| 4. கடனுக்குரிய காரணங்கள்—II .... | 33 |
| 5. கடன் கொடுத்து வாங்குவோர் .... | 59 |
| 6. விவசாயிகளின் கடன் பளு எவ்வளவு ? .... | 76 |
| 7. திடீரென விவசாயிகளின் கடன் பளு எப்படி அதிகமாயிற்று ?.... .... | 96 |
| 8. கடன் தொல்லைக் குறைவுக்காக இது வரையில் பல மாகாணத்திலும் செய்யப்பட்ட வேலைகள் .... .... .... | 108 |
| 9. கடன் நிவாரணச் சட்டத்தின் சுருக்கம் .... | 114 |
| 10. முடிவுரை .... .... .... | 129 |

# இந்திய விவசாயிகளின் கடன்

## 1. இந்திய விவசாயிகள்

ஆதிகாலம் முதல் இந்தியாவில் விவசாயமே தலைசிறந்து நின்றது. இந்தியாவுக்கு ஜீவாதாரமானது விவசாயமாகும். பிரிட்டிஷ் ராஜ்யம் இந்தியாவில் வலுவடைவதற்கு முன்பு நமது நாட்டிலே எல்லா இடங்களிலும் சிறு கைத்தொழில்களும் செழித்தோங்கி இருந்தன. விவசாயிகள் தங்கள் வேளாண்மைத் தொழிலோடு, ஏதாவதொரு கைத்தொழிலையும் செய்து வந்தார்கள். அதனால், அவர்கட்கு இரண்டு வித வருவாய்கள் இருந்தன. அவர்கள் அக்காலத்தில் வேளாண்மையையே முற்றிலும் நம்பி இருக்க வேண்டிய அவசியமில்லாமல் இருந்தது.

நாளடைவில் அரசாங்க மாறுதல்களாலும், இந்திய நாட்டுக் கைத்தொழில்களை மிகவும் கவலையுடன் அரசாங்கத்தார் காப்பாற்றவில்லையாதலாலும் இந்திய கைத்தொழில்கள் அழிந்து போய்விட்டன. ஆகையால், இந்திய மக்கள் விவசாயம் ஒன்றையே முற்றிலும் நம்பி இருக்க வேண்டி இருக்கிறது.

இந்த விஷயத்தில் மற்ற நாடுகள் இந்தியாவைப் போல இல்லை. எல்லா நாடுகளிலும் கைத்தொழில்கள் சிறந்து இருக்கின்றன; ஜனங்கள் பல வழியிலும் பிழைக்

கப் போதுமான சௌகரியங்கள் இருக்கின்றன; எல்லோரும் ஏரைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு போக வேண்டுவதில்லை. அந்தத்தேசங்களிலெல்லாம் பலவகைப் பட்ட வழிகளாலேயும் பொருள் உண்டாவதால், அந்த நாட்டு மக்களெல்லாம் மனம் மகிழ்ந்து, நன்றாக வாழ்கிறார்கள். உழவு ஒன்றையே நம்பி இருக்கும் நம் மக்களுக்குப் போதிய வருவாய் இல்லை. ஆகையால், இந்தியாவில் பசியும் பிணியும் மிடியும் மலிந்து கிடக்கின்றன.

இந்தியாவிலும் மற்றைய தேசங்களிலும் மொத்தம் உள்ள வேலை செய்யும் மக்களில் நூற்றுக்கு எத்தனை பேர் விவசாயத் தொழிலாளர் என்பது கீழ்க்காணும் * அட்டவணையிலிருந்து புலப்படும்:

| | |
|---|---|
| பிரிட்டிஷ் இந்தியா | நூற்றுக்கு 66·4 பேர் |
| இங்கிலாந்து | 6·7 ,, |
| அமெரிக்கா (U. S. A.) | 21·5 ,, |
| கனடா | 27·55 ,, |
| ஜெர்மனி | 30·3 ,, |
| பிரான்ஸ் | 37·85 ,, |
| ஜப்பான் | 48·3 ,, |

இந்தப் புள்ளி விவரங்களிலிருநது இந்தியாவிலே தான் பெரும்பாலான மக்கள் விவசாயத தொழிலிலேயே ஈடுபட்டு இருக்கிறார்களென்பது எளிதில் புலனாகும்.

நம் முன்னோர்கள் 'மேழிச் செல்வம் கோழை படாது,' என்றும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்,' என்றும் விவசாயத்தையே மிகவும் பாராட்டி எழுதி

* ஸர். M. விசுவேசுரையா குறித்தது

வைத்திருக்கிறார்கள். ஏனென்றால், மக்கள் முக்கியமாக வேண்டுவது உணவு. ஒரு தேசத்தில் சரியான உணவுப் பொருள் கிடைக்காவிட்டால், பசி மக்களைத் துன்பப் படுத்தும் அல்லவா? 'பசி வந்திடப் பத்தும் பறந்து போய்விடுமே!' அதனாலேதான் விவசாயம் மிக மேம் பட்டது என்று அவர்கள் புகழ்ந்திருக்கிறார்கள்.

அக்கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, "இந்தியாவில் எல்லோரும் விவசாயிகள். ஆகையால், இந்திய மக்கள் சிறந்த தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்கட்கு ஈடாவார் யாவர்?" என்று மனப்பால் குடிக்கக் கூடாது. ஏனென்றால், எந்தத் தேசமும் நல்ல செல்வத்துடன் இருக்க வேண்டுமானால், அந்த நாட்டு மக்கள் பசியும் பிணியும் இல்லாது நன்றாக வாழ வேண்டுமானால், அந்தத் தேச ஜனங்கள் விவசாயம் ஒன்றை மாத்திரம் செய்தல் போதாது. விவசாயத் தொழிலைச் செய்வதற்கு எத்தனை பேர் அத்தியாவசியமோ, அத்தனை பேர் போக, மற்றவர்கள் பல தொழிலையும் செய்ய வேண்டும். அப்போதுதான் நாடு சிறப்படையும். இந்த உண்மையைத் தான் சுப்பிரமணிய பாரதியார்,

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
எந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே;
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேஇசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!"

என்று பாடி இருக்கிறார். இந்திய மக்கள் பல வகைத் தொழில்களையும் செய்து மிகவும் மேன்மையாக வாழ வேண்டுமென்பது அவருடைய பிரார்த்தனை யாகும்.

விவசாயம் ஒன்றையே நம்பியிருக்கும் நம் மக்களுக்கு ஆள் ஒன்றுக்கு எவ்வளவு வரும்படி வருகிற தென்பதையும், எல்லாத் தொழில்களையும் செய்துவரும் நாடுகளில் ஆள் ஒன்றுக்குச் சராசரி வரும்படி எவ்வளவு என்பதையும் கீழே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களைக் கொண்டு சுலபமாக அறியலாம். அதை ஆழ்ந்து பார்த்தால், இந்தியாவின் மக்களுக்குத்தான் மிக மிகக் குறைவான வரும்படி இருக்கிறதென்பதை உணரலாம். அதற்குக் காரணம் இந்திய மக்கள் விவசாயத் தொழில் ஒன்றை மாத்திரமே செய்து வருவதேயாகும்.

"இந்தியருடைய சராசரி வரும்படி ஆள் ஒன்றுக்கு 82 ரூபாய். ஜப்பானில் ஆள் ஒன்றுக்கு வரும்படி 271 ரூபாய்; ஜெர்மனியில் 634 ரூபாய்; பிரான்ஸில் 636 ரூபாய்; இங்கிலாந்தில் 1,092 ரூபாய்; கனடாவில் 1,268 ரூபாய்; அமெரிக்காவில் (U. S. A.) 2,053 ரூபாய்; (அதாவது இங்கிலாந்தில் ஆள் ஒன்றுக்குக் கிடைக்கும் வரும்படி இந்தியாவில் ஆள் ஒன்றுக்குக் கிடைக்கும் வரும்படியைப் போல 13 பங்கு அதிகம்); அமெரிக்கனுக்குக் கிடைக்கும் வரும்படியோ, இந்தியனுக்குக் கிடைப்பதைப்போல 25 பங்கு அதிகமாய் இருக்கிறது. ஜப்பானில் ஆள் ஒன்றுக்கு வரும்படி இந்தியனுக்குக் கிடைப்பதைவிட $3\frac{1}{2}$ மடங்கு அதிகமாய் இருக்கிறது. ஜப்பான் சமீப காலத்திலேதான் தொழில் முறைகளை விருத்தி செய்ய ஆரம்பித்

தது. அந்தத் தேசங்கூட இந்தியாவைவிடப் பல மடங்கு அதிகமாக முன்னேற்றமடைந்துவிட்டது.''*

ஆகையால், இந்திய மக்களுக்குத்தான் மிகவும் குறைந்த வரும்படி கிடைக்கிறதென்பது நன்ருகத் தெரிகிறதல்லவா ? முன் கூறியபடி அதற்கு முக்கிய காரணம், வேறு தொழில் இல்லாமல் மக்கள் உழவுத் தொழிலையே செய்ய முன் வருவதாகும்.

விவசாயத் தொழிலாளிகளின் எண்ணிக்கை வர வர அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1921-ஆம் வருஷத்தில் எடுத்த ஜன சங்கியையின்படி விவசாயத் தொழிலாளிகளின் எண்ணிக்கை 4·62 மில்லியன். 1931-ஆம் வருஷத்தில் எடுத்த ஜன சங்கியையின்படி அவர்களின் தொகை 5·09 மில்லியன். ஓர் அறிக்கையிலே காட்டப்பட்டிருப்பதாவது, 1000 பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்களுள்ளே,

| | |
|---|---|
| விவசாயக் கூலி ஆட்கள் | 429 பேர் |
| சொந்த நிலத்தைப் பயிரிடுபவர் | 390 ,, |
| வாரத்துக்குப் பயிரிடுபவர் | 120 ,, |
| சொந்த நிலத்தைத் தாமே பயிரிடாதவர் | 34 ,, |
| வாரத்துக்கு வாங்கிய நிலத்தைத் தாமே பயிரிடாதவர் | 16 ,, |

என்பதாகும். இதிலிருந்து மக்கள் விவசாயத்தில் எவ்வளவு ஈடுபட்டிருக்கிருர்களென்பதும், எப்படி எப்படி ஈடுபட்டிருக்கிருர்களென்பதும் நன்ருக விளங்கும்.

---

* ஸர். M. விசுவேசுரையா எழுதியுள்ள "Planned Economy for India."

அது மாத்திரமன்று. இந்திய நாட்டு விவசாயமானது மற்ற நாட்டு விவசாயத்தைப்போல இல்லை. இந்தியாவிலே ஒவ்வொருவருக்கும் உழுவதற்கு இருக்கும் நிலம் மிகக் குறைவு. விவசாயி தன் நிலத்தை வளப்படுத்துவதற்கு ஆன பொருள் அவனுக்குக் கிடையாது. இந்தியாவில் விவசாயிகள் புதிய சாஸ்திரீயமான பயிர் முறைகளைக் கையாளுவதில்லை. அப்படிக் கையாளுவதற்கான பொருள் சௌகரியமும், படிப்பும் அவர்கட்கு இல்லை. அவர்களுடைய உழவு கருவிகள் மிகப் பழமையானவை. அவர்களுடைய மாடுகன்றுகள் ஊசலாடும் உயிருடன் நடக்கக்கூட இயலாமல் இருப்பவை. இந்திய விவசாயிகட்கோ, கடன் தொல்லை மிகவும் அதிகம். இந்த நிலைமையில் விவசாயத்தை அவர்கள் எப்படித் திறம்பட நடத்த முடியும்?

இந்தியாவில் சில சமயம் இயற்கையும் விவசாயிகட்கு அநுகூலமாக இருப்பதில்லை. இந்திய விவசாயிகள் வானத்தைப் பார்த்து நிற்பவர்களாய் இருக்கிறார்கள். மழை பெய்யத் தவறிவிட்டால் விவசாயிகள் பாடு கஷ்டந்தான். 'விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து, உள்நின்று உடற்றும் பசி,' என்று திருவள்ளுவர் பெருமான் சொல்லி இருப்பதேபோல மழை இல்லையேல் எல்லாரும் பசியால் துன்பமடைவர். கால மழை பெய்யாவிட்டாலும் சரி, அதிக மழை பெய்தாலும் சரி, போதுமான மழை பெய்யாவிட்டாலும் சரி—விவசாயத் தொழிலைச் சரியாக நடத்த முடியாது. இவ்விஷயத்தைப் பற்றிப் பின்னே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

எனவே, இந்திய விவசாயி வருஷா வருஷம் சரியாகப் பயிர் செய்து, தான் கஷ்டப்பட்டதற்கேற்ற பயனைப் பெறுவான் என்பது உறுதி இல்லை.

மேலும், எல்லாத் தேசங்களிலும் விவசாயமானது ஒரு தொழிலாக நடத்தப்படுகிறது. மற்றைய ஆலைத் தொழில்களுக்கும் விவசாயத்துக்கும் இலாபத்தைப் பொறுத்த வரையில் ஒன்றும் வித்தியாசம் இல்லை. ஓர் ஆலைத் தொழிலிலே, (உதாரணமாக இரும்புச் சாமான் செய்தல், துணி நெய்தல்) ஒருவன் தனது முதல் தொகையை **(Capital)** அமைத்தால், வருஷா வருஷம் அதற்கு வட்டி எவ்வளவு ஆகிறது, இலாபம் எவ்வளவு என்று அப்போதைக்கப்போது கணக்குப் பார்க்கிறான்; இலாபம் இல்லாத தொழிலாக இருந்தால், சில நாள் பார்த்துவிட்டு அதை விட்டுவிடுகிறான்; தன்னுடைய முதலை வேறே இலாபம் தரக்கூடிய தொழிலில் அமைக்கிறான். மேல் நாடுகளில் விவசாயமும் அதே மாதிரி ஒரு தொழிலாகவே நடத்தப்படுகிறது. ஒவ்வொரு விவசாயியும் தான் நிலத்தில் அமைத்த தொகை இவ்வளவு, பயிர்ச் செலவுக்காக வருஷா வருஷம் செலவு செய்வது இவ்வளவு, ஆள் கூலி இவ்வளவு, தான் உழைப்பதற்கு ஊதியம் இவ்வளவு என்று கணக்குப் பார்ப்பான்; மற்றத் தொழில்களில் வருவது போல இந்தத் தொழிலிலும் இலாபம் வருகிறதா என்று கவனித்துக்கொண்டுதான் விவசாயத்தொழிலைச் செய்வான்; போதுமான இலாபம் வராவிட்டால், என்ன என்ன சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்பதை ஆராய்வான்; விவசாயத்தையும் தக்க ஊதியம் தரக்கூடிய தொழிலாக ஆக்கிக்கொள்ளுவான்; ஏதாவது ஒரு பயிர் இடுவதில் நல்ல இலாபம் வரவில்லையானால், வேறே நல்ல இலாபம் தரக்கூடிய பயிரை அடுத்த வருஷம் இடுவான்; ஒவ்வொருவயலிலும்செலவு செய்பவை

இன்னின்னவை, இவ்வளவு செலவு செய்யப்பட்டது, வரும்படி இவ்வளவு, இலாபம் இவ்வளவு என்ற விவரங்கள் அடங்கிய வயல் வரவு செலவுக் கணக்கு மேல் நாட்டு ஒவ்வொரு விவசாயியினிடமும் இருக்கும். சுருக்கமாகச் சொன்னுல், மேல் நாடுகளிலே விவசாயமானது, இலாபம் தரத்தக்க ஒரு தொழிலாகவே நடத்தப்படுகிறது.

இந்தியாவிலோ, விவசாயம் ஒரு தொழிலாக நடத்தப்படவில்லை. விவசாயம் மக்கள் வாழ்க்கையில் ஒரு நிலையாகக் கருதப்படுகிறது. "நமக்கு நிலம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு எப்படியாவது நமது காலத்தைத் தள்ள வேண்டும்," என்று நிலத்தை அனுபவிக்கிருர்கள். விவசாயத்தை இலாபகரமான தொழிலாக நடத்தவில்லை. இந்திய விவசாயிகள் பெரும்பாலும் சரியான கணக்கு வழக்கு வைத்திருப்பதில்லை; வருஷா வருஷம் இலாப நஷ்டக் கணக்கைப் பார்ப்பதில்லை. ஒரு பயிரில் நல்ல இலாபம் வராவிட்டால், வேறு பயிர் செய்வதில்லை. மேல் நாடுகளிலே விவசாயிகள் பெரும்பாலும் வியாபாரத்துக்கு முக்கியமான விளை பொருள்களையே பயிர் செய்கிருர்கள். அவர்கள் விளைவிக்கும் பொருள்கட்கு 'வியாபார விளை பொருள்கள்,' (**Commercial Crops**) என்பது பெயர். இந்தியாவிலே விவசாயிகள் பெரும்பாலும் உணவுக்கு முக்கியமான விளை பொருள்களையே விளைவிக்கிருர்கள். சென்னை மாகாணத்திலே முக்கியமாக விளைகிற பொருள்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலியவைகளாகும்.

இந்திய விவசாயப் பொருள்களை விற்பனை செய்வதில் ஒரு விதச் சௌகரியம் இருக்கிறது. மேல் நாடுகள்

எல்லாம் விவசாயப் பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்பியே பெரும்பாலும் விற்பனை செய்ய வேண்டி இருக்கிறது. இந்தியாவிலோ, பெரும்பாலான விளை பொருள்களை உள் நாட்டிலேயே விற்பனை செய்துவிட லாம். வெளி நாட்டு நிலைமையைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டுவது இல்லை.

ஆனால், வெளி நாடுகள் நமக்குத் தொந்தரவு கொடுக் கின்றன. பல தேசங்களும் உணவுப் பொருள்களை அபார மாக உண்டாக்குகின்றன. அப்பொருள்களைத் தங்கள் தேசத்திலேயே செலவு செய்ய முடியவில்லை. ஆகையால், வெளி நாடுகட்கும் அனுப்புகின்றன. இந்தியாவிலும் ஏராளமான விளைபொருள்களைக் கொண்டுவந்து இறக்கி வைத்துக்கொண்டு, இந்திய பொருள்களைவிடக் குறைந்த விலைக்கு விற்கின்றன. இது 'கொல்லன் தெருவில் ஊசி விற்கிறது,' போல இருக்கிறது. இப்போது இந்தியாவி லுள்ள கொல்லர்கள் கடைத்தெருவில் ஊசி வாங்குவது போல, விவசாயத்தை முக்கியமாகக் கொண்டுள்ள தேச மக்கள், வெளி நாட்டு உணவுப் பொருள்களை வாங்கு கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் வெளி நாட்டுப் பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைத்தலேயாகும். வெளி நாடுகள் குறைந்த விலைக்குக் கொடுப்பதன் கார ணம், அந்த நாடுகளெல்லாம் விவசாயத்தை இலாபகர மான தொழிலாக நடத்துதலேயாகும். மேலும், அந்த நாடுகளிலெல்லாம் புதிய சாஸ்திரீய முறையிற் பயிர் செய் யப்படுகின்றது.

இந்திய விவசாயத்தொழில் இலாபகரமாக இல்லாத தன் மற்றொரு முக்கிய காரணம், பல விவசாயிகள் கடன்

வாங்கி, அந்தப் பணத்தைப் பயிர்ச் செலவுக்கு உபயோகப்படுத்துவதேயாகும். எவ்வளவு நன்றாகப் பயிர் செய்தாலும், விவசாயத்துக்காகச் செலவு செய்யும் பணத்திற்கு நூற்றுக்கு 2 முதல் 5 வீதந்தான் ஊதியம் கிடைக்கும். அதாவது, ஒருவன் விவசாயத்தில் 100 ரூபாய் செலவு செய்வதாக வைத்துக்கொள்வோம். அந்த நூறு ரூபாய்க்கு ஒரு வருஷத்தில் நூற்றிரண்டு அல்லது நூற்று ஐந்து ரூபாய் கிடைக்கும். செலவழித்த முதல் 100 ரூ. போக, இலாபம் நூற்றுக்கு 2 முதல் 5 ரூபாய்தான்.

விவசாயத் தொழிலில் செலவிடும் பணத்திற்கு வரும்படி இப்படி இருக்கிறது. விவசாயிகளோ, கண்ணை மூடிக்கொண்டு நூற்றுக்கு ஆறு வட்டிக்கோ, அல்லது அதற்கு அதிகமான வட்டிக்கோ பணத்தைக் கடனாக வாங்குகிறார்கள்; அதைச் சாகுபடிச் செலவுக்கு உபயோகிக்கிறார்கள். அந்தப் பணத்துக்கு நூற்றுக்கு இரண்டு முதல் ஐந்து ரூபாய்தான் இலாபம் வரும். வட்டியோ, அந்தப் பணத்திற்கு ஆறு ரூபாய் முதல் இருபத்து நான்கு அல்லது முப்பத்தாறு ரூபாய் வரையில் கூடக் கொடுக்க வேண்டி இருக்கும். கடனை வாங்கிப் பணத்தைச் செலவு பண்ணி, இரண்டு ரூபாய் இலாபம் அடைந்து, அந்தக் கடனுக்காக ஆறு ரூபாய் வட்டி கொடுத்தால், விவசாயி மீளுவது எப்படி? விவசாய வரும்படியிலிருந்து கடன் கொடுக்க முடியாது. ஆகையால், விவசாயி மேலும்மேலும் கடன் வாங்குகிறான். கடன் சுமை அதிகமாக வளர்ந்துகொண்டே போகிறது. அதற்குக் காரணம், விவசாயி கணக்குப் பார்த்து விவசாயத் தொழில் செய்யாமையும், குடித்தனம் செய்யாமையுமே ஆகும்.

சிலர் 6 வட்டி 12 வட்டிக்குக்கூடக் கடன் வாங்கி நிலத்தை வாங்கினார்கள். அவர்கள் செய்கையும் வருத்தப் படத் தக்கதுதான். நூற்றுக்கு இரண்டு ரூபாய் வரும் படி வரும் நிலத்தை, நூற்றுக்கு 6 ரூபாய் வட்டிக்குப் பணம் பெற்று வாங்கினால், அந்த விவசாயி கடைத் தேறுவதெப்படி? கடன் அதிகமாக ஆகப் புதிதாக வாங்கிய நிலத்தை அல்லாமல் பூர்விகமாக இருந்த சொத் தையும் அவன் இழந்து போகிறான். அது 'புது வெள் ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டு போவதைப்' போல இருக்கிறது.

திரு. சத்தியநாதன் அவர்கள் தமது அறிக்கையில் இதை விளக்கமாக எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். எவ் வளவு பெரிய விவசாயியானாலும் நூற்றுக்கு 6க்கு மேல் (அதாவது ½ வட்டி) வட்டி கொடுக்க முடியாதென்றும், அதற்கு மேல் விவசாயியிடம் வட்டி வாங்கினால் அது சட்டப்படி செல்லாதென்று சட்டம் விதிக்க வேண்டு மென்றும் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள்.

இதுகாறும் கூறியவற்றால் விவசாயி தன் தொழிலை இலாபகரமாகச் செய்யவில்லை என்பதும், ஒரு வாழ்க்கை யாகவே கொண்டிருப்பதும், விவசாயத்துக்காக அதிக கடன் வாங்கல் சரியல்ல என்பதும் நன்கு விளங்கும்.

இனி விவசாயியின் கடன் தன்மை எப்படிப்பட்டது என்பதைப்பற்றியும், அவன் கடன் படும் காரணங்கள் இன்னின்னவை என்பதையும் ஆராய்வோம்.

## 2. விவசாயிகள் கட்ஞளிகளே !

விவசாயிகள் சுயேச்சையாக வாழ வேண்டுமானுல் கடன் வாங்கவே கூடாது. கடனில்லாத வாழ்வுதான் சந்தோஷகரமானது. கடன் வாங்குவதை அறிவாளிகள் கண்டித்திருக்கிறுர்கள். நம்முடைய தேசத்தில் மாத்திர மன்றி, எல்லாத் தேசத்திலும் கடன் வாங்குவது கஷ்டத் தைத் தருவது என்றுதான் புலவர்களெல்லாம் எழுதி இருக்கிறுர்கள். சுமார் 1800 வருஷங்கட்கு முன்னே மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்தது. அதிலிருந்த புலவர்கள் மிக்க மேதாவிகள். அவர்களிலே ஒரு கவிஞர், 'கடனுண்டு வாழாமை காண்டலினிதே' என்று கூறி இருக்கிறுர். அதாவது யோசித்துப் பார்க்கையில், கட னில்லாத வாழ்க்கையே மகிழ்ச்சி கொடுக்கக் கூடிய வாழ்க்கை என்று சொல்லி இருக்கிறுர். ஆகையால், கடன் பட்ட வாழ்வு துன்பத்தையே தருவது.

இராமனுக்கும் இராவணனுக்கும் சண்டை நடந்த தல்லவா ? அப்போது இராமபிரானுடைய பாணமானது இராவணன் நெஞ்சில் பாய்ந்ததாம். அதனுல் இராவணன் நிலை தவறினுனும்; கலங்கிப்போனுனும்; மதி மயங்கினுனும். அந்தச் சமயத்தில இராவணன் பட்ட கஷ்டம் எப்படிப் பட்டது என்பதற்கு ஒரு புலவர் ஓர் அழகிய உவமானம் கூறி இருக்கிறுர். அவர் இராவணன் பட்ட துன்பத்திற் குக் கடன் வாங்கினவர்களின் துன்பத்தை உவமான மாகக் காட்டி இருக்கிறுர்; இராவணன் அப்போது பட்ட சிரமம், கடன்பட்டவர்கள் மனம் படுகிற அவ்வளவு ஆகும்

என்று சொல்லி இருக்கிறார். 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்!' என்பது அவர் பாட்டு. ஆகையால், கடன் வாங்குவது எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கிறது என்பது தெரிய வரும்.

ஆகவே, சமூகத்தினரும், புலவர்களும், அறிவாளிகளும் கடன் வாங்கக்கூடாதென்றே எழுதி இருக்கிறார்கள். தங்களுடைய வாழ்நாளிலே புத்திசாலிகள் ஒரு போது கூடக் கடன் வாங்குவதில்லை. சிறந்த மதங்களின் தலைவர்களும் கடன் கொடுத்தல் கடன் வாங்கல் முதலிய காரியங்களை ஆதரிக்கவில்லை. மகம்மதிய மதத்தின் தலைவரான முகம்மது நபி, வட்டி வாங்கக் கூடாது என்று போதித்து இருக்கிறார். கிறிஸ்தவ, இந்து மதங்களிலும் கடு வட்டி வாங்குவது முதலிய காரியங்கள் கண்டிக்கப் பட்டு இருக்கின்றன.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் நிலைப்பதற்கு முன்பு விவசாயிகள் அதிகமாகக் கடன் வாங்கியதில்லை. அந்தக் காலங்களில் விவசாயிகளின் வாழ்க்கையே வேறு மாதிரியாய் இருந்தது. அடக்கம் அவர்களுக்கு அருங்கலம். டாம்பிக வாழ்க்கையை அவர்கள் அறியார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மிக ஏழ்மையான வாழ்க்கையையே அவர்கள் அக்காலத்தில் நடத்தி வந்தார்கள். பல வகைத் துர்வழிகளிலும் தங்கள் மனத்தை அவர்கள் செலுத்தமாட்டார்கள். 'நல்லவன்' என்னும் பெயர் பெறுவதையே அவர்கள் பிறப்பின் பயன் என்று எண்ணி வந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் குடியானவர்கள் தங்களுக்கு வேண்டிய எல்லாப் பண்டங்களையும் உண்

டாக்கிக்கொண்டார்கள். அவர்களிடையே வழக்குகள் உண்டாவதில்லை. ஏதாவது வழக்கு ஏற்பட்டால், கோர்ட்டுக்குப் போக வேண்டியதில்லை; வக்கீல்களுக்குத் தாங்கள் கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தையும், கடு வட்டிக்குக் கடன் வாங்கும் பணத்தையும் கொட்டிக் கொட்டிக் கொடுக்க வேண்டியதில்லை; பொய்ச் சாட்சிகள் தயார் செய்ததில்லை. ஒவ்வோர் ஊரிலும் பஞ்சாயத்துச் சபை இருந்தது. அந்தச் சபையே எல்லா வழக்குகளையும் தீர்த்து வந்தது. கலியாணம் முதலிய சுபாசுப காலங்களிலும் குடியானவர்கள் கடன் வாங்கி எதுவும் செய்ததில்லை.

ஒவ்வோர் ஊரிலும் நிலத்தை வாங்குவதானாலும், விற்பதானாலும், அந்த ஊர்ச்சபையின் உத்தரவு பெற்றே செய்ய வேண்டும். சாதாரணமாகக் கடனுக்காக நிலத்தை விற்பதையும், அல்லது கடனுக்காக நிலத்தைக் கடன் கொடுத்தவன் அபகரிப்பதையும் ஊரார்கள் எளிதில் அநுமதிக்கமாட்டார்கள். இப்போதோ, ஒவ்வொரு விவசாயிக்கும் நிலத்தில் தனிப்பட்ட பாத்தியதை இருக்கிறது. விவசாயி தன் இஷ்டப்படி தன் நிலத்தை விற்கலாம்; தானமாகக் கொடுக்கலாம்; அடைமானமாக வைக்கலாம்; 'ஒத்தி' அல்லது 'போக்கியத்துக்கு' வைக்கலாம். இம் மாதிரி சகல உரிமையும் விவசாயிக்கு இப்போது உண்டு. இந்த ஒரு சுயேச்சையே விவசாயி கடன் குழியில் விழுந்து மீளாது வருந்துவதற்கும் காரணம் ஆகிவிட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்பு நில உரிமையைப் பற்றிய எண்ணங்கள் அவ்வளவாக வலு

வடையவில்லை. அப்போதைக்கப்போது பல உள் நாட்டுச் சண்டைகள் ஏற்படும். அரசாங்கங்கள் மாறும். ஜயமடைந்த அரசன் ஜனங்களிடமுள்ள நிலத்தைப் பிடுங்கித் தன் சிநேகிதர்கட்குக் கொடுப்பதும் உண்டு. அதனால் விவசாயிகள் பயந்திருந்தார்கள். நிச்சயமாக நீண்ட காலம் ஒரு நிலத்தைத் தாங்களே அனுபவிக்க முடியும் என்ற ஓர் உறுதி அப்போது இல்லை. எந்த நிமிஷத்திலும் தான் ஆண்டு அநுபவித்து வந்த நிலத்திலிருந்து விவசாயி வெளியேற்றப்படலாம். எந்தக் கணத்திலும் போர் வீரர் படை, பலன் கிட்டிய பயிரைக்கூட அழித்து நாசமாக்கலாம். ஆகையால், விவசாயி தன் நிலத்தைப் பெரியதோர் உடைமையாக நினைக்க முடியாது. பணலாவாதேவி பண்ணியவர்களும் நிலத்தை நல்ல ஈடாக நினைப்பதில்லை; நிலத்தின்மேல் கடன் கொடுப்பதில்லை. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் நிலைத்த பிறகு, இந்நிலைமை மாறிவிட்டது. பகைவர் படையெடுப்பு நாளடைவில் மறைந்தது. அமைதி ஏற்பட்டது. மக்கட்கு நிலத்தில் தனிப்பட்ட உரிமை தரப்பட்டது. ஜமீந்தார்கள் இருக்கும் இடங்களிலும் பயிர் செய்யும் குடிகளுக்கு நிலத்தில் சில உரிமைகள் வழங்கப்பட்டன. பாழாய்க் கிடந்த நிலங்களெல்லாம் பயிரிடப்பட்டன. நில விலை உயர்ந்தது.

தேசத்தில் மூலை முடுக்குகளிலெல்லாம் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டன. புதிய வழக்கு நடவடிக்கை முறைகள் உண்டாக்கப்பட்டன. இந்திய ஒப்பந்தச் சட்டம் (**Indian Contract Act**) இயற்றப்பட்டது. இந்தக் காரியங்களெல்லாம் கடன் கொடுப்பவர்கட்கு ஆதரவைக் கொடுத்தன. இவை கடன் வாங்கியவர்களை வருத்துவ

தற்குத் தக்க ஆயுதங்களாகக் கடன் கொடுத்தவர்களால் உபயோகப்படுத்தப்பட்டன; உபயோகப்படுத்தப்படுகின்றன. இப்போது கடனுக்காக விவசாயியின் நிலத்தையும், பண்டங்களையும் பிடுங்கிக்கொள்ளலாம். கடன்காரனைச் சிறையிற்கூட அடைக்கலாம் என்ற சட்டமும் அமுலில் இருந்து வருகிறது.

இத்தகைய காரணங்களால் கடன் கொடுப்பவர் எண்ணிக்கையும் அதிகமாயிற்று; கடன் வாங்குபவர் தொகையும் பெருகிக்கொண்டே வந்தது. நிலத்தை அடைமானமாக வைத்துக் கடன் வாங்குவது சகஜமாய்விட்டது. கடன் கொடுப்பவர் நிலத்தின்மேலே கடன் கொடுப்பது மிகப் பத்திரமானது என்று எண்ண ஆரம்பித்தனர். நிலத்தின்மேலே மாத்திரம் அன்றி, வெறுங்கைக் கடனாகவும் கடன் கொடுப்பதும் வாங்குவதும் ஆரம்பமாயின. கடன் கொடுப்பவர்கள், கடனைத் திருப்பிக் கொடுக்கச்சக்தி இல்லாதவர்கட்குக்கூடக் கடன்கொடுக்கத் தலைப்பட்டார்கள். கடன் வாங்கியவன் கடனைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், ஜெயிலில் அவனை அடைக்கலாம் என்ற சட்டம் இருந்தபடியால், கடன் வாங்கியவனைச் சிறையிலும் இட்டார்கள். அப்படி ஜெயிலுக்கு அனுப்பினால், அதைப் பார்க்கச் சகிக்காமல் கடன் பட்டவனுடைய உறவினர்கள் அவன் கடனைக் கொடுத்து அவனை மீட்டுவிடுவார்கள் என்பது கடன் கொடுத்தவர்களின் எண்ணம். பல சமயங்களில் அதைப் போலவே உற்றார் உறவினர், கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்து, ஜெயிலிலிருந்து மீட்பதும் உண்டு. இவ்வாறாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பல புதுச் சட்டங்கள் உண்டாயின; புது வழக்கு முறைகள் ஏற்

பட்டன. அவைகள் விவசாயிகட்கு நன்மை தரக்கூடிய வைகளே. ஆனால், வழக்குமுறையில் வந்தபோது விவசாயி கட்கு நல்லது தருவதற்குப் பதில் பெரிய தீங்குகளேயே அவைகள் விளைவித்துவிட்டன. பிரான்ஸ் தேசத்துப் பெரிய பொருளாதார நிபுணர் ஒருவரின் பெயர் 'ஜீடு' (Gide)என்பது. அவர் தம் புஸ்தகத்திலே, "ஒருவனுக்குக் கடன் வேண்டும்போது வாங்கிக்கொள்ளக் கூடிய சக்தி இருப்பது நல்லதுதான். அது, சமயத்திலே பேருதவியாக இருக்கும். ஆனால், அந்தக் கடன் வாங்கக்கூடிய சக்தியே, ஒரு மனிதன் நாளடைவில் அழிந்துபோகவும் உதவியாக இருக்கிறது," என்று எழுதி இருக்கிறார். ஏதாவது எதிர் பாராத கஷ்டம் உண்டானால், கடன் வாங்கல் அவசியந் தான். ஆனால், அந்தப் பழக்கத்தை நாளடைவில் அநுஷ் டித்து வந்தால், அதனால் ஏற்படும் கஷ்டங்கள் எண்ணி முடியா; எழுதிச் சொல்லொணா!

## 3. கடனுக்குரிய காரணங்கள்—I

விவசாயிகள் எந்தெந்தக் காரணங்களால் கடன் வாங்கி னார்கள், வாங்கி வருகிறார்கள் என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியமல்லவா? விவசாயிகள் கடன்பட்டதற் குக் காரணங்கள் பல. சில சமயங்களில் விவசாயிகள் தங்களுடைய அறியாமையாலேயே கடன் வாங்கினார்கள். பல சமயங்களில், பல கஷ்டங்கள் காரணமாக, விவசாயி கள் கடன் வாங்கினார்கள்.

முதற் காரணம் விவசாயிகளின் ஏழ்மை. விவசாயிகள் மிகவும் வறியவர்களாய் இருத்தலால், அவர்கள் தங்கள்

வருமானத்தைக்கொண்டு வயிறு வளர்க்க முடியவில்லை. 1928-ஆம் வருஷத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் விளைந்த விவசாயப் பொருள்களின் விலை மதிப்பு 1018 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்குப்படி, ஆள் ஒருவனுக்கு வருஷ வருமானம் 50 ரூபாய் தான். அதே வருஷத்தில் பாங்கி விசாரணைக் கமிட்டியார் ஒவ்வோர் ஆளுக்கும் வருஷ வரும்படி 42 ரூபாய்தான் என்று குறிப்பிட்டு இருக்கின்றனர். 1928-ஆம் வருஷத்தில் விளைபொருள்களின்விலை அதிகமாய் இருந்தது. அப்போது அவைகளின் மதிப்பு 1018 கோடி ரூபாய். இப்போதோ, விலைகள் மிகவும் வீழ்ந்துவிட்டன. அதே விளைபொருள்களின் விலைமதிப்பு இப்போது சுமார் 500 கோடி ரூபாய்தான் இருக்கும். ஆகவே, ஒவ்வொரு விவசாயியின் வரும்படியும், ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்துவிடும் அல்லவா ? எனவே, இப்போது ஒவ்வொரு விவசாயியினுடைய வருஷ வரும்படி சுமார் 25 ரூபாய்தான் இருக்கும்.

சமீப காலத்திலே சென்னைச் சர்வ கலாசாலைப் பொருளாதாரப் பேராசிரியர் திரு **P. J.** தாமஸ் ஒரு விசாரணை நடத்தினர். அவருடைய மாணவர்கள் பல ஊர் கட்கும் போனார்கள்; பொருளாதார நிலைமையைப்பற்றிய ஆராய்ச்சி நடத்தினர்கள். அந்த ஆராய்ச்சியின் முடிவுப்படி ஒவ்வொரு விவசாயியின் வருஷ வருமானம் 50 ரூபாய் ஆகும்.

சாதாரணமாகக் கைதியே மிகவும் கஷ்டப்படுபவன் என நினைப்பது சகஜம். உண்மையும் அதுதான். இந்

தியாவிலே ஒவ்வொரு கைதிக்கும் உணவு உடைக்காக அரசாங்கத்தாரால் வருஷத்துக்கு 90 ரூபாய் செலவழிக்கப்படுகிறது. கைதிக்காக 90 ரூபாய் செலவாகிறபோது, விவசாயிகளின் மொத்த வருஷ வருமானம் 50 அல்லது 60 ரூபாயாக இருந்து வருகிறது. இதிலிருந்து பெரும்பாலான விவசாயிகள் கைதிகளின் வாழ்க்கையைவிட மோசமான, பரிதாபகரமான, ஏழ்மையான, துர்ப்பாக்கியமான வாழ்க்கையை நடத்துகிறார்களென்பது புலனாகின்றது அல்லவா? விவசாயிகளின் ஏழ்மை நிலையைக் கண்டுகொள்ள இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா? 50 அல்லது 60 ரூபாய் வருஷ வரும்படியில் அவர்கள் தினந்தோறும் ஒரு வேளைகூட வயிறார உண்ண முடியாதே! அப்படியிருக்க, அவர்கள் துணி வாங்குவதெப்படி? நல்ல பண்டங்களின் சுவையை அநுபவிப்பது எப்பொழுது? சந்தோஷமாக வாழ்வது எப்படி? எனவே, பல மக்கள் உண்ண உணவற்று, கட்டக் கந்தையில்லாமல், இருக்க இடமில்லாமல், பசியாலும் மழையாலும் பனியாலும் வெயிலாலும் நோயாலும் வருந்துவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

எனவே, சாதாரண காலத்திலுங்கூட நில வரும்படியைக்கொண்டே தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாத விவசாயிகள், கடன் கொடுப்பார் கிடைத்தால், கடன் வாங்கும் துர்ப்பாக்கிய நிலைமையை அடைகின்றார்கள். விவசாயிகளின் வறுமையே கடனுக்கு முதற்காரணமாகும்.

இரண்டாவது காரணம், கால மழை பெய்யாது போவது, பயிர் விளையாது பொய்த்துப்போவது முதலிய

வைகளாம். இந்திய விவசாயம் ஒருவிதத்தில் மிகத் துர்ப் பாக்கியமானது. இந்திய விவசாயத்துக்கு ஜீவாதாரம் மழை. மழை தவறினால் பசிப்பிணி உண்டாகிவிடும். கால மழை பெய்யத் தவறினாலும் கஷ்டம். அதிக மழை பெய் தாலும் கஷ்டம். போதிய மழை பெய்யாவிட்டாலும் துன்பம். மழை தண்ணீர் முதலியவை சரியாக இருந்தாற் றான், விவசாயி ஒரு வேளை உணவாவது உண்ணலாம்; இல்லாவிட்டால் பட்டினி கிடந்தே சாக வேண்டும். பட்டி னிகிடவாது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காலம் தள்ள வேண்டுமானால், கடன் வாங்குவது அவசியமாகி றது. 1833-ஆம் வருஷத்தில் **போர்ட்லன்** என்ற சென் னைக் கலெக்டர், "விவசாயிகள் எப்போதும் தரித்திரப் பட்டும், கடனில் அமிழ்ந்தியும் வருத்தப்படுகிறார்கள்," என்று எழுதி இருக்கிறார். 1928ல் **ஆஸ்டின்** என்ற சென்னைக் கலெக்டர், "நல்ல செழித்த விளைவு உள்ள காலத்திற்கூடச் சாதாரணமாக ஒரு விவசாயிக்கு ஒருவித மிச்சமும் இருப்பதில்லை," என்று எழுதி இருக்கிறார். மற்றொரு கணக்குப்படி விவசாயத்தில் இடும் பணத் திற்குச் சாதாரணமாகச் செழிப்பான வருஷங்களிற்கூட நூற்றுக்கு இரண்டுமுதல் ஐந்து சத விகிதந்தான் வரும் படி கிடைக்கிறது. திரு. **டார்லிங்கு** என்பவர் இந்திய விவசாயத்தைப்பற்றிக் கூறுவதாவது: "பருவ கால மழை இல்லாமல் போனாலும் போகலாம். அல்லது மலைப்பக்கங் களிலே மழை எப்போது வேண்டாமோ, அப்போது பெய்யலாம். அல்லது மழையால் வெள்ளம் அதிகமாகிப் பயிர், வீடு வாசல், மாடு கன்று முதலியவைகளை அழித்துவிடலாம். இந்த நிலைமையில் சிறிது நிலமுள்ள

விவசாயிகள் கடன் வாங்காது செட்டாக வாழ்வதென்றால் சற்றுச் சிரமந்தான். ஆனால், சமர்த்தான விவசாயி கடன் வாங்காமலும் இருக்கக் கூடும். ஆனால், அப்படிக் கடன் வாங்காமல் வாழ்வதென்பது, புயல் நிறைந்த அட்லாண்டிக்கு மகா சமுத்திரத்தைச் சிறிய பாய்மரக் கப்பலைக் கொண்டு கடக்க முயற்சி செய்வதைப்போல இருக்கிறது. அப்படிப்பட்ட பாய்மரக் கப்பல் நன்றாக நடத்தப்படாவிட்டால், முழுகிப் போவது நிச்சயம். இந்திய விவசாயமும் அவ்வளவு கஷ்டமானதே. இயற்கையானது சமுத்திரத்தில் கப்பலை எப்படி அழிக்கக்கூடுமோ, அப்படியே பயிரையும் அழித்து ஒழிக்க முடியும்,'' என்பதாம். அப்படித் திரு. டார்லிங்கு கணக்கெடுத்ததில், ஐந்து வருஷங்களை எடுத்துக்கொண்டால், ஒரு வருஷ விவசாயம் செழிப்பாய் இருக்கும்; ஒரு வருஷ விவசாயம் மோசமாய் இருக்கும்; மூன்று வருஷ விவசாயம் செழிப்பாயும் இல்லாமல் மோசமாயும் இல்லாமல் இருக்கும் என்று கண்டிருக்கிறார். ஆதலால், செழிப்பான வருஷங்களிற்றான் விவசாயி கடன் வாங்காது வாழ்க்கை நடத்த முடியும். மோசமான வருஷங்களில் உணவுக்கும், சாகுபடிச் செலவுக்கும் கடன் வாங்காமலிருக்க முடியவில்லை. சுமாரான வருஷங்களில் சாகுபடிச் செலவுக்காவது கடன் வாங்க வேண்டி நேரிடுகிறது. அப்படிக் கடன் வாங்க நேரிடுங்காலங்களில் கூட்டுறவுச் சங்கம் முதலிய ஸ்தாபனங்களிலிருந்து விவசாயிகள் கடன் வாங்குவதில்லை. அதற்குக் காரணங்கள் இரண்டு: (1) கூட்டுறவுச் சங்கம் முதலிய இடங்களிலே சீக்கிரமாகப் பணம் வாங்க முடியாதென்பது. சில ஊர்களில் கட்சிப் பிரதி கட்சிகள் உண்டு. அங்கே ஒரு கட்சிக்

காரர்கையில் கூட்டுறவுச் சங்கம் இருக்குமானால், மற்றொரு கட்சிக்காரர் ஒரு பைசாக்கூடக் கடன் வாங்க முடியாது. (2) நம் விவசாயிகள் 'மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே,' என்று எண்ணி, மானத்தைக் காப்பவர்கள்; தாங்கள் பணக் கஷ்டப்படுவதைப் பலரும் அறியக்கூடாதென முயலுபவர்கள். கூட்டுறவுச் சங்கம் முதலிய பொது இடங்கட்குப்போனால், கடன் வாங்குவது பலருக்கும் தெரிந்துபோகும். ஆதலால், அவர்கள் அங்கே போவதில்லை. ஒரு செட்டி, அல்லது மார்வாரி, அல்லது விவசாயியாயிருந்து லாவாதேவி செய்பவன் யாரிடமாவது சென்று, விவசாயி சத்தப்படாமல், பணத்தை வாங்கிவந்து விடுவார்கள். இரகசியமாக இருப்பதால் கடு வட்டியானாலும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. எப்படியோ பணம் கிடைத்தால் போதும் என்பதே அவர்கள் கவலை. கவலை ஒழிந்ததும் வேறு சிந்தனை, ஒன்றும் அவர்கள் செய்வதில்லை.

மூன்றாவது, பூச்சிகள், துஷ்ட மிருகங்கள் முதலியவைகளால்பயிருக்குஉண்டாகும்சேதமும், விவசாயிகளின் கடனுக்குக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. இதைப் பற்றித் திரு. சத்தியநாதன் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது. பயிர்ப்பூச்சிகள் பயிருக்கு மிக்க சேதத்தை விளைவிக்கின்றன. காடுகட்குப் பக்கத்திலே நெற்பயிருக்கு அடிக்கடி சேதம் உண்டாகக்கூடும். நல்ல செழிப்பான பயிரைச் சில பூச்சிகள் இரண்டொரு நாட்களில் அழித்துவிடுவதும் உண்டு. காடுகட்கு அருகில் உள்ள பயிர்களை அப்போதைக்கப்போது காட்டு யானைகள், காட்டுப் பன்றிகள், மான்கள், குரங்குகள் முத

லியவை அழித்துப்போவதும் அடிக்கடி நிகழும் செய்தியாகும். இந்த அபாயம் கோயமுத்தூர், தென்கன்னடம் முதலிய இடங்களில் மிகவும் அதிகம். எலி முதலிய ஜந்துக்களாலும் சேதம் அதிகம் உண்டாகலாம். ஓர் எலி வருஷம் ஒன்றுக்கு 6 பவுன் எடையுள்ள தானியத்தைத் தின்கின்றதாம். புரபசர் **முக்கர்ஜீ** என்பவர் ஒரு வருஷத்தில் எலியால் மாத்திரம் உண்டாகும் பொருட்சேதம் 22 கோடி ரூபாய் பெறுமானது என்று கணக்கிட்டு இருக்கிறார்.

நான்காம் காரணம், நிலப்பங்கு முறைகளும், நிலப் பாகுபாடும் ஆகும். நமது தேசத்திலே ஒவ்வொரு விவசாயியும் பயிரிடும் நிலம் மிகவும் குறைவானதாகும். ஹிந்துக்களின் சொத்துரிமைச் சட்டம் அதற்கு ஒரு காரணமாகும். ஒரு சிறு வயலானாலும் சரி, எத்தனை சகோதரர்கள் இருக்கிறார்களோ அத்தனை சகோதரர்களும் அந்த வயலைத் துண்டு துண்டாக்கிப் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள நிலம் ஒவ்வொரு விதமாக இருக்கும். நிலத்தின் தன்மை, சாரம் முதலியவைகளில் வேறுபாடுகள் உண்டு. ஆகையால், பங்காளிகளுக்குள் பங்கிட்டுக் கொள்ளும்போது பல இடத்திலும் உள்ள நிலங்களையெல்லாம் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு வயலையும் எத்தனை பங்காளிகள் இருக்கிறார்களோ, அத்தனை பங்காகக்கூட விதாசாரம் செய்து பங்கிட்டுக்கொள்வது உண்டு. அதனால், ஒவ்வொரு விவசாயியின் நிலமும் பல இடங்களிலும் சிதறுண்டு கிடக்கின்றது ; அது மாத்திரமன்றி, சிறு

சிறு துண்டு நிலமாகவும் இருக்கிறது. இத்தியாதி காரணங்களால் சரியாகச் சாகுபடி செய்ய முடியாமற் போகிறது. ஒவ்வொரு விவசாயியும் தன் நிலத்திற்குத் தனியாக வேலி போட முடியாது; தான் விரும்பிய பயிரை இட இயலாது. ஏனென்ருல், பக்கத்து வயற்காரன் 4 மாதத்தில் விளையக்கூடிய பயிரை இட்டால், இவன் 5 மாதப் பயிர் இட முடியாது. அப்படி இட்டால், சேதமுண்டாகும்; நஷ்டமுண்டாகும். வயல்கள் ஆங்காங்குச் சிதறுண்டு கிடப்பதால், சாஸ்திரீய முறையில், நன்ருகப் பயிரிடுவதும் முடியாத காரியம். மேல் நாடுகளிலே ஒரு விவசாயியின் நிலம் ஒன்ருகவே இருக்கும். அந்த நிலத்தின் நடுவிலே ஒரு குடிசை அல்லது சிற்றில் (cottage) கட்டிக் கொண்டு அந்த விவசாயி குடி இருப்பான். அவன் மாடு கன்று முதலியவை அங்கேயே இருக்கும். மாடு கன்று முதலியவைகளின் மூத்திரம் சாணம் முதலியவைகளை ஒரு சிறிதும் சேதமாகாமல் காப்பாற்றி எருவாக உபயோகப்படுத்தக்கூடும். நிலத்தை வேலிகோலிக் காப்பாற்றலாம். எந்த நாளில் எந்தப் பயிரை வேண்டுமானலும் இடலாம். இப்படிப்பட்ட சௌகரியங்களெல்லாம் இந்திய விவசாயிகட்கு இல்லாதது பெரிய குறை. நாளடைவில், ஒவ்வொரு தலை முறையிலும் ஒவ்வொரு விவசாயியும் கொண்டுள்ள நிலம் குறைந்துகொண்டும், மேலும் மேலும் சிதறுண்டும் போகின்றனவே அல்லாமல், ஒன்று சேரும் வழியில்லை. எனவே, விவசாயமானது இலாபகரமானதாக இராமல், நஷ்டத்திற்கே ஏதுவாய் இருக்கிறது. ஆகவே, இதனல் ஏற்படும் நஷ்டமும் கடன் வாங்குவதற்குக் காரணமாகிறது.

திரு. டார்லிங்கு என்பவர் தாம் எழுதியுள்ள பஞ்சாப்பு விவசாயி (The Punjab Peasant) என்னும் நூலில், நிலங்களைப் பல துண்டு துணுக்குகளாகப் பிரித்தலாலும், ஒருவனுடைய நிலம் பல இடங்களிலும் சிதறுண்டு கிடப்பதாலும் நேரிடும் கஷ்டங்களைப் பற்றிப் பின் வருமாறு எழுதி இருக்கிறார்: "ஒவ்வொரு மனிதனும் மிகக் கொஞ்சமான நிலத்துக்கே சொந்தக்காரனாக இருப்பதன் காரணம், இந்திய சொத்துரிமைச் சட்டமாகும். சொத்துரிமைச் சட்டப்படி, ஒரு தகப்பனுக்குப் பல பிள்ளைகளிருந்தால், ஒவ்வொரு பிள்ளைக்கும் அந்தச் சொத்தில் சம பாகம் உண்டு."

கீழ்க் காணும் அட்டவணையிலிருந்து ஒவ்வொரு விவசாயியும் எவ்வளவு சிறிய நிலத்தைச் சாகுபடி செய்கிறானென்பதை அறிந்துகொள்ளலாம்:

| | | | |
|---|---|---|---|
| பம்பாய் மாகாணம் | ஆள் ஒன்றுக்கு | 12·2 | ஏக்கர் |
| பஞ்சாப்பு | ,, | 9·2 | ,, |
| மத்திய மாகாணம் | ,, | 8·5 | ,, |
| சென்னை | ,, | 4·9 | ,, |
| வங்காளம் | ,, | 3·1 | ,, |
| பீஹார், ஒரிஸ்ஸா | ,, | 3·1 | ,, |
| அஸ்ஸாம் | ,, | 3·0 | ,, |
| ஐக்கிய மாகாணம் | ,, | 2·5 | ,, |

இந்தப் புள்ளி விவரங்களால் ஒவ்வொரு விவசாயியும் மிகச் சிறிய அளவு நிலத்தையே சாகுபடி செய்கிறானென்பது நன்றாகத் தெரிகின்றதல்லவா? மிகச் சிறிய

நிலத்தைச் சாகுபடி செய்வது சிக்கனமான முறை அன்று. ஆகையால், கடன் ஏற்படுகிறது.

கீழே குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரி எவ்வளவு நிலம் இருக்கிறதென்பது காட்டப்பட்டிருக்கிறது. இந்தியாவில் விவசாயி வைத்திருக்கும் நில அளவுக்கும், மற்றத் தேச விவசாயிகளில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் நில அளவுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்பதை உற்று நோக்குங்கள் :

| | தேசம் | ஒவ்வொரு விவசாயிக்கும் உள்ள நிலம் |
|---|---|---|
| 1. | இந்தியா | 5 ஏக்கர் |
| 2. | ஜப்பான் | 4·2 ,, |
| 3. | ஜெர்மனி | 21 ,, |
| 4. | இங்கிலாந்து | 55 ,, |
| 5. | அமெரிக்கா (U. S. A.) | 157 ,, |
| 6. | கனடா | 198 ,, |

ஆகவே, இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் உள்ள நில அளவும் குறைவு; அதிலிருந்து வரும் வரும்படியும் குறைவு. மேல் அட்டவணையில் ஜப்பானில் ஒவ்வொரு விவசாயிக்கும் இந்தியாவிலுள்ளதைவிடக் குறைவான அளவு நிலம் இருக்கிறதென்பதைப் பார்க்கலாம். ஆனால், அங்கே சாகுபடி முறைகள் மிகவும் விசேஷமானவை. **ஸர். ம. விசுவேசுரையா**வின் கணக்கின்படி, ஓர் ஏக்கர் நிலத்தில் இந்தியாவில் 25 ரூபாய் வரும்படிதான் கிடைக்கிறது. அதே நிலத்தில் ஜப்பானியர்கள் ரூ. 150 வரும்

படி பெறுகிறார்கள். ஆகவே, நம் மக்களின் வரும்படிக் குறைவுக்கேற்ப, வறுமையும் அதிகமாய் இருக்கிறது. அவ் விதத் தரித்திரமே கடனுக்குக் காரணமாய் இருக்கிறது.

ஐந்தாவது காரணம், இந்தியாவின் ஜனப் பெருக்கமாகும். கடந்த பல வருஷங்களாக இந்தியாவின் ஜனத் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

| ஜனக் கணித வருஷம் | ஜனத்தொகை (பத்து இலட்சங்கள்) |
|---|---|
| 1872 | 206·16 |
| 1881 | 253·89 |
| 1891 | 287·31 |
| 1901 | 294·36 |
| 1911 | 315·15 |
| 1921 | 318·94 |
| 1931 | 352· 8 |

(ஜாதார் & பேரி—இந்தியன் எகனமிக்ஸ்)

ஆகவே, ஜனத்தொகை பெருகிக்கொண்டேவருவது கவனிக்கத்தக்கது. 1881-ஆம்வருஷத்திற்குள், சுமார் 50 வருஷங்களில், இந்திய மக்கள் தொகை 10 கோடி அதிகமாகி இருக்கிறது. ஜனங்கள் 10 கோடி அதிகரித்து இருக்கிறபோது, விளைவு, பண்ட உற்பத்தி இவைகளும் விசேஷமாக அதிகரித்துவிட்டால், ஜனங்கட்குக் கஷ்டம் உண்டாகாது. இந்தியாவிலே ஜனங்கள் எவ்வளவு அதிகமானார்களோ, அவ்வளவு செல்வமும் விருத்தியாகவில்லை. அதனால், வறுமை அதிகரிக்க ஆரம்பித்துவிட்டது.

உதாரணமாக, ஓர் ஊரில் 100 மனிதர்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். ஒரு வருஷத்தில் அவர்களுக்கு மொத்தம் 1000 ரூபாய் வரும்படி வருவதாக எண்ணுவோம். அப்போது அவர்கள் தங்கள் வரும்படியைச் சரி பங்காகப் பங்கிட்டுக்கொண்டால், 1000 ரூபாயையும் 100 பேருக்குப் பிரிக்கும்போது ஆளுக்கு 10 ரூபாய் கிடைக்கும். அடுத்த வருஷம் அந்த ஊரில் 200 பேர் இருப்பதாக வைத்துக்கொள்வோம். வரும்படி 1200 ரூபாய். அப்போது ஆளுக்கு 6 ரூபாயே கிடைக்கும். ஏனென்றால், மனிதர் எண்ணிக்கை எப்படியாகிறதோ, அப்படிப் பணம் அதிகமாகவில்லை. இதுதான் இந்தியாவிலும் நாம் பார்க்கும் விஷயமாகும். இந்திய ஜனத்தொகை அதிகமாகிக்கொண்டே போகையில், தேசவரும்படி அதே மாதிரி விருத்தியாகவில்லை. ஆகையாலேதான் ஜன அபிவிருத்தி இந்தியாவில் தரித்திரத்துக்குக் காரணமாகிறது என்று கூற வேண்டி இருக்கிறது.

நமது சென்னை மாகாணத்தை எடுத்துக்கொள்ளுவோம். 1921-ஆம் வருஷத்தில் இருந்தஜனத்தொகையை விட 1931-ஆம் வருஷத்தில் நூற்றுக்கு 10·4 விகிதம் ஜனத்தொகை அதிகமாக விருத்தியடைந்தது. சாகுபடியோ, அதே பத்து வருஷங்களில் நூற்றுக்கு 1·5 வீதந்தான் அதிகரித்து இருக்கிறது. மொத்த நிலத்தின் அதிகரிப்பு நூற்றுக்கு 5·7 வீதந்தான் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, ஜனங்கள் அதிகரிப்பதேபோலப் பொருள் விருத்தியும் அதிகமாகவில்லை என்று சொல்ல வேண்டி நேரிடுகிறது.

சென்னை மாகாணத்தில் 1921-ஆம் வருஷத்திலும் 1931-ஆம் வருஷத்திலும் மக்கள் தொகை நிலச்சாகுபடி முதலியவைகளைக் காட்டும் பட்டி :

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| வருஷம் | மொத்த ஜனத்தொகை (10 இலட்சத்தில்) | விஸ்தீரணம் (சதுர மைல்கள்) | ஒவ்வொரு சதுர மைலிலுமுள்ள மக்கள் | சாகுபடிக்கு ஆகாத நிலங்கள் ஏக்கர்கள் | சாகுபடி செய்யக்கூடிய தரிசுகள் ஏக்கர்கள் |
| 1921 | 42·32 | 142,300 | 298 | 21,411,397 | 12,178,856 |
| 1931 | 46·74 | 142,300 | 329 | 20,515,113 | 13,099,483 |

| | சாகுபடி செய்யப்படாத நிலம் | சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீரணம் | வாரச் சாகுபடி நிலம் | | | ஓர் ஆளுக்கு உரிய நிலம் |
|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர்கள் | ஏக்கர்கள் | நன்செய் ஏக்கர் | புன்செய் ஏக்கர் | மொத்தம் ஏக்கர் | செண்டு |
| 1921 | 10,032,332 | 33,012,244 | 5,163,821 | 20,963,663 | 26,127,484 | 62 |
| 1931 | 10,704,152 | 33,495,798 | 5,361,041 | 22,250,290 | 27,611,331 | 59 |

(திரு. சத்தியநாதன் அறிக்கை, பக்கம் 22)

கீழ்க்காணும் அட்டவணையால் இந்தியாவிலுள்ள பல மாகாணங்களிலும் சதுர மைலுக்கு எத்தனை மக்கள் இருக்கிறார்களென்பதையும், மற்றத் தேசங்களில் சதுர மைல் ஒன்றில் எத்தனை பேர் இருக்கிறார்களென்பதையும் அறியலாம். *

| மாகாணம் அல்லது தேசம் | பரப்பு (1,000 சதுரமைல்) | ஜனத்தொகை (பத்து லக்ஷங்கள்) | ஜன நெருக்கம் (சதுர மைல் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| சென்னை | 142·3 | 46·76 | 329 |
| பம்பாய் | 123·6 | 21·80 | 176 |
| ஐக்கிய மாகாணங்கள் | 106·3 | 48·41 | 455 |
| மத்திய மாகாணம் பேரார் | 99·9 | 15·51 | 155 |
| பஞ்சாப் | 99·0 | 23·58 | 238 |
| பீஹார், ஒரிஸ்ஸா | 83·5 | 37·68 | 454 |
| வங்காளம் | 77·5 | 50·11 | 646 |
| அஸ்ஸாம் | 55·0 | 8·62 | 157 |
| பெல்ஜியம் | 11·7 | 8·13 | 692 |
| இங்கிலாந்து வேல்ஸ் | 58·3 | 39·95 | 685 |
| இங்கிலாந்து மாத்திரம் | 88·7 | 44·89 | 505 |
| பிரஷ்யா | 113·8 | 39·30 | 345 |
| இத்தாலி | 119·7 | 42·16 | 352 |
| போலந்து | 150·0 | 31·9 | 210 |
| ஸ்வீடன் | 173·1 | 6·10 | 35 |
| பிரான்ஸ் | 212·9 | 41·0 | 195 |
| ஜப்பான் | 260·8 | 85·10 | 330 |
| பாரசீகம் | 628·0 | 10·0 | 20 |

(* திரு. சத்தியநாதன் அறிக்கை, பக்கம் 22)

இந்த அட்டவணையின்படி இந்திய மாகாணங்களிலே விஸ்தீரணத்தில் சென்னை மாகாணமே முதலாவதாய் இருக்கிறது. மொத்த ஜனத் தொகையில் சென்னை மாகாணம் மூன்றாவதாய் இருக்கிறது. ஜன நெருக்கத்திலோ, சென்னை மாகாணம் நான்காவதாய் இருக்கிறது.

ஜனநெருக்கக் கணக்கைக் கவனித்துப்பார்ப்போம். மிகவும் தொழில் விருத்தியடைந்த சில தேசங்களிற்றான் சென்னை மாகாணத்தைவிட அதிகமான மக்கட்செறிவு இருக்கிறது. பல தேசங்களில் சென்னை மாகாணத்தில் சதுர மைல் ஒன்றுக்கு எத்தனை பேர் வசிக்கின்றனரோ, அதேமாதிரி சதுரமைல் ஒன்றுக்கு அத்தனை பேர் வசிக்க இல்லை. ஜனநெருக்கத்தைப்பற்றிக் கணக்கிடும்போது ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது: தொழில் விருத்தி அதிகமாய் இருக்கிற தேசங்களிலே மொத்த வரும்படி அதிகமாய் இருக்கும்; ஜனங்களின் சராசரி வரும்படியும் அதிகமாகவே இருக்கும். ஆகையால், தொழில் செழித்த நாடுகளிலே ஜன நெருக்கம் அதிகமாய் இருந்தால், அதனால் கஷ்டம் ஒன்றும் நேரிடாது. விவசாய நாடுகளிலோ, அப்படி அல்ல. ஜனங்கள் அதிகமாகிற அளவு விவசாய நாடுகளிலே, பொருள் உற்பத்தி அதிகமாக விருத்தி அடைவதில்லை. ஆகையால், விவசாய நாடுகளில் ஜன நெருக்கம் அதிமாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால், சராசரி வருமானம் குறைவென்றே அறிய வேண்டும். சென்னை மாகாணத்திலும் ஜன நெருக்கம் இருக்கிற அளவு பொருள் உற்பத்தியும், சராசரி நல்ல வருமானமும் இல்லை.

இது வரையில் சொல்லிய விஷயங்களாலும், எடுத்துக் காட்டப்பட்ட புள்ளி விவரங்களாலும், ஜனத்

தொகை அதிகமாக ஆக, பொருளும் அதிகம் ஆக வேண்டும்; அல்லாவிட்டால் ஜனங்களின் சராசரி ஆள் வருமானம் குறைந்துவிடும்; தரித்திரம் அதிகமாகும் என்பன ஆதிய விஷயங்களை அறியலாம். எனவே, இந்தியாவில், அதிலும் நமது மாகாணத்தில், ஜனத்தொகை விருத்தியாகிற அளவு பொருள் விருத்தியாகவில்லை என்ற ஒரு காரணமே, விவசாயிகளின் கடனுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று என்பது தெளிவாக விளங்கும். மக்களின் தொகை இம்மாதிரியே விருத்தியாகிக்கொண்டே போனால், வரவர தரித்திரமே தலையெடுக்கும் என்பது உறுதி. **டாக்டர் கில்பர்ட்டு ஸ்லேட்டர்** எழுதி இருப்பதாவது:

" இந்திய ஜனங்களின் பழக்க வழக்கங்கள் மிகவருந்தத் தக்கவை. 'ஒரு பெண்ணுக்குச் சிறு வயதிலேயே விவாகம் செய்யப்பட வேண்டும்; அவள் உடனே, அல்லது கூடிய சீக்கிரம் பிள்ளை பெற வேண்டும்; அந்தப் பெண் செத்தாலொழிய, அல்லது பிள்ளைப்பேறு நின்றாலொழிய, அது வரையில் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்,' என்ற ஒருவித மனப்பான்மை இந்திய ஜனங்களுக்கு இருக்கிற வரையில், இந்தியாவில் செய்யப்படும் எந்தச் சீர்திருத்தமும் பிரயோசனப்படாது." *

நாம் இங்குக் காட்ட விரும்புவது இந்திய ஜனங்கள் தங்கள் பழக்க வழக்கங்களாலேயே கஷ்டங்களை உண்டாக்கிக்கொள்கிறார்கள் என்பதேயாகும். ஜனத்தொகை அதிகமாவதால், விவசாயி கடன்படவேண்டி நேரிடுகிறது என்பதும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.

---

* திரு. சத்தியநாதன் அறிக்கையிலுள்ள மேற்கோள்.

# 4. கடனுக்குரிய காரணங்கள்—II

முன் அதிகாரத்தில் கடன் உண்டான காரணங்களில் ஐந்து காரணங்கள் கூறப்பட்டன. மற்றைய காரணங்களையும் இனிக் கவனிப்போம் :

பயிரிடும் முறைகளைக் கவனிக்கலாம்: இந்திய விவசாயமானது பல ஆயிர வருஷங்கட்கு முன்பு எந்த நிலைமையில் இருந்ததோ அதே நிலைமையிலேதான் இருக்கிறது. நெடுங்காலத்துக்கு முன்னே உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்களே இன்றும் உபயோகப்படுத்தப்படுகின்றன. நிலங்களைச் செவ்வையாக வளம்படுத்துவது இல்லை. தக்க எருப்போடுவதும் இல்லை. மாடுகள் இடும் சாணத்தை எருவாக உபயோகப்படுத்தாமல், வரட்டியாகத் தட்டி அடுப்பெரிக்கும் வழக்கம் மிக முட்டாள்தனமானது. அந்தப் பழக்கத்தால் சிறந்த மாட்டுச் சாணை எருவானது பாழ்படுகிறது. விவசாய முறைகளில் புதியனவாயுள்ள சாஸ்திரீய முறைகள் கையாளப்படுவதில்லை. நல்ல தேர்ந்த விதைகளைத் தெரிந்து எடுத்து விதைப்பதில்லை. களையெடுத்தல் முதலிய காரியங்களைச் செவ்வையாய்ச் செய்வதில்லை. விவசாயத்திற்கு உழைப்பு மிகவும் அவசியம். விவசாயிகளோ, இப்போது போதுமான அளவு உழைப்பதில்லை. பல நிலச் சொந்தக்காரர்கள் தாங்களே பயிர் செய்வதில்லை. நிலத்தைக் குத்தகைக்கே விட்டுவிடுகிறார்கள். சொந்தப் பயிர்ச் செலவாக வைத்துக்கொண்டாலும் பல மிராசுதார்கள் நிலத்தை எட்டிப்

பார்ப்பதும் இல்லை. விவசாய வேலையாட்களும் அவர்களுடைய முன்னோர்களைப்போலக் கஷ்டப்பட்டு வேலை செய்வதில்லை. பல வேலையாட்கள் காலையில் எட்டு மணிக்கு முன் வயலுக்குப் போய்ச் சேருவதில்லை. இடை வேளை ஒய்வு முதலியவை இப்போது மிகவும் அவசியம் ஆய் விட்டன.

புரபசர் R. முக்கர்ஜீ இந்திய விவசாயத்தைப் பற்றிக் கூறுவது, "விவசாயம் மிகப் பழமையான கருவிகளின் உதவியால் நடைபெறுகிறது. விவசாயியோ, மிக்க ஏழ்மை நிலையில் இருக்கிறான். மிகத் தாழ்ந்த முறைகளைக்கொண்டு பயிரிடுவதால் நில வருமானம் மிகக் குறைவாய் இருக்கிறது. உபயோகிக்கும் விதைகளோ, பல உதவியற்றவை; அல்லது நல்ல வன்மை இல்லாதவை," என்பதாம்.

சிலர், 'இந்திய பூமியானது நாளடைவில் தன் சாரத்தை இழந்துவிட்டது; அதனாலேதான் நில வருமானம் குறைந்து வருகின்றது,' என்று எண்ணுகின்றனர். அது சிறிதும் உண்மையன்று. இந்திய நிலமானது தன் சாரத்தை இழக்கவில்லை. இதைப் பற்றி ஆராய்ச்சி செய்த நிபுணர்கள் இந்திய நிலத்தின் தன்மையானது பல ஆயிர வருஷங்கள் சாகுபடி செய்யப்பட்ட போதிலும், விசேஷமாக மாறவில்லை என்றே முடிவு கட்டி இருக்கிறார்கள். எனவே, நிலத்தின் வளம் குறைந்ததால் வரும்படி குறையவில்லை. நிலச் சாகுபடி முறைகள் மிகவும் மோசமாக இருப்பதாலேதான், மற்றைய தேசங்களை விட, நமது தேசத்தில் நில வரும்படி மிகவும் குறைவாய் இருக்கிறது.

## நில விஸ்தீரணமும், நெற்பயிர் அளவும் *

| மாகாணம் | விஸ்தீரணம் (1,000 எக்கர்கள்) 1922-26 | 1927-30 | எக்கர் ஒன்றின் வருமானம் (டன் கணக்கில்) 1922-26 | 27-30 |
|---|---|---|---|---|
| வங்காளம் | 20,793 | 20,604 | ·38 | ·42 |
| பீஹார்ஒரிஸ்ஸா | 14,446 | 14,015 | ·32 | ·39 |
| பர்மா | 11,996 | 12,691 | ·40 | ·38 |
| மத்திய மாகாணம் பீரார் | 5,193 | 5,486 | ·28 | ·29 |
| சென்னை | 10,968 | 11,285 | ·45 | ·47 |
| ஐக்கிய மாகாணங்கள் | 7,178 | 6,902 | ·30 | ·25 |
| இந்தோசைனு | 12,084 | 13,843 | ·47 | ·43 |
| இத்தாலி | 415 | 340 | 1·37 | 1·83 |
| ஜப்பான் | 7,714 | 7,848 | 1·33 | 1·41 |
| ஜாவா, மட்ரா | 8,082 | 8,680 | ·61 | ·60 |
| கொரியா | 3,849 | 3,928 | ·68 | ·72 |
| சையாம் | 6,394 | 6,357 | ·71 | ·67 |

மேலே நெற்பயிர் ஒன்றில் மாத்திரம் இந்தியாவுக்கும், மற்றத் தேசங்களுக்கும் விளைவில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்பது காட்டப்பட்டிருக்கிறது. நெற்பயிர் விளைவில் எவ்வளவு தாரதம்மியம் இருக்கின்றனவோ, அவ்வளவு தாரதம்மியம் மற்ற விளை பொருள்களிலும் இருக்கின்றன.

---

* சென்னை மாகாண நெல் உற்பத்தி வியாபார அறிக்கை 1934-ஆம் வருஷம், பாரா, 2

இந்தியாவில் ஓர் ஏக்கரில் 75 ராத்தல் பஞ்சுதான் விளைகிறது. அமெரிக்காவில் ஏக்கர் ஒன்றுக்கு விளைவு 180 ராத்தல் பஞ்சு. எகிப்தில் ஏக்கர் ஒன்றுக்கு 300 முதல் 400 ராத்தல் வரையில் பஞ்சு விளைகிறது. எனவே, நமது தேசம் எவ்வளவு தாழ்வாய் இருக்கிறதென்பதை நினைத்து வருத்தப்படுங்கள்; விருத்தி செய்ய முயலுங்கள். இந்திய சர்க்கரை விசாரணைக் கமிட்டியார் கூறுவதாவது, ‘இந்தியாவில் ஓர் ஏக்கரில் சர்க்கரை எவ்வளவு உண்டாக்கக் கூடுமோ, அதைப்போலக் கியூபாவில் (Cuba) மூன்று பங்கு விளைகிறது. ஒவ்வோர் ஏக்கரிலும் இந்தியாவை விட ஆறு பங்கு அதிகமாக ஜாவாவில் (Java) கரும்பு விளைகிறது. இந்தியாவைவிட ஏழு பங்கு அதிகமாக ஹாவாவில் (Hawa) விளைகிறது. இதனாலும் இந்தியாவின் நில விளைவு எவ்வளவு குறைவென்பது புலப்படும்.

கீழ்க்காணும் அட்டவணையிலே *ஆள் ஒன்றுக்கு ஒவ்வொரு தேசத்திலும் நில வரும்படி எவ்வளவு வருகிறது என்பது காட்டப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டும் நமது தேச விளைச்சல் குறைவைக் கண்டுகொள்ளலாம்.

| தேசம் | ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரி வரும்படி. | |
|---|---|---|
| பிரிட்டிஷ் இந்தியா | 196 | ரூபாய். |
| ஜப்பான் | 352 | ,, |
| ஜெர்மனி | 680 | ,, |
| அமெரிக்கா (U. S. A.) | 1,931 | ,, |
| கனடா | 2,055 | ,, |
| இங்கிலாந்து | 2,201 | ,, |

* ஸர். ம. விசுவேசுரையா தயாரித்தது.

இது மாத்திரமன்று. புதிய நாகரிகத்தில் ஈடுபட்ட தேசங்கள் விவசாயத்தில் சாஸ்திரீயமான முறைகளைக் கையாளுகின்றன. ஆதலால், விவசாய வரும்படி அதிகம் கிடைக்கிறது. உதாரணமாக, ஜப்பானில் ஒரு மனிதனுக்கு வேண்டிய உணவுப்பொருளை ஓர் ஏக்கராவில் மூன்றில் ஒரு பங்கு நிலத்திலிருந்து விளைவித்துக்கொள்ளுகிறார்கள். நமது தேசத்திலோ, அதே அளவு விளைபொருளை உண்டாக்க ஓர் ஏக்கரில் ஆறில் ஐந்து பங்கு நிலம் $(\frac{5}{6})$ வேண்டி இருக்கிறது.

இவ்வாறாக எவ்விதம் பார்த்தாலும் இந்திய விளைவு மிகக் குறைவு என்பது தெளிவாய் விளங்குகிறது. அதற்குக் காரணம் நம் ஜனங்களின் அறியாமையும், முயற்சிக் குறைவுமே ஆகும். இவ்வாறாகத் தாழ்ந்த நிலைமையில் விவசாயம் செய்வதால் வரும்படி குறைந்து போகிறது; உணவுக்கும் செலவுக்கும் போதுமான வரும்படி விவசாயத்திலிருந்து கிட்டுவதில்லை. எனவே, விவசாயி கடன் வாங்கத் தலைப்படுகிறான். ஆகையாலேதான் விவசாய முறைகள் கடனுக்கு ஆறும் காரணம் எனக் கொள்ளப் பட்டு இருக்கின்றன.

ஏழாம் காரணம், ஆடு மாடுகள் சாதல். விவசாயிக்கு எருதுகளும், எருமைக் கடாக்களும் எவ்வளவு அவசியமானவை என்பதைச் சொல்ல வேண்டுவதே இல்லை. உழவு, எருவிடல் முதலிய வேலைகட்கு அவை மிக அவசியம். ஆடு மாடுகள் இந்தியாவில் செவ்வையாகப் பராமரிக்கப்படுவதில்லை. அவைகள் மேய்வதற்கு மேய்ச்சல் திடல்கள் கிராமங்களில் இல்லை. விவசாயிகள் மாட்டுத் தீனிப் பயிர்களை உண்டாக்கி, மாடுகளை நன்று

தப் போஷிப்பதில்லை. கிராம மாடுகள் எலும்பும் தோலு மாய், நடைப் பிணங்களாய் வருந்தி இருப்பதை நாம் நாள்தோறும் கண்கூடாகப் பார்க்கலாம். பல மாடுகள் போதிய உணவு இல்லாமல் நாளடைவில் இறக்கின்றன. கிராமங்களில் பல மாடுகள் கொள்ளை நோய்களாலேயே அழிகின்றன. அவ்வியாதிகளிற் பல தடுக்கக்கூடியவை. ஆனால், விவசாயிகட்கு வியாதி தடுக்கும் முறைகள் தெரியா, விவசாய இலாக்கா உத்தியோகஸ்தர்களோ, மிகச் சொற்பம். அவர்களுக்கு எல்லா வித வேலைகளையும் கவனிக்க அவகாசம் இல்லை. எனவே, தடுக்கப்படக்கூடிய தொத்து வியாதிகளாலேயே 1929-30, 1933—34-ஆம் வருஷங்களில் 387,017 காளைகள் (**Bovines**) இறந்து போயின எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஆடு மாடுகள் சாவதால் கஷ்டப்படுபவர்கள் விவசாயிகளே. உழவுக்காக வைத்திருக்கும் ஒரு ஜதை மாடு இறந்துவிட்டால், அதற்குப் பதில் மாடுகள் வாங்குவது விவசாயிகட்கு மிகக் கஷ்டமான காரியமாக இருக்கிறது. மாடுகள் வாங்கப் பணத்திற்கு என்ன செய்வதென்று விவசாயி மனந் தடுமாறுகிறான்; எருதுகள் இல்லாமல் எப்படிப் பயிர் செய்வது என்று ஏங்குகிறான். கையில் பணமோ இல்லை. ஆகையால், கடன் கொடுப்பார் யார் என்று தேடுகிறான். அப்போது அவனுக்கு உள்ள கஷ்டத்தில் அவன் கடன் கொடுப்பவன் எவ்வளவு வட்டி கேட்கிறான் என்பதையும், அதைத் திருப்பிக் கொடுக்கத் தன்னால் முடியுமா என்பதையும் கவனிப்பதே இல்லை. மாடுகள் இல்லாமல் எப்படிப் பயிரிடுவது என்ற அந்த ஒரே கவலை அந்த விவசாயியின்மனத்தை

வாட்டுவதால், கண்ணை மூடிக்கொண்டு, கடன் வாங்கி, பிறகு அதைத் திருப்பிக் கொடுக்க முடியாது அவன் அவதிப்படுவது இன்றைக்கும் நடக்கும் ஒரு செய்தியாகும்.

எட்டாம் காரணம், விவசாயிகளின் செலவு அதிகமாய்விட்டதே. சுமார் முப்பது வருஷங்கட்கு முன்னே விவசாயிக்குச் செலவு அதிகம் இல்லை. உணவுப் பொருள்கள் வீட்டிலேயே இருந்தன. உடைக்காகச் செலவு அதிகம் இல்லை. "உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்," என்பது அவர்கள் வாழ்க்கைப் பழக்கம். டாம்பிகச் செலவு அவர்களை நெருங்குவதில்லை. நெல் முதலிய விளை பொருள்களின் விலை அதிகமான போது விவசாயிகள் தங்கள் வாழ்க்கையைச் செலவுள்ளதாகச் செய்துகொண்டார்கள். ஒவ்வொரு விவசாயியினுடைய தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தன. அதற்கு முன் கண்ணால் கூடக் காணாத, கையால்கூடத் தொட்டறியாத சாமான்களெல்லாம் பொழுது விடிந்தால், பொழுது போனால், மிக அவசியமான, இன்றியமையாதனவான, சாமான்களாக மாறி விட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் எளிதில் கிடைக்கக்கூடிய கருவேலங் குச்சி, ஆலம் விழுது இவைகளைக் கொண்டு பல் விளக்காது, தூரிகைகளையும் (**Brushes**), பல்பசைகளையும் (**Tooth Pastes**) கொண்டு பல் விளக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். ஒவ்வொன்றிலும் கிராம வாசிகள் இவ்வாறே செய்யத் தலைப்பட்டார்கள். சில வருஷங்கட்கு முன்புகூடப் பல விவசாயிகள் பழைய சோறு, கம்பு கேழ்வரகுக் கூழ் அல்லது களி இவைகளை அல்லாமல் வேறு எதையும் காலையில் சாப்பிடுவதில்லை. இப்

போதோ, அப்படிச் சாப்பிடுபவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். மிகச் சிறு குக்கிராமத்தில்கூடக் காப்பி, டீக் கடைகள் பெருகிவிட்டன. நீண்ட காலம் உழைக்கக் கூடியதும், சுத்தமாகத் துவைத்துக் கட்டக் கூடியதுமான நல்ல பருத்தித் துணியைப் பல கிராம வாசிகள் வாங்குவதில்லை. மேல் பகட்டு உடைய, பள பளப்பான, துவைக்க முடியாததால் வேர்வை ஊறி ஊறிக் காய்ந்த மணம் பொருந்திய, டபேடா என்ற செயற்கைப் பட்டு முதலியவைகளையே அதிக விலைக்கு வாங்கிக் கைக்காசு நஷ்டமடைகிறார்கள்.

முன்னே எவ்வளவு தூரமானாலும் கிராம வாசிகள் நடந்தே போய்விடுவார்கள். இப்போதோ, சில பர்லாங்கு தூரம் போக வேண்டுமானாலும், ஏதாவது ஒரு வித வாகனம் வேண்டி இருக்கிறது. அதனால் ஆகிற செலவு அவர்கள் மனத்திலே படுவதில்லை.

இவ்வாறு பல வகையாக வாழ்க்கையை மிகவும் டாம்பிகமானதாக விவசாயிகள் செய்துகொண்டுவிட்டார்கள்; செலவையும் அதிகமாக்கிக்கொண்டார்கள்; தேவைகளையும் பெருக்கிக்கொண்டார்கள். அப்படிச் செய்தது சரியா, தப்பா என்பதைப்பற்றி நான் இப்போது விவகாரம் செய்யவில்லை. விலைவாசி அதிகமாக விற்று, விளை பொருள்களை நல்ல விலைக்கு விற்றலால் நிறையப் பணம் வந்தபோது செலவு அதிகமானதால் உண்டாகக்கூடிய கஷ்டத்தை எவரும் உணரவில்லை. விளை பொருள்களின் விலையோ திடீரென விழுந்துபோய் விட்டது. வருவாய் அதனால் குறைந்துவிட்டது. விவசாயிகள் பெருஞ்செலவு செய்து பழகிவிட்டபடியால்,

திடீரெனச் செலவைக் குறைப்பதென்பது முடியாத காரியமாகிவிட்டது. வழக்கப்படி செலவு செய்வதென்ருல், சொந்த வரும்படி போதவில்லை. எனவே, பல விவசாயிகள் கடன் வாங்கிச் செலவு செய்ய ஆரம்பித்து, கடனில் சிக்கிக்கொண்டுள்ளார்கள்.

இது மாத்திரமா! விலைவாசி நன்ருய் இருந்தகாலத்திலே சில விவசாயிகள் ஷோக்குமாப்பிள்ளைகளாக மாறிஞர்கள்; தாசிகள் காலிலும் வேசிகள் காலிலும் போய் விழ ஆரம்பித்தார்கள். அப்போது நில வரும்படி போதாததாகக் காணும் அல்லவா? தம் ஆசைப் பெண்டுகளைத் திருப்தி செய்வதற்காக மேலும் மேலும் கடன் வாங்க ஆரம்பித்தார்கள். விலைவாசி அதிகமாக இருந்தபடியால், நில விலையும் அதிகமாயிற்று. நில மதிப்பு அதிகமாகவே, நிலத்தின் மேலே கடன் கொடுப்பவர்கள் கூசாது கடன் கொடுக்க ஆரம்பித்தார்கள். தாசி லோலர்களான விவசாயிகள், விபசாரத்திற்கு மாத்திரமன்றி, கட்குடி, கஞ்சா அபின் போன்ற மயக்கப் பொருள்களை உண்பது முதலிய துர்க்கருமங்களுக்காகவும் அதிக கடனை அநியாய வட்டிக்கு வாங்கி வாங்கி, சிலர் தம் பொருளையும் உடம்பையும் பிறர் வசமும் நோய் வசமும் ஒப்புவித்துவிட்டு வருந்தி நிற்கின்றனர்.

ஒன்பதாம் காரணம், விவசாயிகள் சுபாசுபக் காரியங்களிலே கண்ணை மூடிக்கொண்டு, கடன்வாங்கி அநியாயமாகச் செலவு செய்வதே ஆகும். நல்ல காரியங்களிலும் தீய காரியங்களிலும் செலவு செய்வதில் தன் தகுதியை விவசாயி நினைத்துப் பார்ப்பதே இல்லை. ஒரு வித முட்டாள்தனமான பெருமை எண்ணமே பல விவசாயிகளின்

மனத்தில் குடிகொண்டு இருக்கிறது. தன் தாய் உயிரோடு இருக்கும்போது வயிறார அன்புடன் சோறு போட்டறியாத பிள்ளை, அந்த அம்மாள் இறந்த பிறகு கோதானம், பூதானம், சுவர்ண தானம் முதலிய தானங்களை விரிவாகச் செய்வான்; இலட்சப் பிராமண போஜனம் செய்து வைப்பான். கலியாணமான பிறகு சாப்பாட்டுக்கு வழியென்ன என்பதை அறியாத ஓர் ஆணுக்கும், ஒன்றும் அறியாத பேதையாகிய ஒரு பெண்ணுக்கும் கலியாண ஏற்பாடு நடக்கும். பல நாட்கட்கு முன்பே உற்றாரும் உறவினரும் வந்து கூடிவிடுவர். அவர்கட்குச் சோறு முதலியவைகளை வடித்துக் கொட்டிக்கொண்டே இருப்பான். வருஷத்தில் நூறு ரூபாய் வருமானம் இல்லாத ஒரு விவசாயி ஒரு கலியாணத்திற்கு 1000 ரூபாய் கடன் வாங்குவான். வட்டிகூட அவனால் திருப்பிக் கொடுக்க முடியாது. அப்படி இருக்கையில், அவன் முதலை எப்படிக் கொடுப்பது? எப்போது கொடுப்பது? "கொட்டு முழக்கோடு அவனைப் பிடித்த சனியன் அவன் கட்டையோடுதான் போகும்."

திரு. சத்தியநாதன் தட் அறிக்கையில் கூறுவதாவது, "விவசாயக் காலத்திலே நாள் ஒன்றுக்கு நான்கு முதல் எட்டணா வரையில் கூலி வாங்குகிற ஒரு கூலியாள், ஒவ்வொரு கலியாணத்திற்குச் சுமார் 100 ரூபாய் செலவிடுகிறான். இரண்டு ஏக்கர் முதல் இருபது ஏக்கர் வரையில் நிலமுள்ள சிறிய மிராசுதார்கள் ஒவ்வொரு விவாகத்திற்கு 200 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையில் செலவு செய்கிறார்கள். 20 முதல் 100 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ள மிராசுதார்களோ, ஆயிரக்கணக்கான ரூபாய்களை விவாகச் செலவுக்காகக் கடன் வாங்குகிறார்கள்," என்பதே.

இதனால் சுபாசுபக் காரியங்கட்காகவும் விவசாயிகள் அதிக கடன் வாங்கி இன்னல் படுகிறார்களென்பது இனிது விளங்கும்.

பத்தாம் காரணம், விவசாயிகளுக்கு இருக்கிற விவகார மோகம். கிராம வாசிகளுக்கு வருஷத்தில் சில மாதங்களிலேதான் வேலை இருக்கிறது. மற்ற நாட்களில் அவர்கள் வீண் பொழுதுதான் போக்குகிறார்கள். திரு. கீட்டிஞ்சு என்பவர் விவசாயிக்கு 180 முதல் 190 நாள்கட்கு மேல் வேலை இல்லை எனக் குறிப்பிட்டிருக்கிறார். அரசாங்க விவசாய விசாரணைக் கமிஷன் இதைப்பற்றிப் பல இடங்களிலும் ஆராய்ச்சி செய்து, ஒவ்வொரு விவசாயிக்கும் வருடத்தில் இரண்டு முதல் நான்கு மாதங்கள் வரையில் ஒரு வேலையும் இல்லையென்று முடிவு செய்திருக்கிறது.

எனவே, விவசாயிகட்குக் கிராமத்தில் பொழுதுபோவதில்லை; படிப்பு முதலிய நல்ல வழிகளில் பொழுதைப் போக்க வசதி கிடைப்பதில்லை. கிடைத்தாலும், அப்படிச் செய்வதில்லை. ஏதாவது ஊர் வம்பு பேசுவது, அல்லது வீண் சண்டைக்குப் போவது முதலிய வழிகளில் பொழுதை அவர்கள் போக்குகிறார்கள். அவர்கள் மனத்துக்கு வேறு வேலை கிடையாதாகையால், மிகச் சிறிய விஷயத்தையும், நினைத்து நினைத்துப் பார்த்துப் பெரியதாக எண்ணிக்கொள்ளுகிறார்கள். அதனாலேயே வீண் விவகாரம் உண்டாகிறது. அவர்கள் ஓர் அற்பக் காரியத்துக்காகவும் பிரமாதமான சண்டை போடுவதை இன்றைக்கும் நாளைக்கும் பார்க்கலாம். எல்லைத் தகராறுகளிலே 5 ரூபாய்கூடப் பெறாத நிலத்துக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சிவில் கிரிமினல் வழக்குகள் மூலமாக அவர்

கள் செலவு செய்வது பார்த்துச் சகிக்கத்தக்கதன்று. இந்தச் செலவுக்கெல்லாம் பணம் எங்கிருந்துவரும்? எல்லாம் கடன் வாங்கித்தான் ஆக வேண்டும்! திரு. சத்தியநாதன் தம் அறிக்கையில் கூறுவதாவது: "கிராமவாசிகள் வழக்கு ஆடுவதற்காக அதிக தூரத்திலுள்ள கோர்ட்டுகட்குப் போக வேண்டி இருக்கிறது. கோர்ட்டுகளிலே அடிக்கடி வழக்கு ஒத்திப்போடுவது சகஜமாகிவிட்டது. ஆகையால், ஒரு வழக்கே பல மாதங்கள், அல்லது சில வருஷங்கள் வரையில் நடக்கும். கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பு ஆனவுடனே, மாமூலாக, மேல் கோர்ட்டுகளிலெல்லாம் அப்பீல் கொடுக்கப்படும். அப்போது பெரிய வக்கீல்களுக்குப் பெரிய பண முடிப்புகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அதுபோக, கோர்ட்டில் உள்ள பியூன் முதல், பல பேருக்கு மாமூல் பணத்தை அழ வேண்டும். பெட்டிஷன் முதலியவைகளை எழுதுபவர்கட்கும் வக்கீல் குமாஸ்தா முதலிய பலருக்கும் பல வகையாகப் பணம் கொடுக்க வேண்டும். இருதரப்புக்கட்சிக்காரர்களையும் சூழ்ந்துகொண்டுகோர்ட்டுக்கும் வீட்டுக்கும் போய்வருகிற கூட்டத்திற்கும் வயிறு புடைக்க உணவு அளிக்க வேண்டும்." இம்மாதிரியாகச் செய்ய வேண்டிய செலவுகள் பலவாகும். இப்படியெல்லாம் செலவு செய்தால் விவசாயி மிஞ்சுவது எப்படி?

மேலும் ஹிந்து, மகம்மதிய சட்டங்கள் மிக நுணுக்கமானவை. அவைகளைச் சரியாக அறிந்துகொள்ள முடியாததும் வழக்குகளுக்குக் காரணமாய் இருக்கிறது.

கட்சிகள் இல்லாத ஊரே இப்போது இல்லை என்று சொல்லலாம். நான்கு வீடுகள் உள்ள ஊரிலும் ஐந்து கட்சிகள் இருக்கும். கட்சிகளும், கட்சித்தலைவர்களும்,

அங்கத்தினரும் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பார்கள். சமீபகாலத்தில் ஊராட்சி, ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு முதலியவைகள் ஏற்பட்டுவிட்டபடியால், அவை சம்பந்தமாக ஒவ்வோர் ஊரிலும் கட்சிகளும் பிரதி கட்சிகளும் நிலைநிற்கின்றன. அநேகமாக கணக்கன் இருக்கிற கட்சிக்கு விரோதமாகப் பட்டா மணியன் இருப்பான். அல்லது பட்டாமணியனுக்கு விரோதமாகக் கணக்கன் இருப்பான். இரு கட்சியையும் தூண்டிவிட்டு, சண்டை செய்து கொள்வதைப் பார்த்துச் சந்தோஷப்படும் பல புண்ணியாத்துமாக்கள் ஒவ்வோர் ஊரிலும் உண்டு. ஆகவே, ஒவ்வோர் ஊரிலும் கட்சிகளும் விவகாரங்களும் ஒன்று பலவாகப் பெருகி, ஊரார் எல்லாருக்கும் கஷ்டம் உண்டாக்குகின்றன. இக்கட்சி, பிரதிக்கட்சி விவகாரங்களால் பல விவசாயிகள் தங்கள் கைப்பொருளை இழந்து, கடனாளிகளும் ஆகின்றார்கள்.

கடந்த இருபது வருஷங்களாக விவசாயிகளில் பலர் தம் காரியங்களைக் கவனியாமல், பல எலெக்ஷன்களிலும் தலையிட்டுக்கொண்டு பண விரயம் செய்கின்றனர்; பட்டத்திற்காகவும், பதவிக்காகவும், பணத்தை வாரி வாரி வீசி, எலெக்ஷன்களில் வெற்றிபெறுகின்றனர். அவர்களில் பலர் தாம் பெற்ற ஸ்தானங்களின் பெயரைக்கூடச் சரியாகச் சொல்லத் தெரியாதவர். அவர்கள் விரும்புவது எல்லாம் பெருமைதான். அதற்காக அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யத் துணிகிறார்கள். எலெக்ஷனில் தோல்வியடைந்தால், அதை அத்துடன் விட்டுவிடுவதில்லை. எதிர் கட்சிக்காரன் செய்த காரியங்கள் எல்லாம் தப்பு என்று வழக்குகள் தொடுத்து,

கோர்ட்டுகளிலும் அளவிறந்த பணத்தைத் தொலைப்பது அவர்கட்கு மகிழ்ச்சி தருகிறது. என்னே அவர்கள் புத்தி இன்மை! இவை போன்ற பல காரணங்களாலும் விவசாயிகள் கடன்பட்டு மேலும்மேலும் வருந்துகிறார்கள் என்பது கண்கூடான காட்சி.

பதினோராவது காரணம், விவசாயிகட்கு நிலவரும்படியை அல்லாமல் வேறு வரும்படி இல்லாதிருப்பதாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் தொடங்குவதற்கு முன்பு இந்திய மக்களின் பொருளாதார நிலைமை நன்றாக இருந்ததென்றே சொல்லலாம். இந்தியா முழுவதிலும் விவசாயிகள் ஏதாவதுஒரு கைத்தொழிலைச் செய்துவந்தார்கள். ஓய்வு நேரங்களில் நூல் நூற்பது, அல்லது ஏதாவது ஒரு சிறு கைத்தொழில் செய்வதென்பது சர்வ சாதாரண வழக்கமாய் இருந்தது. இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனிக்காரர் நாடுகள் பிடித்துக்கொண்டிருந்த காலத்திலே, சுமார் 1800-ஆம் வருஷத்திலே **டாக்டர் புக்கனன்** என்பவரை, இந்திய பொருளாதார நிலைமையைக்கண்டுஅறிந்துகொண்டு வரும்படியாக வடஇந்தியா தென்னிந்தியா முழுவதும் அனுப்பினர். எல்லாவிடங்களிலும் பெண்களும் ஆண்களும் பல கைத்தொழில்களைச் செய்துகொண்டிருந்ததை அவர் குறிப்பிட்டிருக்கிறார். எல்லா ஜாதிப் பெண்டிரும், ஏழையரானாலும் பணக்காரராக இருந்தாலும், நூல் நூற்றனர் என்று அவருடைய அறிக்கையில் காணப்படுகிறது. வேறு பல கைத்தொழில்களும் இந்தியாவில் செழித்து வந்தன. அந்தக் காலத்திலே பல சரக்குகள் இந்தியாவிலிருந்து வெளி நாடுகட்கு அனுப்பப்பட்டன. இந்தியா தான் கைத்தொழில்களில் சிறந்த நாடாய் இருந்

தது. 1811, 1812, 1813-ஆம் வருஷங்களிலும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு மாத்திரம் முறையே 114,640 பவுன்கள், 107,306 பவுன்கள், 108,824 பவுன்கள் பெறுமானமுள்ள பருத்தி நூல் துணிகள் மட்டும் அனுப்பப்பட்டன. ஆங்கிலேய வியாபாரிகள் தங்கள் நாட்டுத் தொழில்கள் விருத்தி அடைய வேண்டுமென்று இந்திய கைத்தொழில்களைப் பல விதத்திலும் அழித்து ஒழித்துவிட்டார்கள்.

ஆகையால், விவசாயிகளின் இந்த ஒரு வருவாயும் இழக்கப்பட்டது. விவசாயிகள் ஒரு சிறு தொழிலும் செய்யாமல் இருந்துவிட்டார்கள். நிலம் ஒன்றில் மட்டும் வரும் வரும்படியையே சதம் என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டார்கள். அது இப்போது பெருங்கஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. டாக்டர் ஸ்லேட்டர் என்பவரின் கணக்குப்படி சென்னை மாகாண விவசாயிக்கு வருஷத்தில் ஆறு மாதத்தில் வேலையே இல்லை. அந்த ஆறு மாதங்களில் ஏதாவது சிறு குடிசைக் கைத்தொழிலைச் செய்தால் பொருள் முட்டுப்பாடு அதிகமாக இராது. ஆனால், கிராம வாசிகள் அப்படி ஒன்றும் செய்வதில்லை. ஜப்பானிலே இருபது இலட்சம் விவசாயிகள் பட்டுப் பூச்சி வளர்ப்பதாகிய தொழிலைச் செய்து, விசேஷ வரும்படி அடைகிறார்களாம். எல்லாத் தேசத்திலும் கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல் முதலிய சிறுகைத்தொழில்களைத் தங்கள் ஒய்வு காலங்களிலே விவசாயிகள் செய்து வருகிறார்கள்.

நமது நாட்டிலே நம் விவசாயிகள் அப்படி ஒன்றும் செய்யாததால், உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்

கும் மூட்டுப்படுகிறார்கள். விவசாயத் தொழிலை அன்றி வேறு தொழிலைச் செய்யாமையாலேதான் விவசாயிகள் கடன் வாங்க நேரிடுகிறது. எனவே, விவசாயிகளுக்கென ஒரு சிறு கைத்தொழில் பழக்கத்திலில்லாதது விவசாயிகளின் கடனுக்குக் காரணமாய் இருக்கிறது.

பன்னிரண்டாம் காரணம், அரசாங்கத்தார் நில வரி வாங்கும் முறையும் காலமும் ஆகும்.

கிழக்கிந்திய கம்பெனியார் நிலவரி எவ்வளவு வசூலிக்கலாம் என்பதை நிச்சயம் செய்த போது தமக்கு அதிக வரி கிடைக்க வேண்டும் என்ற ஒரு விஷயத்தையே மனத்தில் வைத்திருந்தனர். ஆதலால், அவர்கள் நில வரி வசூலிக்கும் முறையில் பல மாறுதல்களை உண்டாக்கினார்கள். 1800 வருஷத்திற்கு முன்னே இந்தியாவில் இப்போதுள்ள ஜமீந்தார்களைப் போன்ற ஜமீந்தார்கள் இல்லை. அந்தக்காலத்து ஜமீந்தார்கள் அரசாங்கத்துக்கு நில வரி வசூல் செய்து கொடுத்தவர்கள். அவர்கள் நிலத்துக்குச் சொந்தக்காரர்களல்ல. ஆங்கிலேயர், ஜமீந்தார்களை நிலத்துக்குச் சொந்தக்காரர்களென்று தவறாக நினைத்துவிட்டனர். அதனாலுண்டான கோளாறுதான் இப்போதுள்ள ஜமீந்தார் சிக்கலாகும்.

முதலில் ஜமீந்தார்களோடு நில வரி ஏற்பாடு செய்த போது, சாசுவதமான நில வரியை விதித்தார்கள். நிலவரி எக்காரணத்தைக் கொண்டும் மாறாது. பிறகு சென்னை மாகாணத்தில் நிலவரி ஏற்பாடு செய்தபோது ரயத்துவாரி ஏற்பாட்டைப் புகுத்தினார்கள். சாசுவதமான நில வரி ஏற்பாட்டை விட்டுவிட்டு, அடிக்கடி மாற்றக்கூடிய நிலவரி முறையை இங்கே நிறுவினார்கள். முதலில் விதிக்கப்பட்ட

வரி மிகவும் கடுமையாய் இருந்தது. நாளடைவில் அந்த வரிக்கொடுமை குறைக்கப்பட்டது. இப்போது முப்பது வருஷங்கட்கு ஒரு தரம் நில வரியை நிர்ணயம் செய்கிறார்கள். வரி நிர்ணயிக்கும் சமயத்திற்கு முந்திய இருபது வருஷங்களில் விளை பொருள்களின் சராசரி விலையைக் கொண்டு, வாரத்தின் **(Rent)** மதிப்பை அரசினர் போடுகிறார்கள். அந்த வார மதிப்பின் பாதியை வரியாக வசூல் செய்கிறார்கள்.

முன் காலத்திலே ஜமீந்தாரி முறையும் இல்லை; ரயத்துவாரி முறையும் இல்லை. கிராம மக்கள் கிராமப் பஞ்சாயத்துகளின் மூலம் கிராம விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுவார்கள். கிராம வாசி எவனுக்கும் நிலத்தில் தனிப்பட்ட உரிமைகள் இல்லை. கிராம நிலத்தில் யார் யார் எவ்வளவு நிலத்தைப் பயிரிடுவது என்பதை ஊர்ச்சபையே தீர்மானிக்கும். அரசாங்கமும் தனித் தனியாக ஒவ்வொரு விவசாயியிடமும் வரி வசூல் செய்வதில்லை. அரசாங்கம் ஒவ்வொரு கிராமத்துக்கும் மொத்த வரி இவ்வளவு என்று தீர்மானம் செய்துவிடும். பிறகு அந்த ஊரார்க்குள் அந்த வரியை எப்படிப் பங்கிட்டுக் கொண்டு யார் யார் எவ்வளவு கொடுப்பதென்று தீர்மானம் செய்துகொள்வர். மொத்த வரியையும் வசூல் செய்து அரசாங்கத்தாருக்கு அனுப்புவது அந்த ஊர்ச்சபையின் கடமையாகும்.

பெரும்பாலும் விளை பொருளில் ஒரு பகுதியே வரிக்கெனக் கொடுக்கப்பட்டது. பணமாக வரி கட்டுவது அந்தக் காலத்தில் வழக்கத்திலில்லை. நெல் விளைந்தால் நெல்லும், கொள் விளைந்தால் கொள்ளும், இம்மாதிரி எந்த விளை

பொருள் விளைந்ததோ அதில் ஒரு பங்கு அரசனுக்குக் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பெரிய சௌகரியம் இருந்தது. இப்போதுள்ள நில வரி ஏற்பாட்டிலே, விளை பொருளின் விலை கூடினாலும் குறைந்தாலும், ஒரே அளவு வரியையே கொடுக்க வேண்டி இருக்கிறது. விலை வாசி குறைந்த காலத்தில் இவ்வேற்பாடு கஷ்டமாயிருக்கிறது. நெல் கலம் 4 ரூபாய் விற்ற காலத்தில் வரியை எளிதில் கொடுக்க முடிந்தது. கலம் முக்கால் ரூபாய் ஆன போது அதே வரியை அவ்வளவு எளிதில் கொடுக்க முடியுமா? இந்தக் குறைபாடு அந்த நாளைய வரி ஏற்பாட்டில் இல்லை. கூடவிளைந்தாலும் சரி; குறைய விளையினும் சரி; குறைந்த விலையாய் இருந்தாலும் சரி; அதிக விலையாய் இருந்தாலும் சரி—மொத்த விளை பொருளில் ஒரு பங்குபோட்டு, அந்த விளை பொருளையே வரிக்கெனக் கொடுத்து வந்த வழக்கம் மிகவும் சௌகரியமாய் இருந்தது.

அந்தக் காலத்து வரி, கணக்கில் மிக அதிகமாகக் காணப்படலாம். ஆனால், வரியை முழுதும் வசூல் செய்வதென்பது அக்கால அரசாங்கங்கட்கு முடியாத காரியம். அக்காரணத்தால், விதிக்கப்பட்ட வரியில் முழுவதுங்கூட யாரும் கொடுப்பதில்லை. வரி வசூலில் இப்போதுள்ள கடுமை விதிகளும் முறைகளும் இல்லை.

இப்போது வரி வசூல் பண ரூபமாக நடைபெறுகிறது. வரிப்பணத்தில் ஒரு பைசாவும் பாக்கி வைத்துக் கொள்ள முடியாது. வரி கொடாவிட்டால், நிர்ப்பந்தங்கள் மிக அதிகமாய் இருக்கின்றன. இக்காலத்தில் வரி கொடுக்கத் தவறியவனுடைய நிலத்தை அரசாங்கத்தார்

வலிய எடுத்துக்கொண்டு, ஏலத்தில் விற்றுப் பணத்தை எடுத்துக்கொள்வார் அல்லவா ?

மேலும், வரி வசூலிக்கும் காலமும் மிக அசௌகரிய மானது. பயிர் வயலில் இருக்கும்போதே வாய்தாப் பணம் கொடுக்க வேண்டி இருக்கிறது. அப்போது விவ சாயியின் கையில் ஒரு காசும் இராது. ஆகையால், ஒரு வியாபாரியினிடத்திலோ, மார்வாரியிடத்திலோ, செட்டி யார் இடத்திலோ கடன் வாங்கியே நில வரி கட்டவேண்டி இருக்கிறது. வியாபாரியிடத்தில் கடன் வாங்கினால், அவன் மாசூல் கைக்கு வந்ததும், விளைபொருளைத் தன் னிடந்தான் விற்க வேண்டும்; இன்ன விலைக்குத்தான் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொண்டுதான் பணத்தைக் கடனாகக் கொடுக்கிறான். விளை பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு வியாபாரியிடம் கொடுக்கவேண்டி நேரிடுகிறது. அல்லாமல், லேவாதேவிக் காரர்களோ, கடுமையான வட்டி வாங்கிவிடுகிறார்கள். எப் படியானாலும் சரி, விவசாயி நில வரி கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் கடன் வாங்க நேரிடுகிறது.

விளை பொருள் வீட்டுக்கு வந்து சேர்ந்த சில காலத் திற்குப் பிறகு வரி கொடுக்கும் ஏற்பாடு இருந்தால், இந் தக் கஷ்டம் உண்டாகாது. அப்போதும் மேல் நாடு களில் இருப்பதேபோல, விளை பொருள்களைச் சேமித்து வைக்கும் பொதுப் பண்ட சாலைகள் இருந்தால், விவசாயி தன் விளைபொருளை அங்கே வைத்து, அதன்மேலே கடன் வாங்கிக்கொள்ளலாம். பிறகு விலை ஏறி விற்கும்போது அப்பொருள்களை விற்றுக் கடனைத் தீர்த்துவிடலாம். இந்த முறையும் இதுகாறும் இந்தியாவில் ஏற்படவில்லை.

இத்தகைய காரணங்களால், கிராம விவசாயி வரி கொடுப்பதற்கும் கடன் வாங்க வேண்டி நேரிடுகிறது. முக்கியமாகக் கடந்த ஏழெட்டு வருஷங்களாக விலை வாசி மிகவும் குறைந்துவிட்டபடியால், நிலத்தின் வருவாயிலிருந்து நில வரியைக் கொடுப்பதும் துர்லபமாகிவிட்டது. சில வருஷங்களாகப் பல விவசாயிகள் மேலும் மேலும் கடன் வாங்கித்தான் வரி கொடுக்கிறார்கள். எனவே, நில வரியின் அளவும் முறையும் மிக ஏற்ற வகையாக இல்லாமையால் கடன் உண்டாவதற்கு வழி ஏற்படுகிறது.

பதின்மூன்றும் காரணம், விவசாயிகளுக்கும் பொருள் வாங்குபவர்களுக்கும் மத்தியிலே அநேக தரகர்களும் வியாபாரிகளும் இருத்தலாகும். அவர்கள் விவசாயி தன் விளை பொருளை நல்ல விலைக்கு விற்று முழு இலாபத்தையும் அடைய முடியாதபடி செய்கிறார்கள். வியாபாரிகள், விவசாயியின் பணமுடைச் சமயத்திலே கொஞ்சம் பணத்தைக் கடன் கொடுக்க முன்வருகிறார்கள். மேலே சொன்னபடி அந்த விவசாயியின் விளை பொருள்களைத் தாங்களே குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள். விவசாயிக்குப் படிப்பு அறிவு முதலியவை இல்லை. ஆகையால், உலக மார்க்கட்டிலே விளை பொருள்களின் விலை அப்போதைக்கப்போது எவ்வளவு உள்ளது என்பதை அவன் அறிந்து கொள்ள முடியாது; வியாபாரியின் சொல்லையே நம்ப வேண்டும். வியாபாரிகள் பண்டங்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்வதுமாத்திரமன்றி, இன்னும் எத்தனையோ சூதுகளும் இதில் செய்கிறார்கள். வியாபாரிகள் தாங்கள் வாங்கிய பொருளின் முழு விலையையும் கொடுப்பதில்லை.

தருமத்துக்கு என்றும், கமிஷன் என்றும், வேறு பல காரணத்துக்கு என்றும் ரூபாய்க்குக் காலணு, அரையணு பிடித்துவிடுகிறார்கள். சில வியாபாரிகள் தப்பான, கள்ள அளவைக்கருவிகளை உபயோகிக்கிறார்கள். மரக்கால், படி முதலியவைகளுக்குச் சர்க்காரார் முத்திரை போடுகின்றனர். இருந்தாலும் அந்த முத்திரை போட்ட அளவுகளே உபயோகப்படுத்தப்படுகின்றன என்று சொல்லுவதற்கில்லை. மரக்கால் படி முதலியவைகளிலே மேல்பக்கத்தில் தான் சர்க்கார் முத்திரை இருக்கிறது. சர்க்கார் முத்திரை போட்ட பிறகு மேல் பக்கத்தை அப்படியே வைத்துவிட்டு, கீழ்ப்பக்கத்தைப் பெரிதாகவோ, அல்லது சிறியதாகவோ, தங்கள் சௌகரியப்படி செய்துகொண்டு, ஏமாற்றுந் தொழிலுக்கு உதவியான கருவியாகச் சில வியாபாரிகள் வைத்துக்கொள்ளுகிறார்கள். மேலும், இந்தியாவில் எத்தனையோ விதமான அளவுக் கருவிகளும், நிறுத்தல் கருவிகளும் இருக்கின்றன. ஆகையால், நாணயப் பொறுப்பு இல்லாத வியாபாரி, சுலபமாக விவசாயியை ஏமாற்றிவிடலாம். திரு. சத்தியநாதன், வியாபாரிகள் தப்பு அளவுகள் மூலம் வாங்குவதால், விவசாயிகளுக்கு நூற்றுக்கு 5 முதல் 30 வீதம் வரையில் நஷ்டம் உண்டாகிறது என்று எழுதி இருக்கிறார். அதாவது 100 ரூபாய்க்கு விற்பனை செய்தால், விவசாயியின் கைக்கு வருவது 70 முதல் 95 ரூபாய் வரையிலேதான். அந்த முழு நூறு ரூபாயும் அவன் கையை எட்டிப்பார்க்காது. ஏனென்றால் வியாபாரிகள் தப்பான அளவுகள் வைத்து ஏமாற்றுகிறார்கள்.

பல ஊர்களில் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய மளிகைச் சாமான்களைச் சிறு வியாபாரிகளிடமிருந்தோ,

கடைக்காரனிடமிருந்தோ, கடனாக வாங்கவேண்டி இருக்கிறது. எல்லா மாதங்களிலும் கைக்காசு கொடுத்து அவர்கள் சாமான்களை வாங்குவதற்கு முடிவதில்லை. கடனாகச் சாமான்களை வாங்குவதால், கடைக்காரன் கொடுக்கும் மோசமான சாமான்களையே வாங்கிக்கொள்ள வேண்டி இருக்கிறது. விலையும் மிக அதிகமாகவே கொடுக்கவேண்டி இருக்கிறது.

மேலே சொன்ன விஷயங்களை விளக்குவதற்குத் திரு. சத்தியநாதன் அறிக்கையிலுள்ள சில உதாரணங்களை எடுத்துக் காட்டுவோம்:

"நீலகிரி முதலிய பல இடங்களில் விவசாயி தனக்கு வேண்டிய பொருள்களைக்கடனாகவே வாங்குகிறான். நீலகிரியிலுள்ளவர்கள் மேட்டுப்பாளைய வியாபாரிகளிடமிருந்து வேண்டியவைகளைக் கடனாக வாங்குகிறார்கள். 12 ரூபாய் விலையுள்ள ரசாயன எரு (**Chemical manure**) மூட்டை ஒன்றை மூன்று மாதத்தவணையில் பணம் கொடுப்பதாகக் கடனுக்கு வாங்கினால், அதற்காக வட்டி 2 ரூபாய் கொடுக்க வேண்டி இருக்கிறது. 12 ரூபாய்க்கு மூன்று மாதத்திற்கு 2 ரூபாய் வட்டி கொடுத்தால், அது நூற்றுக்கு வருஷத்துக்கு 67 வீதம் வட்டி ஆகிறதல்லவா? என்ன கடு வட்டி பாருங்கள்! மளிகை வியாபாரிகள் சாமானைக் கடனாகக் கொடுக்கிறார்கள். அதற்காக உருளைக் கிழங்குகளைத் தங்களுக்கேதான் விற்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொள்ளுகிறார்கள். அரிசியைக் கடனாகக் கொடுத்தால், ஒரு ரூபாய் அரிசிக்கு, ஒரு படி வீதம் வட்டிக்காக என்று முதலிலேயே எடுத்துக்கொண்டு, பாக்கி அரிசியையே கடனாகக் கொடுக்கிறார்கள். அப்படிக்

கொடுத்துங்கூட, அந்தகடன் ரூபாய்க்கு நூற்றுக்கு 24 வீதம் வட்டி வாங்கிவிடுகிறார்கள். அந்த விவசாயிகள் தங்கள் உருளைக்கிழங்குப் பயிரையெல்லாம் அந்த வியாபாரிகளிடமே விற்க வேண்டும். அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து பொருள்களைத் தங்கள் வண்டியில், வண்டிச் சத்தமில்லாது ஏற்றிக்கொண்டு வந்து, வியாபாரியிடம் சேர்க்க வேண்டும். அவன் 200 பவுண்டு மூட்டைக்கு 3—8—0 அல்லது 4 ரூபாய் கொடுப்பான். அதைச் சென்னைக்கு அந்த வியாபாரி அனுப்பி மூட்டை ஒன்றுக்கு, எச்செலவும் போக, குறைந்தது நான்கு ரூபாயாவது இலாபம் அடைகிறான். அந்த விவசாயிகளே விதைக்காக உருளைக்கிழங்கு வாங்கவேண்டுமானால், மூட்டை 8 ரூபாய் வீதம் வாங்க வேண்டுமே ஒழிய, 3—8—0 அல்லது 4 ரூபாய்க்கு வியாபாரியிடம் வாங்க முடியாது.

இப்படிக் குறைந்த விலைக்கு வாங்கும்போதும் அந்த வியாபாரிகள் உடனே பணத்தைக் கொடுப்பதில்லை. "பிறகு வா," என்று சொல்லி அனுப்பிவிடுவார்கள்; பிறகு வந்ததும், 'உருளைக்கிழங்கு அழுகிப்போனதால் சேதாரம் இவ்வளவு; ஆகையால், முழுப்பணமும் கொடுக்கமாட்டேன்,' என்று குறைத்துக் கொடுப்பது முதலியவை வழக்கமாக இருக்கின்றன.

தென் கன்னடம் முதலிய இடங்களிலோ, வியாபாரிகள் 6 ரூபாய்க்கு விவசாயியிடமிருந்து புகையிலையை வாங்கி, பிறகு அதைச் சுமார் 20 ரூபாய்க்கு விற்று இலாபம் அடைகிறார்கள்.

காலஞ் சென்ற திரு. **T**. ஆதிநாராயண செட்டியார் இதைப்பற்றி மிக விரமாக எழுதியிருக்கிறார்: "ஒரு

மார்க்கெட்டில் ஒரு மூட்டை வெங்காயத்தைப் பல சமயங்களில் 4 அணுவுக்குத்தான் விற்க முடிகிறது. 150 பழமுள்ள வாழைத்தாறு ஒன்று சில சமயங்களில் $2\frac{1}{2}$ அணுவுக்குக்கூட விற்கிறது. இப்படியெல்லாம் குறைந்த விலைக்கு விற்பதன் காரணம், விவசாயிகள் புதிய விற்பனை முறைகளைக் கையாளாததுதான். மேலும், விவசாயிகள் அப்போதைக்கப்போது இருக்கும் விலையைத் தெரிந்துகொள்ள ஏற்ற வசதியும் இல்லை,'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுகாறும் கூறியவிஷயங்களால் விவசாயியானவன் தான் உண்டாக்கும் விளைபொருளுக்கு முழு விலையையும் பெறுதபடி, வர்த்தகர்களும் தரகர்களும் குறுக்கிட்டுக் கஷ்டத்தை உண்டாக்குகின்றார்களென்பதும், பல விதமாக விவசாயிகளை அவர்கள் ஏமாற்றுகிறார்களென்பதும், அதனாலேதான் விவசாயிகள் கடன் வாங்கவும் நேர்கிறதென்பதும் விளக்கமாகத் தெரிகின்றன அல்லவா? ஆகவே, இதுவும் விவசாயிகளின் கடனுக்கு ஒரு காரணம் எனக் கூறலாம்.

பதினன்காம் காரணம், முன்னோர்களின் கடன். விவசாயிகளில் பலர் தாம் கடன் வாங்கிக் கஷ்டப்படுவதல்லாமல், பரம்பரைப் பாத்தியமாக வந்த கடனாலும் மிகவும் இடர்ப்படுகின்றனர். இந்த விஷயத்தில் இந்திய மக்கள் மற்றைய தேச மக்களைப் போன்றவர்களல்ல. தங்களின் முன்னோர், சொத்து ஒன்றையும் வைக்காமல், கடன்மாத்திரம் வைத்துவிட்டுப் போனால், மேல்நாட்டினர் தாம் அந்தக் கடனைத் தர வேண்டியதில்லை என்று கூறிவிடுவர். இந்தியரோ, அப்படியில்லை. தம் மூதாதை

கள் கடன் ஒன்றைமாத்திரமே வைத்துவிட்டுப் போயிருந்தாலும் அந்தக் கடனைத் தாம் கொடுப்பது தம்முடைய முக்கிய கடமை என எண்ணுவர். அரும்பாடு பட்டாவது அக்கடனைக் கொடுத்துத் தீர்த்துவிட முயற்சிசெய்வார்கள். ஆகையால், பல விவசாயிகட்குப் பரம்பரையாகக் கடன் வந்துகொண்டே இருக்கிறது.

மேலும், இந்தியர்கள் தங்களால் கடனைத் திருப்பிக் கொடுத்து மீட்டுக்கொள்ள முடியாவிட்டால், மற்றத் தேசத்தாரைப் போல இன்சால்வென்ஸி கொடுக்கமாட்டார்கள். அப்படி இன்சால்வெண்டு ஆகிறதென்பது தங்கள் குடும்பத்துக்கே ஒரு பெரிய மாசு அல்லது கறை என்று எண்ணும் உயர்ந்த குணத்தை உடையவர்கள் நம் தேச மக்கள். தக்காணக் கலக விசாரணைக் கமிஷனர்கள் 1875-ஆம் வருஷத்தில் விசாரணை நிகழ்த்தியபோது பெரும்பாலான விவசாயிகளுக்கு உள்ள கடன் பரம்பரையாக வந்த கடனே என்று கூறி இருக்கிறார்கள். அரசாங்க விவசாயக் கமிஷன், இந்திய விவசாயிகள் கடனில் பிறந்து, கடனிலேயே உழன்று, கடனிலேயே இறந்து, தங்கள் சந்ததியாருக்கும் கடன் வைத்துவிட்டுப்போகும் தற்கால நிலைமை அடியோடு மாற வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இந்திய விவசாயிகள் பரம்பரையாக வருகிற கடனாலேயும் கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரியலாம்.

பதினைந்தாம் காரணம், மக்களின் மனப்பான்மையே. நம் மக்கள் கடந்த பல வருஷங்களாகக் கஷ்டப்பட்டு வந்திருக்கிறார்கள். நீண்ட கால அவதியால் நம் ஜனங்களிடத்திலே உற்சாகம், ஊக்கம் முதலியவை

அழிந்துவிட்டன. கஷ்டத்திலேயே பிறந்து கஷ்டத்திலேயே வளர்ந்து கஷ்டத்திலேயே இறப்பவர்கட்கு ஆண்மை அஞ்சாநெஞ்சு இவைகள் எப்படி இருக்கமுடியும்? போதிய அறிவு, பயிற்சி முதலியவை இல்லாமையால் அவர்களின் சிறு முயற்சியும் பயன் இல்லாமல் போய்விடுகிறது. அதனால், அவர்கள் மனம் முறிந்து போய்விடுகிறார்கள். தங்கள் கஷ்டத்துக்கு வேறு காரணத்தை அறியாமல், தம் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொள்ள முயலுகிறார்கள். அப்போதுதான், "எல்லாம் தலையில் எழுத்துப்படிதான் நடக்கும்," என்றும், "மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்," என்றும் போலி வேதாந்தம் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். போலி வேதாந்தம் பேச ஆரம்பிப்பது அவர்கள் அழிவுக்குக் காரணமாகிவிடுகிறது. உழைப்பும் குறைந்துவிடுகிறது. நமது நாட்டில் ஒரு பெரியவர் சொல்லி இருப்பதாவது, "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ; கழப்பின் வாராக் கையறவு உளவோ?" என்பது. அதாவது, உழைப்பினால் கைக்குக் கிட்டாதது என்ன? உழைப்பு இல்லாவிட்டால் எல்லாக் கஷ்டமும் வரும் என்பதாம். அந்த உண்மை நம் தேச மக்களின் மனத்தில் பதியவில்லை. அவர்கள் மனப்பான்மையே அடியோடு மாற வேண்டும். அவர்கள் முயற்சிகள் பல செய்ய வேண்டும். அது இல்லாதபோது அவர்கள் கஷ்டப்பட்டு அவதிப்பட்டு, கடன் வாங்குவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

மேலும் விவசாயிகளில் பலரின் வேலைத்திறமையும் குறைவாய் இருக்கிறது. அதற்குக் காரணம், பல விவசாயிகட்குப் போதிய உணவு கிடைக்காமையாகும்.

அதல்லாமலும், வருஷா வருஷம் பல விவசாயிகள் நோய் வாய்ப்படுகிறார்கள். போதிய வைத்திய உதவி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. சில நோய்கள் நாளடைவிலேயே விவசாயிகளின் சத்தையெல்லாம் உறிஞ்சிவிடுகின்றன. உடம்பில் வலுக் குறையக்குறைய விவசாயி வேலைத்திறம் இல்லாதவன் ஆகிறான். அதனால், பொருள் உற்பத்தியின் அளவும் குறைந்துவிடுகிறது.

இது வரையில் விவசாயிகள் கடன்பட்ட காரணங்கள் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. சில காரணங்கள் விவசாயியின் அறியாமையாலும், உழைப்பு முயற்சி இல்லாமையாலும் ஏற்படுபவை. சில வேறு காரணங்கள் இயற்கையாகவே இந்தியாவில் காணப்படுபவை. இக் காரணங்களை நாம் தெரிந்துகொள்வதன் மூலம் கடனின் மூலத்தை அறிந்து கடனாகிய படர் கொடியை வேரோடு அறுத்து எறிந்துவிடலாமல்லவா?

## 5. கடன் கொடுத்து வாங்குவோர்
### (லேவாதேவிக்காரர்)

இந்தியாவின் பல பக்கங்களிலும் கடன் கொடுத்து வாங்குவதையே தொழிலாக வைத்துக்கொண்டு இருக்கும் ஜாதியார் இருக்கின்றனர். ஆனால், சென்னை மாகாணத்திலே லேவாதேவி செய்வதிலேயே பிழைக்கிற ஜாதியார் இல்லை. சில இடங்களில் மார்வாரிகள் (மார்வாடி, **Marwari**) கடன் கொடுத்து வாங்குவதையே தொழிலாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் தனைக்கடை வைத்தே அதிக இலாபம் சம்பாதிப்பவர்கள்.

மார்வாரிகள் வெள்ளி தங்க நகைகளின் பேரிலும், பித்தளை செம்பு பாத்திரங்கள் பேரிலும், அல்லது விற்று விடக்கூடிய துணி முதலிய எந்தச் சாமான்கள் பேரிலும் கடன் கொடுக்கிறார்கள். அவர்கள் வாங்குவது அநியாய வட்டியாகும். சிலரிடத்தில் ரூபாய் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஓர் அணா அல்லது இரண்டணா வட்டிகூட வாங்குவது அவர்கட்குச் சகஜம். தொழிற்சாலைகளிலுள்ள கூலிகள், ரயில்வே தொழிலாளிகள், சிறு உத்தியோகஸ்தர் இவர்களிடமெல்லாம் நூற்றுக்கு 20 முதல் 150 வரையில் வட்டி வாங்கும் கொடியவர்கள் அந்த மார்வாரிகள். பிராமிசரி நோட்டின்மேல் பணம் கொடுக்க வேண்டி இருந்தால், 100 ரூபாய்க்கு நோட்டு எழுதி வாங்கிக்கொண்டு 50 ரூபாய்தான் கொடுப்பார்கள்.

அதே தொழிலாக உள்ள மற்றச் சாதியார்களும், மார்வாரிகளுக்கு எவ்விதத்திலும் பின் வாங்குவதில்லை.

பெரும்பாலும் கிராமங்களிலிருக்கிற லேவாதேவிக்காரர் அதையே தொழிலாக உடையவர் அல்லர். அவர்களில் அநேகர் வியாபாரிகள். பலர் சிறு மிராசுதார்கள். தெலுங்கு தேசத்திலும், தமிழ் நாட்டில் சிற்சில பகுதிகளிலும், 'கோமுட்டிகள்' என்ற ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் தொழில், வியாபாரமும் கடன் கொடுத்து வாங்குவதும் ஆகும். வட ஆற்காடு ஜில்லாவில் வாணியச் செட்டிமார்கள் (செக்கார்) வியாபாரமும் பணம் கொடுத்தல் வாங்கலும் செய்துகொண்டு இருக்கிறார்கள். மலையாளப் பக்கத்திலே 'மாப்பிள்ளைமார்' என்ற முகமதிய ஜாதியார் சிறு வியாபாரிகளா

கவும் லேவாதேவிக்காரர்களாகவும் இருக்கிறார்கள். வேறு பல இடங்களில் 'லப்பைகள்' என்ற துலுக்க ஜாதியார் வர்த்தகம், கொடுக்கல் வாங்கல் இரண்டையும் செய்து வருகின்றனர்.

சாதாரணமாக ஒரு விவசாயி செலவுக்கு முடைப்பட்டால் ஒரு சிறு தொகையைக் கடனாக வாங்குகிறான். கடன் கொடுத்தவன் தன் கணக்கில் அந்தத் தொகையை எழுதிக்கொண்டு கடன் வாங்கியவன் கையெழுத்தை வாங்கிக்கொள்ளுகிறான். 'வட்டிக்குத் தூக்கமில்லை,' என்று சாதாரணமாக ஜனங்கள் சொல்லுவார்கள். அதேமாதிரி அந்தச் சிறு தொகையாக வாங்கப்பட்ட கடன் சீக்கிரத்தில் திருப்பிக் கொடுக்கப்படாவிட்டால், தினேதினே வளர்ந்து பெரிய தொகை ஆகிவிடுகிறது. தொகை பெரிதானதும் கடன் கொடுத்தவன் பணத்தைக் கேட்கிறான். விவசாயிக்கு அதைக் கொடுக்க முடிவதில்லை. அதனால், மொத்தத் தொகைக்கும் ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுக்கிறான். கடன் வாங்கினவனுக்கும் கடன் கொடுத்தவனுக்கும் இடையிலே ஓர் ஏற்பாடு உண்டாகிறது. கடன் வாங்கிய பணத்துக்கு நூற்றுக்கு 12 வீதம் வட்டி கொடுப்பதாக ஏற்பாடு இருந்தால், பிராமிசரி நோட்டில் நூற்றுக்கு 24 வீதம் வட்டி என்று எழுதப்பட்டிருக்கும். கோர்ட்டுக்குப் போகாதவழி, கடன் வாங்கியவன் பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிட்டால் 12 வீதம் வட்டியுடன் கொடுத்துவிடலாம்; இல்லாவிட்டால் கடன் கொடுத்தவன் கோர்ட்டுக்குப் போய்த் தாவா செய்துவிட்டால், கோர்ட்டில் நோட்டில் கண்டு எழுதி இருக்கிற 24 வீதம் வட்டியே வசூல் செய்யப்படும்.

நாளடைவில் பிராமிசரி நோட்டிலுள்ள கடன், வட்டி சேரச்சேர அதிகமாகிக்கொண்டே போகும். பிராமிசரி நோட்டிற்கு 3 வருஷ காலாவதி. ஆகையால், மூன்று வது வருஷக்கடைசியில் கடன் கொடுத்தவன் வட்டியும் முதலும் கூடிய பெரிய தொகையை விவசாயியிடம் கேட்பான். அவனால் கொடுக்க முடியாது. எனவே, அன்றைய வரையில் ஆன வட்டி முதல்தொகை அத்தனையையும் முதலாக வைத்து, மறுபடியும் பிராமிசரி நோட்டு எழுதி வாங்குவான். இவ்வாறே சில வருஷங்கள் போன பிறகு தொகை மிகவும் அதிகம் ஆகிவிடும். அப்போது நிலத்தின் மேல் பெந்தகம் எழுதி வாங்குவான். பிறகு சில காலத்திற்கெல்லாம் கடன் தொகை வட்டியும் முதலுமாக அதிகம் ஆனதும், கோர்ட்டில் கேஸ் போட்டு, நிலத்தை ஏலத்துக்குக் கொண்டுவந்து, குறைந்த விலைக்கு ஏலம்போட்டு, அநேகமாகக் கடன் கொடுத்தவன் தனக்கே அந்த நிலத்தை எடுத்துக்கொள்வான். இது வருஷா வருஷம் கிராமங்களில் நடக்கும் ஒரு காரியமாகும். இதனாலேதான் கிராமங்களில், "ஒருவனுடைய நிலத்தை நீ வாங்கவேண்டுமானால், அவனுக்குக் கொஞ்சம் கடன் கொடுத்துவை," என்னும் பழமொழி வழங்குகிறது.

கிராமங்களில் சாதாரணமாக முதல் பெந்தகத்திற்கு வட்டி நூற்றுக்கு 12 வீதம் வாங்குகிறார்கள். தங்க நகைகளுக்கும், மற்ற நகைகளுக்கும் இன்னும் அதிகமான வட்டியும் வாங்குகிறார்கள். தானியம் முதலியவைகளை வட்டிக்கு வாங்கி, தானியமாகவே கொடுப்பதானால், அந்த வட்டி நூற்றுக்கு 25 முதல் 50 விகிதம் வரையில்

சாதாரணமாக இருக்கிறது. சில சமயம் தானிய வட்டி நூற்றுக்கு நூருகக்கூடக் கொடுக்கிருர்கள்.

இவ்விஷயத்தைப்பற்றிப் பெரிதும் ஆராய்ந்த திரு. சத்தியநாதன், தாம் கண்ட ஓர் உதாரணத்தைத் தம் அறிக்கையில் கூறி இருக்கிருர். அது வருமாறு: ஒரு விவசாயிக்கு 6 ஏக்கர் நஞ்சை நிலம் இருந்தது. அதன் மதிப்பு 1920-ஆம் வருஷத்திலே ரூபாய் 6,000. அவன் 1922-ஆம் வருஷத்திலே புரோநோட்டு எழுதிக்கொடுத்து ஒரு மிராசுதாரிடம் 1000 ரூபாய் கடன் வாங்கினன். அந்தப் புரோநோட்டிலே 1000 ரூபாய் முதல் என்றும், 3 வருஷத் தவணையில் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவதென்றும், வட்டி நூற்றுக்கு 18 வீதம் என்றும், வருஷா வருஷம் வட்டியைக் கொடுத்துத் தீர்த்து விடுவதென்றும் எழுதப்பட்டிருந்தது. கடன் கொடுத்தவன், வட்டியை அந்த விவசாயி சரியாகக் கட்டிவந்தால், நூற்றுக்குப் பன்னிரண்டு வீதம் வட்டி வாங்கிக்கொள்வதாக ஒத்துக்கொண்டான். 18 வீத வட்டி தண்ட வட்டி; கோர்ட்டுக்குப் போக நேரிட்டால், அப்போது சொல்லும் வட்டி. புரோநோட்டில் கண்ட 1000 ரூபாயில் வட்டிக்காக ஒரு வருஷத்திற்கு 120 வீதம் அந்தத் தொகையை எடுத்துக்கொண்டு, மிச்சம் 880 ரூபாயைத்தான் லேவாதேவிக்காரன் விவசாயியின் கையில் கொடுத்தான். ஆனல், வருஷா வருஷம் வட்டி மாத்திரம் 1000 ரூபாய்க்கே கணக்கிடப்பட்டது. விலை வாசி சரியாக இருந்தபடியாலும், நல்ல விளைவு இருந்தபடியாலும், 1928-ஆம் வருஷம் வரையில் அந்த விவசாயி வட்டியைத் தவருமல் கட்டி வந்தான். 1928-ஆம் வருஷம் வரையில் வட்டியாக

மாத்திரம் அவன் கட்டியது ரூபாய் 720. அந்த நோட்டின் முதல் 1000 ரூபாய்க்கு, 1925-ஆம் வருஷத்தில் ஒரு முறையும் 1928-ஆம் வருஷத்தில் ஒருமுறையும் நோட்டெழுதப்பட்டது. 1928ல் விலை வீழ்ச்சி தொடங்கியது. விவசாயிக்கு வட்டி கட்ட முடியவில்லை. அதிலிருந்து அபராத வட்டியாகிய நூற்றுக்குப் பதினெட்டு வட்டி அமுலுக்கு வந்தது. வட்டி கட்ட முடியவில்லையாதலால் 1931-ஆம் வருஷத்தில் அந்த விவசாயி, முதல் 1000 ரூபாயும் வட்டி 540 ரூபாயும் சேர்த்து 1540 ரூபாய்க்கு நோட்டு எழுதிக்கொடுத்தான். 1934-ஆம் வருஷத்தில் அந்தத் தொகை 2370 ஆகிவிட்டது (1540 முதல்; அதற்கு 18 வீதம் மூன்று வருஷ வட்டி 830 ரூபாய்; ஆக 2370 ரூபாய்). அந்தச் சமயத்தில் கடன் கொடுத்தவன் விவசாயியைக் கடனுக்காக நெருக்க ஆரம்பித்தான். அவனுக்குக் கொடுக்க முடியவில்லை. உடனே கடன் கொடுத்தவன் 2370 ரூபாய்க்குக் கோர்ட்டில் கேஸ் போட்டான். விவசாயிக்கு எதிர் வழக்காட முடியவில்லை. அதற்காக வேறே செலவுசெய்ய அவன் கையில் காசு இல்லை. நோட்டில் எழுதியிருக்கும் வட்டி 18 வீதம் ஆனாலும், கொடுப்பதாக ஏற்படுத்திக்கொண்ட வட்டி 12 வீதந்தான் என்று கோர்ட்டில் சொன்னால், தஸ்தாவேஜில் கண்டிருப்பதைத்தான் கோர்ட்டார் எடுத்துக்கொள்வார்களேயொழிய, அவன் வார்த்தையை நம்பமாட்டார்கள். ஆகையால், அந்த விவசாயி சும்மா இருந்துவிட்டான். அந்த வழக்கு எக்ஸ்பார்ட்டியாக **(Ex - parte)** தீர்ப்பாகிவிட்டது. கோர்ட்டுச்செலவு வட்டி பாக்கி எல்லாம் சேர்ந்து மொத்தம் 2500 ரூபாய்க்கு டிகிரி ஆயிற்று. அந்த விவசாயிக்குக்

கையில் பணம் இல்லை. நிலமும் ஒரு வீடுந்தான் இருந்தன. 1928ல் 6000 ரூபாய் பெறுமானமுள்ள அந்த வீட்டையும் நிலத்தையும் 1934ல் 3000 ரூபாய்க்குக்கூட வாங்குவார் இல்லை. ஆகையால், விவசாயிக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. கடன் கொடுத்தவன் நிலத்தையும் வீட்டையும் கோர்ட்டு ஏலத்துக்குக் கொண்டுவந்தான். வேறே வாங்குவார் இல்லாமையாலே தனக்கு வர வேண்டிய பணத்துக்கு (அதாவது 2500 ரூபாய்க்கு)க் கடன்கொடுத்தவன் தானே அவைகளை வாங்கிக்கொண்டான். சில வருஷங்களுக்கு முன்பு 6000 ரூபாய்ச் சொத்து வைத்திருந்தவன், 880 ரூபாய் கடன் வாங்கியபடியால், சொத்து முதலியவைகளை இழந்து, தரித்திரன் ஆகிவிட்டான். அது மாத்திரமன்றி, வட்டியாகக் கட்டிய 720 ரூபாயும் போய் விட்டது.

இதேமாதிரி பல துக்ககரமான வழக்குகளைப்பற்றி எழுதிக்கொண்டே போகலாம். ஏனெனில், கோர்ட்டுக்கு வருகிற சிவில் கேஸ்களில் பல இதைப் போன்றவையே. நாள்தோறும் நிலச்சுவான்களாக இருந்தவர்கள் கடனுக்காகத் தங்கள் சொத்தையெல்லாம் இழந்து அவதிப்படுவதைக் கண்டு நம் பாரத மாதா கண்ணீர் விட்டுக் கலங்குகிறாள்.

இன்னுமொரு கடன் வழக்கை உதாரணமாகக் கொடுப்போம்: சில வருஷங்களுக்கு முன்பு ஒரு விவசாயி புரோநோட்டின்மேல் 40 ரூபாய் கடன் வாங்கினான். அவனால் வட்டியும் முதலும் கொடுக்க முடியவில்லை. மூன்று வருஷத்துக்கு ஒரு தரம் வட்டியையும் முதலையும் சேர்ததுச் சேர்த்து நோட்டு எழுதிக்கொடுத்து

வந்ததில் சில வருஷங்கள் கழித்து ரூ. 400க்கு நோட்டு எழுதிக் கொடுக்கும்படி நேரிட்டுவிட்டது. ரூ. 400க்கு நோட்டு எழுதிக் கொடுத்ததுதான் தாமதம். கடன் கொடுத்தவன் நோட்டைக் கோர்ட்டில் தாவா செய்து, டிகிரி வாங்கி, நிலத்தை ஏலத்துக்குக் கொண்டுவந்து, தன் கடனுக்காக அந்த நிலம் முழுவதையும் அபகரித்துக் கொண்டான். அவன் 40 ரூபாய் கடன் வாங்கி, 1000 ரூபாய் நிலத்தைச் சில வருஷங்களில் இழந்துவிட்டான்.

மேலே காட்டப்பட்ட இரண்டு உதாரணங்களையும் எடுத்துக்கொள்ளுங்கள். ஒருவன் 880 ரூபாய்க் கடனுக்காக, 6000 ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தை இழக்கிறான்; அதுவும் 720 ரூபாய் பணம் கட்டிய பிறகு. இரண்டாமவன் 40 ரூபாய் கடன் வாங்கிவிட்டு 1000 ரூபாய் மதிப்பிருந்த நிலத்தை இழக்கிறான். இதைப் போலப் பல கொடுமைகளால் தங்கள் பொருள்களை இழந்து, கடனால் விழுங்கப்பட்டு, கஷ்டப்படும் விவசாயிகட்குச் சிறிது உதவி செய்வதே காங்கிரஸ் கட்சியினர் சட்டத்தின் நோக்கமாகும். இதைப்பற்றி யாராவது குறை கூற முடியுமா?

வியாபாரிகளும் தரகர்களும் சிறு தொகைகளை விவசாயிகளுக்குக் கடனைக் கொடுக்கிறார்கள். அதற்காக வாங்கும் வட்டி மிகவும் அதிகம். சாகுபடிக் காலத்தில் பெரும்பாலும் தானிய ரூபமாகவே இந்தவிதக் கடன் கொடுக்கப்படுகிறது. கடப்பை ஜில்லாவில் தானியங்களை வட்டிக்குக் கொடுத்துத் தானியமாகவே திரும்ப வட்டி முதலுடன் வாங்கும் வழக்கத்திற்கு, 'நாகு' (**Nagu**) என்பது பெயர். சாதாரணமாக ஒரு கலம் நெல்லை வட்டிக்கு

வாங்கினால், அதைத் திருப்பிக் கொடுக்கும்போது $1\frac{1}{2}$ கலம் அல்லது 2 கலமாகக் கொடுக்க வேண்டும். அதாவது, அந்த நெல் கடனுக்கு 50 அல்லது 100 சத விகிதம் வட்டி கட்ட வேண்டும். இந்தக் கடன்கள், சாதாரணமாக 3 முதல் 12 மாதங்களில் கொடுத்துவிட வேண்டும் என்ற தவணையின் பேரிலே கொடுக்கப்படுகின்றன. நெல் களத்திலேயே, அல்லது அறுவடை வீடுவந்துசேர்ந்ததும், அந்தக் கடன் வசூலிக்கப்படுகிறது. கடன் கொடுத்தவர் அந்தக் கடனைத் தண்டல் செய்யச் சில ஆட்களைக் கடன் வாங்கியவன் வீட்டிற்கு அனுப்புவர். அவர்கள் வாயிற்படியில் உட்கார்ந்துவிடுவார்கள். கடன் திருப்பிக் கொடுக்கிற வரையில் அந்த வீட்டினர் எதுவும் செய்ய முடியாதபடி மறைத்துவிடுவார்கள். கடனைத் திருப்பிக் கொடுக்க எத்தனை நாள் தாமதமாகிறதோ, அத்தனை நாளைக்கும் அந்தக் கிங்கரர்களுக்குச் சாப்பாட்டிற்காகப் 'படி' கொடுக்க வேண்டும். இவ்விதத் துன்பங்கட்குப் பயந்து, அந்த ஏழை விவசாயிகள் தாங்கள் அரிதில் தேடிய உணவுப் பொருள்களை அவர்கட்குக் கொடுத்துவிட்டு, துன்பப்படுகிறார்கள்.

இந்த வழக்கம் தஞ்சை திருச்சி முதலிய செழிப்பான ஜில்லாக்களிலும் இருக்கிறது. கடன் கொடுத்தவர்கள் சில இடங்களில் கடனைத் தண்டி வருவதற்காகக் கடன் வாங்கியவர்கள் வீட்டுக்குப் பிராமணரை அனுப்பி வைக்கிறார்கள். அப்படி அனுப்பப்பட்ட பிராமணர்கள் கடன் வாங்கியவன் வீட்டு வாயிற்படியில் போய்ப் பட்டினி கிடப்பார்கள். பிராமணர் தங்கள் வீட்டு வாயிலில் பட்டினி கிடப்பதால் தங்களுக்குப் பெரிய பாவம் வந்து சம்பவிக்

கும் என்று எண்ணுகிற அந்த மூடப் பாமர மக்கள், கடனைச் சீக்கிரம் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள்.

இப்படிக் கஷ்டப்படுத்திக் கடனைத் திருப்பி வாங்கும் வழக்கம், நம் நாட்டில் பழமையானதுதான். இதைப் பற்றிப் புரபசர் தாமஸ் தம் நூலில் எழுதி இருப்பதாவது: "கடனாளியிடம் போய்த் 'தாரணை' நிற்கும் பழக்கம் வடநாட்டில் பண்டைக்காலத்தில் நிலவி வந்தது. பணம் செல்லாகும் வரையிலும் கடன் கொடுத்தவன் உண்ணாதிருப்பதும், கடன் பெற்றவன் வீட்டில் அடுப்பு மூட்டவொட்டாது தடுப்பதும், கடனாளியைப் புறத்தே போகவொட்டாது மறிப்பதும் முற்காலத்தில் நிகழ்ந்தன. இன்னும் இப்பழக்கங்கள் சில இடங்களில் வழங்கி வருகின்றன. 'தாரணை' நிற்பதற்காகப் பார்ப்பன மக்களையே சவுக்கார்கள் அமைத்திருந்தார்கள். பார்ப்பனர் பட்டினி கிடக்கப் பார்ப்பது பெரும்பாதகமென்னும் பழைய நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்." (திரு. நடராஜன் மொழி பெயர்ப்பு, 'வேளாண்மைக் கடன்,' பக்கம், 16)

விவசாய வேலையாட்கள் தாங்கள் வாங்கும் கடனுக்கு ஈடாக ஒன்றையும் கொடுக்க முடிவதில்லை. அதற்காக வாங்கும் கடனுக்குத் தங்களையே அடகாகக்கொடுக்கிறார்கள். விசாகப்பட்டினம் ஏஜென்ஸிப் பக்கங்களில் 'கோதி' (**Gothi**) என்னும் ஒரு முறை இருக்கிறது. அதன்படி ஒரு விவசாயத் தொழிலாளி கடன் வாங்க வேண்டியிருந்தால், கடன் கொடுத்தவர்கட்குத் தானும் தன் குடும்பத்தாரும் சில வருஷங்கள் வேலை செய்வதென்று கட்டுப்படுத்திக்கொள்ளுகிறான். அப்படி அவன் வேலை செய்ய வேண்டியகாலம் பல வருஷங்களாக இருக்க

லாம். இது போன்ற முறைகள் மாகாணத்தின் பல பக்கங்களிலும் பல வேறு விதமாய் இருக்கின்றன. இது 'அடிமைத்' தனத்தில் ஒரு வகைப் பொருளாதார அடிமைத்தனம்; அல்லது கடன் வாங்கிய அடிமைத்தனம். தமிழ் நாடுகளில் பண்ணையாட்கள் பெரும்பாலும் அடிமைகளே. கலியாணத்துக்கோ அல்லது வேறு காரியத்துக்கோ சில ரூபாய்களைக் கடனாகத் தன் எஜமானனிடமிருந்து ஒரு வேலையாள் கடன் வாங்கிவிட்டால், அந்த எஜமானனைவிட்டு வேறு எஜமானனிடமாவது, அவ்வூரிலிருந்து வேறு ஊருக்காவது அந்த ஆள் போக முடியாது. திருட்டுத்தனமாகப் போய்விட்டாலும், அவன் இருக்கிற இடம் தெரிந்தால், கடன் கொடுத்த எஜமானன் தன் ஆட்களைக் கொண்டு கட்டாயப்படுத்தி, அவனைத் தன்னிடம் அழைத்து வந்துவிடுவது வழக்கம். ஒரு கால் அந்த ஆள் வேறு யாரிடமாவது அந்தக் கடன் தொகையைத் திருப்பி வாங்கிக் கொடுத்துவிட்டால், முதல் எஜமானனிடமிருந்து விடுதலை அடையலாம்; ஆனால், மறு எஜமானனுக்கு அடிமையாக வேண்டும். இதைப்பற்றி டாக்டர் தாமஸ் அவர்கள் எழுதி இருப்பது இங்கே எடுத்துக் காட்டத் தக்கது.

"கிரேக்கர் நாட்டிலும், உரோமானியர் நாட்டிலும் நிலவி இருந்த அடிமைத்தனம் ஒருவாறு இந்தியாவிலும் வழங்கி வந்தது. பீகார் ஒரிஸ்ஸா முதலிய பக்கங்களிலும், சென்னை மாகாணத்திலும், உழவராய்த் தாழ்த்தப்பட்ட வகுப்பார் இன்றும் கடனால் அடிமைக் குழியில் ஆழ்ந்து கிடக்கின்றனர். ஒரு கலியாணத்திற்காகவோ, இழவுக்காகவோ சிறு தொகை அவர்கள் கடன் பெறு

வார்கள். பின்னர் அந்தக் கடனைத் திருப்பிக்கொடுத்து முடிக்கும் வரையில் கடனாளி முதலாளிக்குப் பணி செய்ய வேண்டும். ஏதோ சிறிது உணவைக் கடனாளிக்கு முதலாளி கொடுப்பது: தகுந்த கூலியொன்றும் கிட்டாத நிலையில் அவன் கடனை அடைப்பது செய்தற்கரியதோர் செயல் அன்றோ? எனவே, வாழ் நாள் முழுவதும் அவன் அடிமையாய்க் கிடக்கிறான். இத்தகைய கொடுக்கல் வாங்கல் முறைகள் சட்டத்துக்கு மாறுபட்டவையென இப்பொழுது விளம்பரம் செய்திருப்பினும், ஏழைக் கடனாளிக்கு வழக்கு மன்றங்களிற் சென்று நீதி பெற ஆற்றலுண்டோ? எனவே, அவன் நிலை சிறிதேனும் மாறுபட்டதில்லை. சென்னையில் தனியான தடை முறைகள் இல்லை. எனினும், கடனாளி எழுதிக் கொடுக்கும் பிராமிசரி நோட்டு முதலாளிக்குப் போதிய ஒரு படையே ஆகும். முதலாளி அடிமையாயமைய இசையாத கடனாளியின் மேல் வழக்குத் தொடுத்து அவனைச் சிறைக்கோட்டம் சேர்க்கிறான். இத்தகைய மானக்கேடான நிலை வந்து எய்தா வண்ணம் கடனாளி எவ்வித எதிர்ப்புமின்றி, முதலாளியின் ஆணைக்கு அடங்கிவிடுகிறான். மத்திய மாகாணங்களிலும் இவ்வழக்கங்கள் காணப்படுகின்றன. அங்குக் கடன் பெற்றவனோ, அன்றி அவன் குடும்ப உறுப்பினருள் ஒருவனோ ஒரு குறிப்பிட்ட கால அளவு கடன் **கொடுத்தவனுக்காகப்** பணி செய்ய வேண்டும்.''*

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் ஏற்பட்ட சட்ட வசதி கோர்ட்டு வசதி முதலியவைகளால், கடன் கொடுத்தவர்கள் எளிதில் நிலத்தை அபகரித்துக்கொள்ள வசதி உண்

---

* வேளாண்மைக் கடன், பக்கம், 27

டாயிற்று. அதனல், விவசாயிகளிடமிருநது நிலமானது நாள்தோறும் லேவாதேவிக்காரர்களிடம் போகத் தொடங்கியது. பம்பாய், பஞ்சாப்பு மாகாணங்களிலே தான் அதிகமாக நிலமானது விவசாயிகளிடமிருந்து லேவாதேவிக்காரர்களிடம் போய்விட்டது. இது மாதிரி கடனுக்காக நிலத்தை இழந்த விவசாயி, மருண்டு, தன் ஆதரவற்ற நிலேயில், துன்பமான நிலேயில், லேவாதேவிக் காரர்களேக் கொலே செய்வதற்குக்கூடத் துணிகிறுன். இம் மாதிரியான ஒரு மனநிலே உண்டானதுதான் சில கலகங் கட்குக் காரணமாகும். 1855ல் நிகழ்ந்த சோந்தால் கலகம் (**Sonthal rebellion**), 1874-ஆம் வருஷ டெக் கான் கலகங்கள் (**Deccan riots**), 1891ல் நடந்தஆஜ்மீர் கலகங்கள் (**Ajmere riots**) முதலியவைகட்குக் காரணம் கடன்பட்ட விவசாயிகள் லேவாதேவிக்காரர்கள் மேல் கொண்ட வஞ்சமேயாகும்.

எனவே, கடன் கொடுத்தவருக்கும் கடன் வாங்கிய வர்கட்கும் இடையே மனக்கசப்பு உண்டாகி, அதனல் கலகங்களும் உண்டாவதற்கு இடம் இருக்கிறது. கடன் வாங்குபவர்களும் ஏதாவது ஆதாயமான செலவுக்காகக் கடன் வாங்கினுர்களானல், கடன் கொடுப்பவர்களும் நியாயமான குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பார் களானல், இந்தக் கோளாறுகள் உண்டாகமாட்டா.

மேலும், லேவாதேவிக்காரர்கள் தங்கள் தொழிலில் கையாளும் முறைகள் செவ்வையானவைகளாய் இல்லே. இதைப்பற்றித் திரு. சத்தியநாதன் எழுதி இருப்பதா வது: கடனளியான விவசாயி கடன் கொடுத்தவனிடம் பணம் கொடுக்கும்போது கொடுத்த தொகைக்கு இரசீ

தைப் பெற முடியாது. கொடுத்த தொகையைப் பிராமிசரி நோட்டிலேயே செல்லு வைக்கலாம். அப்படிச் செல்லு வைப்பதுகூடக் கடன் கொடுத்தவன் தயவு இருந்தாற்றான் செய்ய முடியும். இல்லாவிட்டால், அது கூட இல்லை. பணத்தில் செல்லுபடியான தொகைகளைத் தனியே முதலுக்காகச் செல்லுபடி இவ்வளவு, வட்டிக்காக இவ்வளவு என்று கணக்கிட்டு வைக்கும் வழக்கம் இல்லவே இல்லை. கள்ளங் கபடமற்ற மிகவும் நல்ல குணமுள்ள விவசாயி, 'வெளுத்ததெல்லாம் பால்,' என்று கடன் கொடுத்தவன் சொல்வதையே நம்பி இருக்கிறான். ஒரு குறித்த காலத்தில் அவனைக் கேட்டால், தான் கொடுக்கவேண்டிய பணம் இவ்வளவு என்று அவனால் சொல்ல முடியாது. அவன் தான் முதலில் வாங்கிய தொகை இவ்வளவு என்று சொல்லுவான்; எவ்வளவு வட்டி என்பதையும் சொல்லுவான். வருஷா வருஷம் எவ்வளவு வட்டி செலுத்த வேண்டி இருக்கிறதென்று கணக்குப் போடுவதற்குக்கூட அவனுக்குத் தெரிவதில்லை. எவ்வெப்போது எவ்வெவ்வளவு பணம் கொடுத்தான் என்பதை அவன் மறந்துவிடுகிறான். கடன் கொடுத்தவர்கள் தினசரிக் குறிப்புத் தான் வைத்திருக்கிறார்கள்; தங்களிடம் கடன் வாங்கிய ஒவ்வொருவனுக்கும் தனித்தனி கணக்குப் போட்டு, கொடுக்க வேண்டிய தொகை, வந்த தொகை, வட்டி இவைகளைத் தனித்தனியே குறித்து வைப்பதில்லை. புரோநோட்டுகளின் பின் பக்கங்களிலேதான் வரவுத் தொகைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கூடச் சரியாகக் குறிக்கப்படுகின்றன என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. எவ்வளவு பாக்கியென்பது கடைசியாகக்

கணக்குப் போடுகிற போது அல்லது கோர்ட்டுக்குப் போகிறபோது தவிர, மற்றச் சமயங்களில் பார்க்கப்படு வதில்லை. 'கடன் பட்டவன் கடனாளியாகவே இருந்து தீர வேண்டும்' என்பது உண்மையாய் இருக்கிறது என்ப தாம்.*

லேவாதேவிக்காரர் வாங்குகிற வட்டியும் மிகவும் அநியாய வட்டியாய் இருக்கிறது. 1930-ஆம் வருஷத் தில் விசாரணை செய்த சென்னை மாகாண பாங்கி விசா ரணைக் கமிட்டியார் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்ட வணையில், வட்டியானது பல இடங்களிலும் எப்படி வாங் கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள் :

விவசாயிகள் சென்னை மாகாணத்திலுள்ள பல ஜில் லாக்களிலும் எவ்வளவு எவ்வளவு வட்டி கொடுக்கிறார்க ளென்பது பின் வருமாறு :

| ஜில்லாவின் பெயர் | ஒரே தொழிலாக உள்ள லேவாதேவிக் காரர் வாங்கும் வட்டி | மற்றவர் வாங்கும் வட்டி<br>நூற்றுக்கு | | தானிய வட்டி |
|---|---|---|---|---|
| கஞ்சம் | 12முதல்25 சத விகிதம் | 12 முதல் 24வரையில் | | |
| விசாகப்பட்டினம் | 12—36 | 12—24 | | .... |
| கிழக்குக் கோதாவரி | 18—25 | 12—18 | ,, | .... |
| மேற்குக் கோதாவரி | ........... | 12—36 | ,, | 50 |

* திரு. சத்தியநாதன் அறிக்கை, பக்கம், 15.

| | | | | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணா | 15—30 | 9—24 | ,, | 50 |
| குண்டூர் | 12—49½ | 9—15 | ,, | .... |
| நெல்லூர் | 15—24 | 12—24 | ,, | 25—37½ |
| கடப்பை | ........... | 9—18 | | 25—50 |
| கர்னூல் | ........... | 7½-12 | | 20—25 |
| பெல்லாரி | 12—24 | 12—24 | | .... |
| அனந்தப்பூர் | 9—36 | 12—36 | | .... |
| (ஆனால் பொதுவாக 12—18 வரை) | | | | |
| சென்னை | 15—36 | 9—24 | | .... |
| செங்கற்பட்டு | 12—50 | 12—24 | | 24—48 |
| வட ஆற்காடு | 12—48 | 9—24 | | 36—50 |
| சித்தூர் | 15—36 | 9—18 | | .... |
| தென் ஆற்காடு | 12—37½ | 12—18 | | .... |
| தஞ்சாவூர் | 24—36 | 9—24 | | 24—33 |
| திருச்சி | 12—24 | 12—18 | | .... |
| மதுரை | 12—24 | 12—24 | | .... |
| இராமநாதபுரம் | 12—36 | 12—18 | | 36—50 |
| திருநெல்வேலி | 18—36 | 12—24 | | .... |
| சேலம் | 12—36 | 12—40 | | .... |
| கோயமுத்தூர் | 12—36 | 12—24 | | 50 |
| நீலகிரி | 18—20 | .... | | .... |
| மலையாளம் | 18—30 | 12—24 | | .... |
| தென் கன்னடம் | 12—18 | 12½-25 | | .... |

மற்ற எல்லாப் பாகங்களிலும் இருக்கிற வட்டி நிலைமையைப்பற்றி டாக்டர் தாமஸ் பின் வருமாறு எழுதி இருக்கிறார்: "சென்னையிலும் பம்பாயில் சில பாகங்களிலும் சாதாரண நடப்பு வட்டி 12 சதம் என்றிருந்தும், கைம்மாற்றாகக் கடன் கொடுக்கிறவர் 18 முதல் 24 சதம் வரை வட்டி பெறுகிறார்கள். ஆனால், பீகார், ஒரிஸ்ஸா, ஸிந்து, அஸ்ஸாம் என்ற இந்த மாகாணங்களிலே, சாதாரணமாக 25 முதல் 50 சதம் வரையிலும், ஐக்கிய மாகாணத்தில் 18 முதல் 37 சதம் வரையிலும் வட்டி கொடுக்க வேண்டும். இந்தியாவில் பல பாகங்களிலும் குத்தகைக்காரர்களும் கூலியாட்களும் தக்க அடைமானமில்லாமல் 75 முதல் 300சதம் வரையும் வட்டி கொடுத்தே கடன் பெறுகின்றார்கள். நெல்வட்டி எவ்விடத்தும் 25 சதத்தில் குறைந்ததாய் இல்லை. ஆனால், பல இடங்களில் 50 சதமும், 100 சதமும் வட்டி ஏற்பட்டுள்ளது."

பிரபல காங்கிரஸ் வாதியான திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் **M., L., A.,** அவர்கள் வட்டி நிலைமையைப் பற்றி எழுதுவதாவது: "கடன்களுக்காகக் குடியானவர்கள் கொடுக்க வேண்டிய அதிக வட்டியே கடன்களின் தொகையை அதிகப்படுத்துகிறது. வங்காளத்தில் வட்டி 100க்கு 10 முதல் 37½ வரை குடியானவர்கள் கொடுத்து வருகிறார்கள். பம்பாய் மாகாணத்தில் 100க்கு 12 முதல் 25 வரையும், பீகார் ஒரிஸ்ஸா மாகாணங்களில் 37½ வரையும், மத்திய மாகாணத்தில் 12 முதல் 24 வரையும் இம்மாதிரி பலவாறாக அதிக வட்டிக்கே குடியானவர்கள் கடன் வாங்குகிறார்கள். சென்னை மாகாணத்தில் சாதாரணமாக 100க்கு 12 முதல் 24 வரை வட்டிக்

குக் குடியானவர்கட்குப் பணம் கிடைக்கிறது. சிற்சில சமயங்களில் வட்டி 36 அல்லது 48 வரையும் உயருவதுண்டு. அடைமானங்களின் பேரில் குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கும். முதல்தரமான சொத்துக்களை அடைமானம் வைத்தால், சாதாரணமாக 100க்கு 12 வட்டிக்குப் பணம் கிடைக்கும். ஆனால், வேறு பிராமிசரி நோட்டுகளின் பேரிலுள்ள கடன்களுக்கு வட்டி அதிகம்.''

இதுவரையில் கூறிய விஷயங்களிலிருந்து இந்தியாவிலுள்ள கடுவட்டி முறையினாலும், லேவாதேவிக்காரர்களின் கொடுமையான செய்கைகளாலும், விவசாயிகள் தங்கள் அறியாமையாலும், கடன் வாய்ப்பட்டுக் கஷ்டப்படுகிறார்களென்பது நன்றாகத் தெரிகிறதல்லவா? இனி விவசாயிகளின் கடன் சுமை எவ்வளவு இருக்கிறதென்பதை ஆராய்வோம்:

## 6, விவசாயிகளின் கடன் பளு எவ்வளவு?

இந்தியாவிலே விவசாயிகள் கடன் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகிறது. சிறு தொகை ஒன்றைக் கடனாக வாங்கினாலும், நாளடைவில் வட்டி பெருகிக்கொண்டே வருவதால், கடன் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த உண்மையை முன் அத்தியாயத்தில் விளக்கி இருக்கிறோம்.

உல்பு (**Wolff**) என்பவர் கூறுவதாவது, ''இந்தத் தேசமானது லேவாதேவிக்காரன் கைக்குள் அடங்கி இருக்கிறது. கடனாகிய விலங்குகளே விவசாயத்தை நன்கு இயங்காதபடி தடுத்து நிற்கின்றன,'' என்பதாம்.

1875-ஆம் வருஷத்தில் டெக்கான் கலகக் கமிஷன் விசாரணை செய்ததில் சராசரி விவசாயி ஒவ்வொருவனுக்கும் 371 ரூபாய் கடன் இருக்கிறதெனக் குறித்து வைத்தது.

1895-ஆம் வருஷத்தில் **ஸர் பிரடரிக்கு நிக்கல்சன் (Sir Frederick Nicholson)** என்பவர், சென்னை மாகாணத்தில் விவசாயிகளின் கடன் 45 கோடி ரூபாய்கள் என்று கணக்கிட்டார்.

1911-ஆம் வருஷத்தில் **ஸர் எட்வர்டு மேக்லேகன் (Sir Edward Maclagan)** என்பவர் கணக்கெடுத்ததில், பிரிட்டிஷ் இந்திய விவசாயிகளின் கடன் 300 கோடி ரூபாய் இருக்கும் என மதிப்பிட்டார்.

திரு. **M. L. டார்லிங்கு (Mr. Darling)** என்பவர் வேறு விதமாகக் கணக்குப் போட்டுப் பார்த்ததில், 300 கோடி ரூபாய் எனக் கணக்குப் போட்டது சரியன்று என்றும், குறைந்தது 600 கோடி ரூபாயாவது விவசாயிகளின் கடனாக இருக்குமென்றும் 1932ல் கூறி இருக்கிறார்.

1930-ஆம் வருஷத்திலே பல மாகாணங்களிலும் செய்த ஆராய்ச்சிகளை மாகாண பாங்கி விசாரணைக் கமிட்டியார் வெளியிட்டிருக்கின்றனர். அது கீழே வருமாறு:

| மாகாணம் | விவசாயிகளின் கடன் | குறிப்புகள் |
| --- | --- | --- |
| பீஹார் ஒரிஸ்ஸா | 155 கோடி | அதில் நிலச்சுவான்களின் கடன் 24 கோடி; சாதாரண வாரப் பயிரிடுபவர் கடன் 129 கோடி; மற்றவர் கடன் 2 கோடி. |

| | | |
|---|---|---|
| சென்னை | 150 கோடி | புரபசர் தாமஸ் இந்தத் தொகையைவிட அதிகமான கடன் இருக்கலாமென எண்ணுகிருர். |
| பம்பாய் | 81 ,, | இது சரியான புள்ளி எனக் கூற முடியாது. |
| வங்காளம் | 100 ,, | இதில் 62 கோடி நீண்ட நாளைக் கடன். |
| பர்மா | 50 முதல் 60 கோடி | இந்தப் புள்ளி சரியெனச் சொல்ல முடியாது. |
| பஞ்சாப்பு | 135 ,, | ,, |
| மத்திய மாகாணம் | 36 ,, | நிலச் சுவான்களின் கடன் 6 கோடி; பயிரிடுவோர் கடன் 30 கோடி. |
| ஐக்கிய மாகாணங்கள் | 124 ,, | இதில் விவசாயத் தொழிலாளிகளின் கடன் தொகையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. |
| அஸ்ஸாம் | 22 ,, | இது சமதரை ஜில்லாக்களுக்கு மாத்திரம். |
| மத்திய நிலங்கள் **(Central areas)** | 18 ,, | இதில் டில்லிக் கடன் 3 கோடியும், ஆஜ்மீர் மார்வாரா கடன் 3 கோடியும் சேர்ந்திருக்கின்றன. |
| குடகு **(Coorg)** | 35 முதல் 55 இலட்சம் | |

ஆக மொத்தம் 876·45 கோடிகள் *

---

* மத்திய பாங்கி விசாரணைக் கமிட்டியாரின் மைனரிட்டி அறிக்கை, பக்கம், 13.

விவசாயிகளின் கடனைப்பற்றிப் புரபசர் தாமஸ் கீழ்க் காணும் புள்ளி விவரங்களைக் கொடுத்து இருக்கிறார் :

| மாகாணத்தின் பெயர் | மக்கள் தொகை (இலட்சக் கணக்கில்) | கடன் தொகை (கோடிக் கணக்கில்) | ஒவ்வொரு விவசாயியின் கடன் தொகை |
|---|---|---|---|
| சென்னை | 460 | 150 | 50 |
| பம்பாய் | 218 | 81 | 49 |
| வங்காளம் | 501 | 100 | 31 |
| ஐக்கிய மாகாணம் | 484 | 124 | 36 |
| பர்மா | 146 | 50-60 | .... |
| மத்திய மாகாணம் | 155 | 36 | 30 |
| பஞ்சாப்பு | 235 | 135 | 92 |
| பீஹார், ஒரிஸ்ஸா | 376 | 155 | 31 |
| மத்திய நாடுகள் | ,, | 18 | ,, |
| பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்தம் | 2715 | 881 | ,, |

ஸர் M. விசுவேசுரையா அவர்கள் விவசாயிகளின் கடனைப்பற்றிக் கூறுவதாவது, "விவசாயிகளின் கடனைப் பற்றிய மதிப்புகள் 800 கோடி ரூபாய்முதல் 1200 கோடி ரூபாய் வரையில் பலராலும் மதிக்கப்படுகின்றன. மொத்த கடன், குறைந்தது 950 கோடி ரூபாயாவது இருக்கலாம். அதாவது, இந்தியாவில் விவசாயத்தில் ஈடுபட்ட ஜனங் களில் ஆள் ஒன்றுக்குச் சராசரி 50 ரூபாயாவது கடன் இருக்கிறது என்று அறியவேண்டும்" என்பதாம். அவரே ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய்க் கடன் இருக்கிறதெனவும் கணக்கிட்டிருக்கிறார்.

சென்னை மாகாண விவசாயிகளின் கடனைப்பற்றி, 1930-ஆம் வருஷத்தில், சென்னை மாகாண பாங்கி விசாரணைக் கமிட்டியார் கீழ்க் காணும் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கின்றனர் :

**(1) சனக் கணக்கின்படி நிர்ணயம் செய்தது :**

சாதாரணமாக ஒவ்வொரு விவசாயிக்கும் 38 ரூபாய் வீதம் கடன் இருக்கிறது. சென்னை மாகாணத்தில் 4 கோடியே 20 இலட்சம் குடியானவர்கள் இருக்கிறார்கள். ஆளுக்கு 38 ரூபாய் வீதம் மொத்தக் கடன் தொகை 160 கோடி ரூபாய் ஆகிறது.

**(2) ஏக்கருக்கு இவ்வளவு கடன் என்றபடி கணித்தது :**

ஒவ்வோர் ஏக்கர் நிலத்தின் பேரிலும் சுமார் 48 ரூபாய்க் கடன் இருக்கிறது. சென்னை மாகாணத்திலுள்ள 26,282,000 ஏக்கர் நிலத்திற்கு, ஏக்கருக்கு 48 ரூபாய் வீதம் மொத்தக் கடன் தொகை 126 கோடியாகும்.

**ஒவ்வொரு பாகத்திலும் ஏக்கருக்கு எவ்வளவு கடன் என்பது :**

| | ஏக்கர் ஒன்றுக்குக் கடன் | |
|---|---|---|
| வட சர்க்கார்கள் (**Northern Circars**) | 62 | ரூபாய் |
| கொடை ஜில்லாக்கள் (**Ceded Districts**) | 23 | ,, |
| தமிழ் ஜில்லாக்கள் (**Tamil Districts**) | 62 | ,, |
| மேற்குப்புறம் (**West Coast**) | 65 | ,, |
| சராசரி | 53 | ,, |

இதில் கொடை ஜில்லாக்களிலேதான் ஏக்கர் ஒன்றுக்கு மிகவும் குறைந்த கடன் இருக்கிறது. இந்தக் கணக்கின்படி சராசரி ஏக்கர் ஒன்றின் கடன் 53 ரூபாய். ஆகவே, மொத்த ஏக்கருக்கும் 149 கோடி ரூபாய் கடன் கணக்காகிறது.

**(3) நில வரி வீத முறைப்படி (Assessment) கணக்கிடப்பட்டது:**

ஒவ்வொரு ஜில்லாவிலும் 1 ரூபாய் நிலவரி (**Assessment**) அல்லது வாரம் (**Rent**) கொடுத்தால், அந்த ரூபாய் ஒன்றுக்குக் கடன் எவ்வளவு இருக்கிறதென்பதின் கணக்கு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கஞ்சம் | 8 | ரூபாய் | வட ஆற்காடு | 24 | ரூபாய் |
| கோதாவரி | 19 | ,, | தஞ்சாவூர் | 20 | ,, |
| குண்டூர் | 10 | ,, | திருச்சி | 11 | ,, |
| நெல்லூர் | 12 | ,, | மதுரை | 14 | ,, |
| கடப்பை | 12 | ,, | இராமநாதபுரம் | 21 | ,, |
| கர்னூல் | 13 | ,, | சேலம் | 11 | ,, |
| பல்லாரி | 15 | ,, | கோயமுத்தூர் | 27 | ,, |
| அனந்தப்பூர் | 34 | ,, | மலையாளம் | 34 | ,, |
| சித்தூர் | 12 | ,, | தென் கன்னடம் | 37 | ,, |
| செங்கற்பட்டு | 25 | ,, | | | |
| தென் ஆற்காடு | 12 | ,, | ஆக | 371 | ,, |

ஆகவே, மாகாணத்தில் சராசரி நிலவரி (**Assessment**) ரூபாய் ஒன்றுக்கு 19 ரூபாய் கடன் இருக்கிறது.

இந்தக் கணக்கின்படி மொத்தக் கடன் எவ்வளவு என்பதைப் பார்ப்போம். ரயத்துவாரி நிலங்களின்

(**Ryotwari Lands**) வரித்தொகை 5,69,00,000 ரூபாய். ஒரு ரூபாய்க்குப் பத்தொன்பது ரூபாய் வீதம் 108·1 கோடி ரூபாய் கடன். ஜமீந்தாரி நிலத்தில் குடி வாரம் கொடுப்பது 2,36,00,000 ரூபாய். 19 ரூபாய் வீதம் 448 கோடி ரூபாய். ஆகமொத்தக் கடன் ரூபாய் 153 கோடி.

(4) செட்டில்மெண்டு அறிக்கைப்படி :—

பல்லாரி, அனந்தப்பூர், தஞ்சாவூர் 1920-21-ஆம் வருஷ செட்டில்மெண்டு அறிக்கைப்படி தலைக்கு 51 ரூபாய் கடன். ஆக மொத்தக் கடன் 214 கோடி ரூபாய். அவ்வறிக்கைகளின்படியே ஏக்கருக்கு 33 ரூபாய் கடன் என வைத்துக்கொண்டால், மொத்தம் 153 கோடி ரூபாய்.

மேற்கண்ட நான்கு முறைகளாலும் கடன் கணக்குப் பார்த்ததில் ஒன்றுக்கொன்று கொஞ்சந்தான் ஏற்றத் தாழ்வாய் இருக்கின்றன. சராசரி எடுத்துக்கொண்டால், சென்னை மாகாண மொத்தக்கடன் 150 கோடி என்று சொல்லலாம்.

1935-ஆம் வருஷத்தில் கிராமக்கடனைப்பற்றி விசாரிக்கச் சென்னை அரசாங்கத்தார் திரு. சத்தியநாதன் என்பவரை நியமித்தனர். அவர் கீழ்க்காணும் கணக்குகளைக் காட்டியிருக்கிறார் :

மொத்த மக்களில் ஆள் ஒன்றுக்கு உள்ள சராசரிக் கடன் 38 ரூபாய். குடும்பம் ஒன்றுக்குக் கடன் 194 ரூபாய். ஒவ்வொரு குடும்பத்துக்கும் சராசரி ஐந்து பேர் இருக்கின்றனர்.

சாகுபடியில் இருக்கிற நிலத்தில் (ரயத்துவாரி, இனும், ஜமீன் நிலங்கள்) ஏக்கர் ஒவ்வொன்றுக்கும் உள்ள கடன் 63 ரூபாய். ஒவ்வொரு ரூபாய் நிலவரி அல்லது குடிவார வரிக்கும் (**Assessment or Rent**) ரூபாய்க்கு 21 ரூபாய் கடன்.

ஜனத்தொகைக் கணக்குப்படி சத்தியநாதன் அவர்கள் 204 கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஏனென்றால், 1930-ஆம் வருடப் பாங்கி விசாரணைக் கமிட்டியார் முடிவு செய்த பிறகு 5 வருஷத்தில் ஜனத்தொகையும் வட்டித் தொகையும் அதிகம் ஆகிவிடுமல்லவா ?

**சராசரி விகிதப்படி ஏக்கர்ஒன்றுக்குக் கடன் இவ்வளவென்பது :**

| | ஏக்கர் ஒவ்வொன்றுக்கும் | |
|---|---|---|
| | 1930 | 1935 |
| வட சர்க்கார்கள் | 62 | 69 |
| கொடை ஜில்லாக்கள் | 23 | 22 |
| தமிழ் ஜில்லாக்கள் | 62 | 68 |
| மேற்குப்புறம் (**West Coast**) | 65 | 60 |

1930ல் பாங்கி விசாரணைக் கமிட்டியின் கணக்குப்படி சராசரி விகிதம் ஏக்கருக்கு 51 ரூபாய். ஆனால், 1935-ஆம் ஆண்டிலோ, 63 ரூபாய் எனத் திரு. சத்தியநாதன் கணக்கிட்டிருக்கிறார்.

ஏக்கர் விகிதப்படி பாங்கி விசாரணைக் கமிட்டியார் 149 கோடி ரூபாய் கடன் என்று முடிவு கட்டினர். திரு. சத்தியநாதனவர்கள் கணக்குப்படி 32,880,000 ஏக்கர் நிலங்கட்கு, ஏக்கருக்கு 63 ரூபாய் வீதம் மொத்தக்கடன்

ரூபாய் 207 கோடி. நில வரிக் கணக்கின்படி பாங்கி விசாரணைக் கமிட்டியார் 153 கோடி என்று கணக்கிட்டார்கள். திரு. சத்தியநாதனோ, 9,19,45,000 ரூபாய் வரிக்கு, ஒரு ரூபாய் வரிக்கு 21 ரூபாய்க் கடன் வீதம் மொத்தக் கடன் 193கோடி ரூபாயாகும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. சத்தியநாதன் 1935-ஆம் வருஷத்திலே மொத்தக்கடன் 200கோடி ரூபாய் என்று முடிவாகச் சொல்லி இருக்கிறார்.

### என்ன என்ன விதமாகக் கடன் வாங்கப்பட்டுள்ளது என்பது :

கடன்களில் நூற்றுக்கு 47 வீதக் கடன்கள் நில அடைமானத்தின்பேரில் கொடுக்கப்பட்டவை. 100க்கு 50 கடன்கள் பிராமிசரி நோட்டு முதலியவைகளின்மேல் ஈடு ஒன்றும் இல்லாமல் கொடுக்கப்பட்டவை. தங்கம், வெள்ளி நகைகள் அல்லது சாமான்கள், பயிர் முதலியவைகளை ஈடாக வைத்துக்கொண்டு கொடுக்கப்பட்ட கடன்கள் நூற்றுக்கு 3 வீதம் ஆகும்.

### யாராரிடமிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கிறதென்பது :—

மொத்தம் 100 கடன்களில்

| | |
|---|---|
| கவர்ன்மெண்டு (தக்காவிக் கடன்) | 1 |
| கூட்டுறவுச் சங்கங்கள் | 6 |
| லேவாதேவிக்காரர் | 93 |
| ஆக | 100 |

எனவே, 100க்கு 93 கடன்கள் லேவாதேவிக்காரரிடமிருந்தே வாங்கப்படுகின்றன.

**எதெதற்காகக் கடன் வாங்குகிறார்கள் என்பதன் புள்ளி விவரம் :**

மாகாண பாங்கி விசாரணைக் கமிட்டியார் கணக்கின்படி

| | சத விகிதம் |
|---|---|
| பழைய கடன் கொடுக்க | 37 |
| கலியாணம், இழவு செலவுக்காக | 10 |
| நில வரிக்காக | 2 |
| வீட்டுச் செலவு, முட்டுப்பாடுகட்காக | 9 |
| பயிர்ச் செலவுக்காக | 20 |
| நிலச் சீர்திருத்தத்துக்காக | 9 |
| கல்விக்காக | 1 |
| வியாபாரத்துக்காக | 3 |
| நிலம் வாங்குவதற்காக | 8 |
| வீடு கட்டுவதற்காக | 1 |
| ஆக மொத்தம் | 100 |

திரு. சத்தியநாதன் அறிக்கையின்படி கடன் காரணம் :

| | மொத்தக் கடனில் நூற்றுக்கு எவ்வளவு என்ன கடன் என்பது: சதவிகிதம் |
|---|---|
| பழங்கடன் கொடுக்க | 25·1 |
| கலியாணம் முதலியவைகட்காக | 10·5 |
| நில வரி கொடுக்க | 3·3 |

| | |
|---|---|
| பல முடைக்காக, பணத்தட்டின்போது | 6·1 |
| விவசாயச் செலவுக்காக | 10·0 |
| நிலத்தைச் சீர்திருத்துவதற்காக | 4·4 |
| பிள்ளைகளின் படிப்புக்காக | 1·4 |
| வியாபாரத்துக்காக | 12·9 |
| நிலம் வாங்க | 13·8 |
| வீடு கட்ட | 5·6 |
| மற்றச் செலவுக்காக | 6·9 |
| மொத்தம் | 100 |

ஷெ செலவுகளைப் பயன் உள்ள செலவு, பயனில்லாத செலவு என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். குழந்தைகளைப் படிக்க வைத்தல், வியாபாரம் என்ற இரண்டு செலவையும் தனியே வைத்துக்கொள்வோம். பயனுள்ள செலவிலே, சாகுபடிச் செலவு, நிலத்தைப் பண்படுத்துதல், நிலம் வாங்கல், வீடு கட்டல், கிஸ்தி கொடுத்தல் முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளுவோம். அப்போது பிரித்துப் பார்க்கும்போது,

| | நூறு ரூபாயில் இவ்வளவென்பது |
|---|---|
| பயன் உள்ள செலவுக்காக | 37·1 |
| பயன் இல்லாச் செலவுக்காக | 41·7 |
| குழந்தைகளின் படிப்புக்காக | 1·4 |
| வியாபாரத்துக்காக | 12·9 |
| பல வகைச் செலவுக்காக | 6·9 |
| மொத்தம் | 100 |

இந்தப் புள்ளி விவரங்களைச் சற்று ஊன்றிப் பார்த்தால், வாங்குகிற கடனில் பாதி, பயன் இல்லாத செலவுக்கே உபயோகப்படுத்தப்படுகிறது என்பது நன்கு விளங்கும். கல்விக்காகக் கடன் வாங்குவது மிகச் சொற்பம். நூறு ரூபாய்க் கடனில் சாவு வாழ்வுச் செலவுக்காக மாத்திரம் சுமார் 10 ரூபாய் செலவழிக்கப்படுகிறதென்பது மிகவும் வருந்தத்தக்கது.

**சமூகத்தில் பல வேறு தரத்தினருக்கும் கடன் சுமை எப்படி இருக்கிறதென்பது :**

சாதாரணமாகச் சொத்து அதிகம் இருக்க இருக்கக் கடனும் அதிகமாய் இருக்கிறது. நிலம் இல்லாத விவசாயியின் சராசரிக் கடன் 15 ரூபாய்க்கு மேல் இல்லை. நிலவரி அல்லது குடிவார வரி 1 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையில் செலுத்துகிறவர்களுக்குச் சராசரிக் கடன் 211 ரூபாய் ஆகிறது. 100 ரூபாய்க்கு மேல் நில வரியோ குடிவார வரியோ கொடுப்பவர்கட்குச் சராசரி ஆள் ஒன்றுக்கு 918 ரூபாய்க்குமேல் இருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்கள், திரு. சத்தியநாதனவர்களால் மாகாணத்தில் பல பாகத்திலுமுள்ள கிராமவாசிகளின் கடன் கணக்கைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டன. 560 விவசாயக் குடும்பங்களின் கடனைப் பரிசீலனை செய்த முடிவை அவர் பின் காணும் அட்டவணையில் குறித்து இருக்கிறார் : *

* சத்தியநாதன் அறிக்கை, பக்கம். 42.

## குடும்பங்களைக்கொண்டு கணக்கிட்டது *

| 1<br>விவரம் | 2<br>குடும்பங்களின் எண் | 3<br>மொத்த நில அளவு | 4<br>வரி அல்லது குடிவார வரி | 5<br>மொத்தக் கடன் | 6<br>குடும்பம் ஒவ்வொன்றுக்கும் கடன் | 7<br>ஆள் ஒன்றுக்குக் கடன் | 8<br>ஏக்கர் ஒன்றுக்குக் கடன் | 9<br>வரிக்கு ரூபாய் ஒன்றுக்குக் கடன் |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலம் இல்லாத, எவ்வித வரியும் கொடாத, உழு தொழிலாளர்கள் | 23 | ........... | ............... | 1,739 | 76 | 15 | .... | .... |
| ரிஜிஸ்டர் செய்த உரிமை யுள்ள குடியானவர் களும் ஜமீன் குடிகளும் 1 ரூபாய் முதல் 100 ரூபாய்வரையில் தீர்வை அல்லது குடி வாரம் கொடுப்பவர்கள். | 306 | 4483·03 | 11143-8-0 | 3,23,438 | 1057 | 211 | 72 | 29 |
| 100 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் வரி அல் லது குடிவார வரி கொ டுப்பவர்கள். | 235 | 24,738·00 | 135453-4-0 | 10,79,186 | 4592 | 918 | 44 | 8 |

* சத்தியநாதன் அறிக்கை, பக்கம், 42

**(1) உழு தொழிலோரும் பண்ணையாட்களும் :**

இவர்கட்குச் சொத்தும் இல்லை; கடன் தொல்லையி லும் குறைவில்லை. இவர்களில் ஒவ்வொருவருக்கும் இருக் கும் கடன் கொஞ்சந்தான். இவர்களில் நூற்றுக்கு 36 பேர் கடன் இல்லாத சுகவாசிகள். மற்றவர்கட்குக் குடும் பம் ஒன்றுக்குச் சராசரி 76 ரூபாய்க் கடன் இருக்கிறது இந்தக் கடன் கூடச் சாவு வாழ்வு காலங்களில் உண்டு உடுத்துக் களித்துக் குடிப்பதற்காக வாங்கிய கடனால் ஏற் பட்டதாகும். சாதாரணமாக யாரிடம் கடன் வாங்கு கிறார்களோ, அவர்களின் கீழேயே வேலை செய்து, அந்தக் கடனைத் தீர்த்துவிட முயல்கிறார்கள்.

**(2) சிறு நிலச் சொந்தக்காரர்களும், சிறு குடிவார உரிமை உடையவர்களும் :**

நிலவரி அல்லது குடிவார வரியாக ரூபாய் ஒன்று முதல் 100 வரையில் கொடுப்பவர்கட்குத்தான் இந்தக் கடன் தொல்லை மிக அதிகமாய் இருக்கிறது. இந்த நிலைமை யில் இருப்பவர்களின் எண்ணிக்கையே மிக அதிகம். இவர் களே விவசாயத்திற்கு முதுகெலும்பு போல இருப்பவர் கள். இந்திய விவசாயமாகிய தேருக்கு இவர்கள் அச் சாணி போன்றவர்கள். இந்த வகையார்கள் பெரும்பா லும் கிராமங்களிலேயே குடி இருக்கிறார்கள்; விவசாயத் தைத் தாங்களே நேரில் கவனிக்கிறார்கள் ; தாங்களே தங் கள் முயற்சியைக்கொண்டு உழுதொழில் செய்கிறார்கள். இந்த நிலையில் இருப்பவர்கள், தாங்கள் வேறு இடத்தில் இருந்துகொண்டு, நிலத்தைப் பிறரிடம் வாரத்துக்கு அல் லது குத்தகைக்கு விடுவதில்லை. இந்த விவசாயிகள் நன்று

கப் பயிர்த்தொழிலைச் செய்கிறார்கள். மற்ற எல்லாருடைய நிலங்களைப் பார்க்கிலும் இவர்கள் நிலமே நன்றாகப் பயிரிடப்படுவது. இவர்களுடைய கடன் சராசரி ஆள் ஒன்றுக்கு 211 ரூபாய். குடும்பம் ஒன்றுக்குக் கடன் ரூபாய் 1057. ஆள் ஒன்றுக்கு எவ்வளவு, அல்லது குடும்பம் ஒன்றுக்கு எவ்வளவு என்று கணக்குப் போடுவதில், இவர்களுடைய கடன் பெரிய மிராசுதார்களின் சராசரிக் கடனைவிடக் குறைவாகவே இருக்கிறது. அதைக்கொண்டு இவர்களுடைய கடன் பெரிய மிராசுதார்களின் கடனைவிடக் குறைவானது என்று சொல்லக்கூடாது. ஏனென்றால், வேறொரு விதமாகக் கணக்குப் பார்த்தால், இந்த நிலைமையில் இருக்கிற விவசாயிகளின் கடன் தொல்லையே அதிகமென்பது புலனாகும். ஆள் ஒன்றுக்கு எவ்வளவு கடன் என்று பார்க்காமல், அவர்கள் கட்டும் வரிப் பணத்தில் ரூபாய்க்கு எத்தனை ரூபாய் வீதம் கடன் இருக்கிறதென்று பார்த்தால், இந்தச் சிறிய மிராசுதார்களின் கடன் தொல்லையே அதிகமாய் இருக்கிறது. இவர்கள் ஒரு ரூபாய் நில வரியாகவோ, குடிவார வரியாகவோ **(Assessment or Rent)** கட்டினால், அந்த ஒவ்வொரு ரூபாய்க்கும் கடன் 29 ரூபாய் வீதம் இருக்கிறது. நூறு ரூபாய்க்குமேல் வரியோ, குடிவார வரியோ கட்டுபவர்களுக்கு அதேமாதிரி கணக்கிட்டுப்பார்த்தால், ஒவ்வொரு ரூபாய்க்கும் 8 ரூபாய் வீதமே கடன் இருக்கிறது. ரூபாய்க்கு 29 ரூபாய்க் கடனுக்கும், 8 ரூபாய்க் கடனுக்கும் எவ்வளவு தாரதம்மியம் இருக்கின்றன பாருங்கள்!

இன்னொரு விதமாகவும் கணக்குப் போடுவோம்: ஏக்கர் ஒன்றுக்குச் சிறுநில உரிமைக்காரருக்கு எவ்வளவு

கடன், பெரிய நிலக்காரர்களுக்கு எவ்வளவு கடன் என்று கணக்கிட்டால்,யாருடைய கடன் பளு அதிகமென்பதைக் கண்டுபிடிக்கலாம். சிறிய அல்லது நடுத்தரமான விவசாயிகட்கு ஏக்கர் ஒன்றுக்கு 72 ரூபாய் கடனாய் இருக்கிறது. பெரிய மிராசுதார்கட்கு ஏக்கர் ஒன்றுக்கு 44 ரூபாய்தான் கடனாய் இருக்கிறது.

இதைக்கொண்டு சிறிய மிராசுதார்களுக்கும், நடுத்தர மிராசுதார்களுக்குமே கடன் தொல்லை மிக அதிகமாய் இருக்கிறதென்பது நன்றாக விளங்கும்.

இந்த நிலைமையில் இருப்பவர்களில் நூற்றுக்கு 18 பேரே கடனில்லாமல் வாழ்கின்றனர். மற்ற 82 பேர் கடனால் தொல்லைப்படுகின்றனர்.

இந்தச் சிறிய மிராசுதார்களும், நடுத்தர விவசாயிகளும் சாதாரணமாக மிகவும் செட்டாகவே வாழ்கிறார்கள்; கண்ணியமான வாழ்க்கையையும் நடத்தி வருகிறார்கள்; ஆனால், சமூகத்திலே தங்கட்கு நல்ல மதிப்பு இருக்க வேண்டுமென எண்ணுகிறார்கள். அந்த எண்ணத்தாலே சுபாசுபக் காரியங்களில் அளவுக்கு மீறிக் கடன் வாங்கி, கடன் விலங்கில் அகப்பட்டு விழிக்கிறார்கள். ஜாதிப் பெருமையால்உயர்குல மக்கள் என்ற எண்ணத்தால் இவர்கள் பல கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். கௌரவமாக வாழ்ந்து வந்தவர்களாதலால், விவசாய வேலையாளாக வேலை செய்வதற்குஇவர்கள் மனம் இடம் கொடுப்பதில்லை. சமூகமும் இவர்கட்கு அநுமதி தருவதில்லை. இவர்களே கடன் பளுவால் மிகவும் கஷ்டப்படுகிறவர்கள். இவர்களின் நிலந்தான் நாள்தோறும் இவர்களுடைய கையிலிருந்து பணக்காரர்களின் கைக்குப் போய்க்கொண்டு

இருக்கிறது. 1335-ஆம் பசலியிலிருந்து 1340-ஆம் பசலிக்குள் சிறிய விவசாயிகளின் எண்ணிக்கையில் சென்னை மாகாணத்தில் மாத்திரம் 32,67,537 எண் குறைந்திருக்கிறது. அதாவது, அந்த ஐந்து பசலிக்குள் 32,67,537 சிறு விவசாயிகள் தங்கள் நிலத்தையும் உடைமையையும் இழந்துவிட்டார்கள். இப்படிச் சிறு விவசாயிகளின் கையிலிருந்து நிலமானது பெரிய பணக்காரர்களின் கைக்குப் போவதை மிகவும் அவசரமாகத் தடுக்க வேண்டும். சிறு விவசாயிகள் நிலத்தை இழக்காமல் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், அவர்களுடைய கடன் தொல்லையைக் குறைக்க வேண்டும். அவர்கள் தங்கள் நிலங்களை இழக்காதவாறு காப்பாற்ற வேண்டும்.

இங்கிலாந்து முதலிய நாடுகள் கைத்தொழிலால் மிகவும் மேன்மைப்பட்டு விளங்குகின்றன. அந்தத் தேசத்தவர்களுக்குக் கைத்தொழில் வாணிபம் இவைகளில் வருகிற வரும்படியைப் பார்த்தால், அவர்கள் விவசாயத்தைக் கவனிக்க வேண்டுவதே இல்லை என்று சொல்லும்படி இருக்கிறது. மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள மக்களே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எவ்வளவு முயன்றாலும், இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அனைத்தையும் உண்டாக்கிக்கொள்ள முடியாது. அப்படி இருந்தும், இங்கிலீஷ் அரசாங்கம் சிறு விவசாயிகள் தங்கள் நிலைமையை இழக்காமல் இருக்கும்படி பலவித உதவியும் செய்கிறது; அது மாத்திரமன்றி, சிறு விவசாயிகளின் தொகையை அதிகமாக்குவதற்கும் முயற்சி செய்கிறது. பெரிய பண்ணைகள் கடன் முதலியவை காரணமாக ஏலத்

துக்கு அல்லது விற்பனைக்கு வந்தால், அந்த நிலத்தை மொத்தமாக வாங்கி, பல சிறு நிலங்களாகப் பிரித்து, சொந்த நிலம் இல்லாத விவசாயிகள் அவைகளை வாங்கும்படி செய்து, அவர்களிடமிருந்து அந்தப் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக்கொள்ளுகிறது. இம் மாதிரியெல்லாம் இங்கிலீஷ் அரசாங்கம் விசேஷ சலுகை காட்டுவதற்குக் காரணம் என்ன? எந்த நாட்டிலும் சிறு விவசாயிகளே சமூகத்துக்குப் பேராதரவானவர்கள். அவர்கள் வாழ்ந்தால்தான் சமூகம் பெருமையுடையதாய் இருக்கும். அவர்களைக் கஷ்டப்பட விட்டிருக்கும் எந்தச் சமூகமும் சிறப்புடையது ஆகாது. அவர்களைக் காப்பாற்றி, அவர்கள் எண்ணிக்கை குறையாதவாறு பார்த்துக்கொண்டு, அவர்கள் நல் வாழ்வு வாழும்படி செய்ய வேண்டுவது, ஜனங்களுடைய நன்மையைக் கோருகிற எந்த அரசாங்கமும் முதன்மையாகக் கொள்ளவேண்டிய கடமையாகும்.

மற்றைய அரசாங்கங்களும் சிறு விவசாயிகள் க்ஷேமமாக இருப்பதற்குப் பல பல காரியங்களைச் செய்கின்றன. நமது நாட்டிலோ, அவர்களுடைய கஷ்டத்தைப் பற்றிச் சிந்திப்பவர்கூட இதுவரையில் இருக்கவில்லை. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென நினைத்த அரசாங்கமும் இல்லை. இங்கிலீஷ் அரசாங்கம் இங்கிலாந்தில் செய்வது போலவும், மற்ற அரசாங்கங்கள் ஏனைய இடங்களிற் செய்வது போலவும், அவ்வளவு செய்யவேண்டுவதில்லை. கடனுகிய பெருவெள்ளம் விவசாயிகளை அடித்துக்கொண்டு போகும்போது, அரசாங்கத்தின் சிறு சிறு உதவிகளாகிய படகுகளைக்கொண்டு அவர்களைக் கரை

ஏற்றவாவது வேண்டாவா? 'கவட்டுத் தொன்மரத்து இடுக்கில் கால் நுழைத்துக்கொண்டே, ஆப்பதனைப் பிடுங்கிவிட்ட குரங்குபோல'' அறிந்தோ அறியாமலோ கடனாகிய தொல்லையில் அகப்பட்டுக்கொண்டு உய்யும் வழி தெரியாமல் அவதிப்படுகிற அவர்கள் அழிந்து ஒழிந்து போகாமல் காப்பாற்றுவது சமூகத்தினுடையதும், மக்களுக்காக, மக்களின் ஓட்டுப் பெற்று, மக்களின் விருப்பப்படி நடக்கிற அரச சபையினுடையதுமான கடமை அல்லவா?

**பெரிய விவசாயிகளின் கடன் எவ்வளவென்பது :**

ரூபாய் 100க்கு மேல் நிலவரி அல்லது குடிவாரம் கொடுக்கிற விவசாயிகட்கும் மிகுந்த கடன் தொல்லை இருக்கிறது. ஆனால், அவர்களின் தொல்லை சிறு விவசாயிகளுக்கு இருக்கிற அவ்வளவு அன்று! அவர்களின் கடன் சராசரி ஆள் ஒன்றுக்கு ரூ. 918 ஆகும். ஆனால், நில வரி ரூபாய் ஒன்றுக்குக் கடன் எவ்வளவு என்று பார்த்தால், ரூபாய்க்கு 8 ரூபாய்தான் கடன். ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவென்று பார்த்தால், ரூபாய் 44தான். இதே கணக்குப் பார்த்ததில், சிறிய விவசாயிகளுக்கு வரி ரூபாய் ஒவ்வொன்றுக்கும் 29 ரூபாய்; ஏக்கர் ஒன்றுக்கு 72 ரூபாய்.

இந்தப் பெரிய விவசாயிகளில் பலர் விவசாயமே தொழிலாக உடையவர் அல்லர்; பலர் உத்தியோகங்களில் அதிக பணத்தைச் சம்பாதித்துக்கொண்டு பட்டினத்தில் இருப்பவராவர். இவர்களில் பெரும்பாலார் நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிடுபவர். இவர்களில் சிலரே சொந்

தத்தில் பயிரிடுபவர். இவர்கட்குச் சராசரி ஆள் ஒன்றுக்கு 1000 ரூபாய் கடன் இருக்கும்; குடும்பம் ஒன்றுக்குக் கடன் 5000 ரூபாய் இருக்கும். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களில் நூற்றுக்கு 20 பேர் கடன் இல்லாமல் வாழ்பவராய் இருப்பர். *

இதுகாறும் காட்டப்பட்ட புள்ளி விவரங்களால் விவசாயிகளின் கடன் தொல்லை மிகவும் அதிகமாய் இருக்கிறதென்பது நன்ருக விளங்கும். விவசாயிகளின் கடனுனது நாள்தோறும் வளர்ந்துகொண்டே வருகிறதென்பதும், அதனுல் பலர் தம் நிலங்களை இழந்து தொல்லைப்படுகின்றனர் என்பதும் கூறப்பட்டன. பல வித நிலைமையிலும் இருக்கிற விவசாயிகளுக்குள்ளே சிறு விவசாயிகளே மிகவும் தொல்லைப்படுகிருர்களென்பதும், அவர்களை அக் கஷ்டத்திலிருந்து விடுவித்தால்தான் நாடு சுகம் அடையும் என்பதும், அவர்களுடைய துன்பத்தை மிகவும் விரைவாக நீக்க வேண்டுமென்பதும் இதுவரையில் சொன்ன விஷயங்களால் நன்ருகப் புலனுகும். அந்தச் சிறு விவசாயிகளைக் கஷ்டத்திலிருந்து விடுவிப்பதுதான் இப்போது சென்னை அரசாங்கத்தார் செய்கிற வேலையாகும்.

---

* இதைப்பற்றிய முழு விவரமும் திரு. சத்தியநாதன் அறிக்கையில் கண்டபடி எழுதியது.

## 7. திடீரென விவசாயிகளின் கடன் பளு எப்படி அதிகமாயிற்று ?

சில வருஷங்களாக விவசாயிகளின் கடன் பளுவானது மிக அதிகமாகிவிட்டது. அதற்குக் காரணம் விலைவாசி மிகவும் குறைந்துவிட்டதேயாகும்.

சாதாரணமாகச் சாமான்களின் விலை அதிகமாவதையும், குறைந்து போவதையும் எல்லா ஜனங்களும் அறிவார்கள். சாமான்களின் மதிப்பு அடிக்கடி மாறுவதைப்போலப் பணத்தின் (ரூபாய், சவரன்) மதிப்பும் அடிக்கடி மாறக்கூடும் என்பதைப் பலர் அறியார். அதிலும், காகித நாணயமானது (**Currency note**) வெளியிடப்படும் இந்தக் காலத்திலே, கவர்ன்மெண்டார் காகித நாணயத்தின் மதிப்பை வேண்டுமானால் அதிகமாக்கலாம்; அல்லாவிட்டால் குறைக்கலாம்.

இதை இன்னும் விளக்குவோம்: ஒரு தீவிலே 100 சாமான்கள் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த ஊரில் ஜனங்களிடத்தில் மொத்தம் நூறு ரூபாயே இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அந்த நூறு ரூபாயையும் சாமான்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் உபயோகப்படுத்துவதாக வைத்துக்கொண்டால், 100 சாமான்களுக்கு நூறு ரூபாய் ஆனால், சாமான் ஒன்று ஒரு ரூபாய்க்கு விற்கும் அல்லவா ?

அதே தீவில் ஒருநாள் திடீரென 100 ரூபாயும் இரட்டிப்பாய்விட்டன என்று வைத்துக்கொள்வோம். ஆகவே, ரூபாய்கள் 200ம், சாமான்கள் மாத்திரம் 100ம் இருக்கின்றன என எண்ணிக்கொள்ளுவோம். அந்த இருநூறு

ரூபாயையும் 100 சாமான்களையும் வாங்க விற்க உபயோகப்படுத்துவார்களானால், சாமான் ஒன்றின் விலை 2 ரூபாய் ஆகிவிடுமல்லவா ?

இதிலிருந்து என்ன புலனாகிறது ? முதலில் ஒரு ரூபாய்க்கு ஒரு சாமான் வாங்க முடிந்தது. பணம் அதிகமான போது ஒரு சாமான் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கவில்லை. 2 ரூபாய் கொடுக்க நேரிட்டுவிட்டது. அதாவது, முதலில் ஒரு ரூபாய்க்கு ஒரு சாமானும், பிறகு ஒரு ரூபாய்க்கு $\frac{1}{2}$ சாமானுந்தான் கிடைக்கின்றன அல்லவா ? அதாவது, ஒரு ரூபாய் எல்லாச் சமயங்களிலும் ஒரே அளவான சாமானை வாங்க முடியவில்லை என்பதாம். இதையே சாமான்களின் விலை அதிகமாயிற்று அல்லது குறைந்தது என்று சொல்லுகிறோம். சாமான் விலை அதிகமாயிற்று என்றால், ரூபாயின் மதிப்புக் குறைந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அல்லது, சாமானின் விலை குறைந்து போயிற்று என்றால், ரூபாயின் மதிப்பு அதிகமாய்விட்டது என்பதை அறிய வேண்டும்.

ஒரு மனிதன் ரூபாய்க்கு ஒரு சாமான் கிடைத்த போது 100 ரூபாய்க் கடன் வாங்கியதாக வைத்துக்கொள்வோம். அப்போது அந்த 10 ரூபாய்க்கும் 100 சாமான்கள் வாங்கலாம்.

அதே நூறு ரூபாய் அவன் கையிலிருக்கிறது. சாமான் விலை சாமான் ஒன்றுக்கு $\frac{1}{2}$ ரூபாய் ஆகிவிடுவதாக வைத்துக்கொள்வோம். அதே நூறு ரூபாய்க்கு 200 சாமான்கள் வாங்கலாம் அல்லவா? அதிலிருந்து ரூபாயின் மதிப்பு அதிகமாகிவிட்டதென்பது தெரிகிறது. சாமான்

விலை குறைவு என்றால், பணத்தின் மதிப்பு அதிகம் என்பதை அறிய வேண்டும்.

100 ரூபாய்க்கு நூறு சாமான் விற்றபோது ஒருவன் கடன் வாங்கினான். நூறு ரூபாய்க்கு 200 சாமான் விற்கிறபோது கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதாவது சாமான்களின் விலை குறைந்த போது கடனைத் திருப்பிக் கொடுக்கிறான். முதலில் 100 ரூபாய்க் கடனைக் கொடுப்பதற்கு 100 சாமான்கள் இருந்தால் போதும். பிறகோ, 100 ரூபாய்க் கடன் கொடுப்பதற்கு 200 சாமான்கள் வேண்டும். ரூபாய்க் கணக்கில் பார்த்தால் முதலில் கொடுத்தாலும் 100 ரூபாய்தான்; பிறகு கொடுத்தாலும் 100 ரூபாய்தான். ஆனால், சாமான் கணக்கில் பார்த்தால், முதலில் கொடுக்கும்போது 100 சாமான் கொடுத்தால் போதும். பிறகு கொடுத்தால் 200 சாமான்கள் கொடுத்தால்தான் அந்த 100 ரூபாய்க் கடன் தீரும். இதற்கு ஓர் உதாரணம் காட்டுவோம்:

ஒரு கலம் நெல் 4 ரூபாய்க்கு விற்கிறதாக வைத்துக் கொள்வோம். அப்போது ஒருவன் 100 ரூபாய் பணம் வாங்குகிறான். அந்த நூறு ரூபாய்க்கு 25 கலம் நெல் வாங்கலாம்: அப்படி 25 கலம் நெல் வாங்கிச் சாப்பிட்டு விடுகிறான். சில வருஷங்கள் கழித்துக் கடன்காரன் பணத்தைத் திருப்பிக் கேட்கிறான். அப்போது கடன் வாங்கியவன் கையில் நெல்தான் இருக்கிறது. அவன் அதை விற்றுப் பணம் கொடுப்பதென்று தீர்மானிக்கிறான். அப்போது நெல் கலம் ஒன்றின் விலை ரூபாய் 2. பழைய நூறு ரூபாய்க் கடனைத் தீர்ப்பதற்கு இப்போது அவன் 50 கலம் நெல்லை விற்றுக் கொடுக்க வேண்டி இருக்கிறது.

25 கலம் நெல் வாங்கியது, வட்டிவாசி ஒன்றும் இல்லா திருந்தும், 50 கலம் நெல் கடனாக மாறிவிட்டதல்லவா? அதற்குக் காரணம் கடன் வாங்கிய காலத்துக்கும், கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலத்துக்கும் மத்தியில் சாமான்களுடைய (நெல்லினுடைய) விலை குறைந்துவிட்டதே ஆகுமல்லவா?

எனவே, சாமான்களுடைய விலை குறைந்தால் கடன் பளு அதிகமாகிவிடுகிறது. ஆகையால், சாமான்களுடைய விலை குறைந்துகொண்டு வருதல், கடன் கொடுத்தவர்களுக்கு நல்லது; கடன் வாங்கியவர்களுக்குக் கஷ்டம். அதாவது, வாங்கிய கடனுக்கு அதிகமான சாமான் கொடுப்பதால் உண்டாகிற கஷ்டம். அதல்லாமல் சாமான்களுடைய விலை அதிகமாகிக்கொண்டு வந்தால், கடன் கொடுத்தவர்களுக்கு அசௌகரியம்; கடன் வாங்கியவர்களுக்கு இலாபம். ஏனென்றால், வாங்கிய கடனைக் குறைந்த அளவு சாமான்களைக் கொண்டு கொடுத்துத் தீர்த்துவிடலாம்.

கடந்த சில வருஷங்களாகச் சாமான்களின் விலை மிகவும் குறைந்து வந்துவிட்டது. விளை பொருள்களின் விலை இறங்கிவிட்டது. நெல் கலம் 4 ரூபாய்க்கு விற்றது, இப்போது $1\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கிறது. அதனால், பணத்தின் மதிப்பு இப்போது அதிகமாகிவிட்டது என்பது தெரியக்கூடும்.

இந்த விலை வீழ்ச்சியானது இந்தியாவில் மாத்திரமன்றி, உலக முழுவதிலுமே இருக்கிறது. இதற்குக் காரணங்கள் பலவாகும். அவைகளைப்பற்றி இங்கே விவரமாகச் சொல்வதற்கில்லை. இப்படி விலை மிகவும் குறைந்திருக்கிற

காலத்தை வியாபார மந்தகாலம் என்று சொல்லுவார்கள். அந்த வியாபார மந்தகாலந்தான் இப்போது உலகத்தில் நிகழ்வது.

ஆகையால், முன்பு 1000 ரூபாய்க் கடன் வாங்கி இருந்தால், அது இப்போது 2000 ரூபாய்க் கடனுக்குச் சமமாகும். முன்னே 10 ரூபாய்க் கடன் வாங்கி இருந்தால், அது 20 ரூபாய்க்குச் சமமாகும்.

எனவே, இந்திய விவசாயிகளின் கடனானது, சாமான்களின் விலை ஒன்றுக்குப் பாதி ஆகிவிட்டபடியால் (கடன் தொகை) ஒன்றுக்கு இரண்டு மடங்கு ஆகிவிட்டது. ரூபாய்க் கணக்கில் பார்த்தால், முன்னேயும் அவ்வளவுதான்; இப்போதும் அவ்வளவுதான். ஆனால், கடன் பளுவைச் சரியாகக் கணக்கிட வேண்டுமானால், சாமான் கணக்கில் எவ்வளவு என்று பார்க்க வேண்டும். அப்படிக் கணக்குப் பார்த்தால், கடன் சுமையானது இரட்டித்து விட்டது என்று கூசாமல் கூறலாம்.

இந்த விஷயம் சாதாரணமாகப் பலருக்குப் புலப்படுவதில்லை. 100 ரூபாய்க் கடன் வாங்கி, 100 ரூபாய் திருப்பிக் கொடுத்தால், அதே அளவு கொடுத்ததாக எண்ணுவது வழக்கம். ஆனால், சாமான் கணக்கில் பார்த்தால், ஒருவன் கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது ஒன்று, கூட்டிக் கொடுக்கிறான்; அல்லது குறைத்துக் கொடுக்கிறான்.

சமீபகாலத்தில் விலைவாசிகள் எவ்வளவு மாறி இருக்கின்றன என்பதையும், விலைகள் மிகவும் குறைந்துவிட்டதால் கடன் பளு எவ்வளவு அதிகமாகிவிட்டதென்பதையும் சில புள்ளி விவரங்களால் விளக்கிக் காட்டுவோம்:

இந்த விலை வீழ்ச்சி 1929-ஆம் வருஷத்தில் ஆரம்பித்தது. 1928ல் பிரிட்டிஷ் இந்தியாவில் முக்கிய விளை பொருள்களின் மொத்த மதிப்பு 1018 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது. அதே விளை பொருள்களின் தற்கால மதிப்பு, சுமார் 500 கோடி ரூபாய்தான். ஏனென்றால் விலை வாசி, 100க்கு 50 வீதம் குறைந்துவிட்டது. கீழே கொடுக்கப்பட்டிருக்கிற அட்டவணையைக் கொண்டு புரபசர் தாமஸ் அவர்கள் ஒவ்வொரு மாகாணத்தின் மொத்தச் சாமான்களின் விலை மதிப்பு 1929ல் எவ்வளவு என்பதையும் 1933ல் எவ்வளவு என்பதையும் காட்டி, ஒவ்வொரு மாகாணத்திலும் விளைபொருள்களின் விலை நூற்றுக்கு எவ்வளவுவீதம் குறைந்துபோய்விட்டது என்பதை விளக்கிக்காட்டி இருக்கிறார்கள்.

| பெயர் | 1929ல் வருமான மதிப்பு (இலட்ச ரூபாய்க் கணக்கில்) | மாகாணத்தின் 1933ல் வருமான மதிப்பு (இலட்ச ரூபாய்க் கணக்கில்) | விலைக் குறைவு (நூற்றுக்கு இவ்வளவென்பது) |
|---|---|---|---|
| சென்னை | 18,078 | 9,933 | 45·0 |
| பம்பாய் | 12,052 | 8,386 | 30·4 |
| வங்காளம் | 23,259 | 9,054 | 61·1 |
| ஐக்கியமாகாணங்கள் | 14,052 | 9,101 | 35·2 |
| பஞ்சாப்பு | 7,678 | 4,853 | 36·8 |
| பர்மா | 6,338 | 2,945 | 53·5 |
| பீஹார், ஒரிஸ்ஸா | 13,517 | 5,655 | 58·2 |
| மத்திய மாகாணம் | 6,877 | 2,540 | 48·5 |
| மொத்தம் | 1,018,51 | 52,467 | 47·5 |

இந்த விலை வீழ்ச்சியினாலே வெளி நாட்டிற்கு ஏற்றுமதியாகும் சாமான்களின் மொத்த மதிப்பு மிகக் குறைவாய்விட்டது. 1938ல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சாமான்களின் மதிப்பு 328 கோடி ரூபாய். ஆனால், 1933ல் அனுப்பிய சாமான்களின் மதிப்பு 147 கோடி ரூபாய்தான்.

இந்த விலை வீழ்ச்சியைப்பற்றிச் சென்ஸஸ் சூப்பரின்டெண்டு எழுதி இருப்பது பின் வருமாறு: *

"பத்து வருஷத்தில் கேழ்வரகின் விலையானது ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்து போய்விட்டது. நெல் விலையும் நூற்றுக்கு ஐம்பது வீதம் இறங்கிவிட்டது. விவசாயி விற்பனைக்கென்றே சில விளை பொருள்களை உண்டாக்குவதுண்டு. இந்த விளை பொருள்களை விற்று, இவற்றிலிருந்து கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான் நிலவரி கொடுப்பது முதலிய காரியங்களை விவசாயி செய்வது வழக்கம். சில விளை பொருள்களை மிகவும் குறைந்த விலைக்கு விற்க வேண்டி நேரிட்டுவிட்டது. வியாபார மந்தத்தால் சில விளை பொருள்களை வாங்குவார் கிடைப்பதும் அரிதாகிவிட்டது. உதாரணமாக நிலக்கடலையை (மணிலாக் கொட்டை) எடுத்துக்கொள்வோம்: குறைந்த விலைக்குக்கூட அதை விற்பது கஷ்டமாகிவிட்டது. சாப்பாட்டுக்கு உபயோகமாகும் பண்டங்களை விளைவிப்பவர் பாடு அவ்வளவு கஷ்டமாகப்போகவில்லை. ஏனென்றால், உணவுப் பொருள்களுக்கு உள்நாட்டுப் பரிசம் கொஞ்சம் உண்டு. இந்த விலை வீழ்ச்சியால் பயன் அடைந்தவர்கள்

---

* திரு. சத்தியநாதன் மேற்கோள் காட்டியபடி

அன்றாடக் கூலிக்காரர்களாவார்கள். ஏனென்றால், அவர்களுடைய சம்பளம் அதிகமாகக் குறையவில்லை. ஆகையால், அவர்களுடைய சம்பளப் பணத்தைக்கொண்டு அதிகமான சாமான்களை வாங்க முடியும்.

1933-34-ஆம் வருஷத்திய சென்னைமாகாணத்தின் பருவ கால விளை பொருள் அறிக்கையில் **(The Season and crop Report of the Madras Presidency)** கூறப்பட்டிருப்பதாவது:

"விலை ஏறி விற்ற காலத்திலே விவசாயிகள் தங்கள் செலவை அதிகப்படுத்திவிட்டார்கள்; தங்கள் தேவையைப் பெருக்கிவிட்டார்கள். வாழ்க்கையின் நிலைமை அதிகமாகிவிட்டது. ஆனால், இப்போது விலை வீழ்ந்துவிட்டதால், அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். விவசாயிகளுக்குள்ளே, தங்கள் கைப்பணத்தை எல்லாம் நிலத்திலேயே போட்டுவிட்டவர்கள், இப்போது மிகவும் திணறுகிறார்கள். அவர்களுடைய திண்டாட்டம் வாரத்துக்குச் சாகுபடி செய்பவர்கள், உழு தொழிலாளிகள் இவர்களுடைய கஷ்டத்தைவிட அதிகமாய் இருக்கிறது. பல விவசாயிகளுக்குக் கடன் உபத்திரவம் சகிக்க முடியாததாய் இருக்கிறது.

"அந்தக் கடன்களெல்லாம் வீண் டாம்பிகச் செலவுகட்காகவும், சாகுபடிச் செலவுக்காகவும் வாங்கப்பட்டவையாகும். தங்களுடைய பணத்தை நிலத்தில் போட்டு வைத்திருப்பவர்களுக்கு இப்போது பழைய மாதிரி வரும்படி வருவதில்லை. தற்சமயம் அந்த நிலங்களை நல்ல குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, சாகுபடி செய்து கொடுக்க ஆளும் கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. மற்றத் தொழில்

துறைகளில் பணத்தைப் போட்டவர்கள் கஷ்டப்படுவது போலவேதான் இவர்களும் கஷ்டப்படுகிறார்கள். தானே சொந்தமாகப் பயிரிடுபவன் பாடு அவ்வளவு மோசமில்லை. ஆனாலும், அவன் இப்போது குறைந்த விலையாகிய முட்டுப்பாட்டுக்கிடையே வேலை செய்து பிழைக்க வேண்டி இருக்கிறது.

"இந்த வருஷத்தில் உணவுப் பொருள்களும், ஆடு மாடுகளின் தீனிகளும் போதுமான அளவு விளைந்திருக்கின்றன. ஆனால், விவசாயியின் நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று கூறுவதற்கில்லை. விவசாயியின் முக்கிய துன்பம் என்னவென்றால், கிராமங்களில் ரொக்கப் பணம் கிடைக்காததுதான். அநேக விவசாயிகளின் நிலங்கள் அடைமானத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. தங்கத்தின் விலை அதிகமானதால், சில விவசாயிகள் தங்களிடமிருந்த தங்க நகைகளை விற்று, கஷ்டத்தை ஒருவாறு நிவர்த்தித்துக்கொண்டார்கள். விளை பொருள் உண்டாக்குவதில் முன்னைவிட இப்போது செலவு ஒன்றும் அதிகமாகிவிடவில்லை. விவசாயக் கூலியாட்கள், இந்த விலை வீழ்ச்சியால் அதிக கஷ்டம் அடையவில்லை. ஏனென்றால், அவர்களுடைய கூலி தானியமாகவே கொடுக்கப்படுகிறது.

"பணமாகச் சம்பளம் அல்லது கூலிவாங்கும் வேலையாளின் நிலைமை சற்று நன்றாய்விட்டது. பழைய கூலியே அவன் வாங்கினாலும், அதே பணத்துக்கு இப்போது அதிகமான பண்டங்களை வாங்க அவனுக்கு முடிகிறது."

புரபசர் ஜார்ஜ் ஓப்ரயின் (Prof. George O'Brien) என்பவர், விவசாயப் பொருளாதாரம் (Agricultural Economics) என்ற நூலில் விலை வீழ்ச்சி

யால் விவசாயிக்கு எவ்வளவு கஷ்டம் உண்டாகக் கூடும் என்பதைப்பற்றி எழுதி இருக்கிறார். அது மேல் நாட்டு விவசாயிகளைப்பற்றி எழுதியது. ஆனால், நம் நாட்டு விவசாயிகளுக்கும் அது மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. அதன் சுருக்கம் வருமாறு :—

"விலைவாசி அதிகமாகப் போகும்போது விவசாயிக்கு நன்மை வந்ததென்று பேசுவார்கூட இல்லை. விலை வீழ்ச்சி வந்ததுமோ, விவசாயி அழிந்துவிடுவான் என்ற கூக்குரல் எங்கும் உண்டாகிறது. அதற்குக் காரணம் என்ன? விலை ஏறி விற்கும்போது விவசாயிக்கு விசேஷ இலாபம் கிடைத்ததல்லவா? அந்த இலாபத்தைக்கொண்டு விவசாயி இப்போது சௌகரியமாய் இருக்கலாமல்லவா? அப்படி இருக்க, ஏன் விவசாயிக்குக் கஷ்டம் கஷ்டம் என்று பலர் கூவவேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர்.

"விலை அதிகமாக விற்றபோது விவசாயிக்கு இலாபம் விசேஷமாய்க் கிடைத்ததென்பது உண்மைதான். விலை ஜாஸ்தியாக விற்கும்போது அவன் விளை பொருளை அதிகமாக உண்டாக்கிக்கொண்டே வருகிறான். விலை வீழ்ச்சியோ, திடீரென வருகிறது; திருட்டுத்தனமாகவும் ஒருவருக்கும் தெரியாமலும் வருகிறது. அதை அறியாத விவசாயி விளை பொருள்களை அதிகமாக விளைவிக்கிறான். அவன் அதிகமாக விளைவிப்பதால், விலை இன்னும் அதிகமாகக் குறைந்து போகிறது. அப்போதுகூட அந்த விவசாயி, 'ஏதோ தற்காலீகமாக விலை குறைந்திருக்கிறது; மறுபடியும் அதிகமாய்விடும்,' என்று நினைக்கிறான். சில காலத்திற்குப் பிறகுதான் விலை சாசுவதமாக விழுந்துவிட்டதென்பதை அவன் உணருகிறான்.

"விலை உயர்ந்து விற்கும் காலத்தில் விவசாயி அநேக அதிக செலவுகளைச் செய்து பழக்கப்படுத்திக்கொள்ளுகிறான். இப்போது அச்செலவுகளைக் குறைக்க முடியவில்லை. விலை அதிகமாக விற்றபோது பல விவசாயிகள் கடன் பட்டு, நிலம் வாங்கி இருக்கலாம். அவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிடுகிறது. அந்த விவசாயிகளெல்லாம் வக்கற்றவர்கள் (**Paupers**) ஆகிவிடுகிறார்கள். தங்கள் நிலத்தைக் கஷ்டத்தை முன்னிட்டுப் படு விலைக்கு விற்கிறார்கள். விலை வீழ்ச்சி, விவசாயிகளின் மன திடத்தை அழிக்கிறது. விவசாயிகள் தன்னம்பிக்கையை இழந்து போகிறார்கள். மனோ தைரியம் அழிந்துவிட்டால், விவசாயத்திலும் கவனக் குறைவு உண்டாகிறது. கால நிலை சற்று மாறினாலுங்கூட, விவசாயியின் மன நிலைமை அதிகமாக மாறுவது இல்லை.

இந்த விலை வீழ்ச்சியானது 1932-ஆம் ஆண்டுக்குப் பிறகு அவ்வளவு மோசமாய் இல்லை.

1930லிருந்து 1934க்குள் பெரும்பாலான நிலம் கைமாறி இருக்கிறது. அதே வருஷங்களில் விவசாயிகளின் கையிலிருந்தும் நிலமானது விசேஷமாக விவசாயிகள் அல்லாதவர்களின் கைக்குப் போய்விட்டது. அதே காலத்தில், கடன் அதிகமாக வாங்கப்படவில்லை. ஏனென்றால், நிலத்தின் மதிப்பு அதிகமாகக் குறைந்துவிட்டபோது, கடன் அதிகமாகக் கொடுப்பவர்கள் இல்லை; வாங்கக்கூடிய அளவு மனோ திடமும் இல்லை.

1931முதல் 1934வரையிலுள்ள வருஷங்களிலே, சென்னை மாகாணத்தில் (மலையாளம், தென் கன்னடம் நீங்கலாக) சிறுவிவசாயிகளின் கையிலிருந்து 10,351,000

ஏக்கர் நிலம் மற்றவர்கள் கைக்கு மாறிப் போயிருக்கிற தென்று திரு. சத்தியநாதன் கணக்கிட்டிருக்கிறார்.

விலை வீழ்ச்சிக்கு முன்பு நிலத்தின் விலைக்கும் கடன் தொகைக்கும் ஒத்திட்டுப் பார்த்தால், நூறு ரூபாயே நில விலையாய் இருந்தால், கடன் 9 ரூபாயாய் இருந்தது. வியாபார மந்தம் ஏற்பட்டு விலை மிகக் குறைந்து போன பிறகு, 100 ரூபாய் நில விலை மதிப்புக்குக் கடன் 20 ரூபாயாக மாறிவிட்டது.

இவ்வாறு ஏற்பட்ட விலை வீழ்ச்சியாலும், கடன் தொந்தரவாலும் நிலச் சொந்தக்காரராயிருந்த பல விவசாயிகள் தங்கள் பொருளை இழந்து, உழு தொழிலாளிகளாக மாறி வருகிறார்கள்.

நமது நாட்டிலே 1921-ஆம் வருஷத்தில் 1000 வேளாண் மக்களில் 291 பேர்தான் சொந்த நிலம் இல்லாதவர்களாய் இருந்தார்கள். 1931-ஆம் வருஷத்திலோ விவசாயத் தொழிலுள்ள ஜனங்களில் 1000க்கு 407 பேர் சொந்த நிலம் இல்லாதவர்கள் ஆகிவிட்டார்கள்.

சென்னை மாகாண விவசாயிகளின் கடன் தொகை 200 கோடியென்று 1935ல் மதிப்பிடப்பட்டது. அந்தத் தொகை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருகிறது. கடனுக்குக் கடு வட்டி வாங்கப்படுவதால், முதலோடு வட்டியும் சேர்த்துக் கடன் தொகை மிக வேகமாக, விசேஷமாக விருத்தியாகிக்கொண்டே வருகிறது. இந்தக் கடன் பெருக்கத்தைக் காலத்தில் தடுக்காவிட்டால், இது அபாரமாகப் பெருகிவிடும். ஒரு சிறு விதையானது ஒரு செடியாக இப்போது வளர்ந்துவிட்டது. இதை இப்போதே பிடுங்கி எறியாவிட்டால், இது மரமாகி, வேருன்

றிப்போம். பிறகு இதைக் களைய வேண்டுமானால், கோடரி, வாள் முதலிய பல கருவிகள் அவசியமாகும்; வேலையும் அதிகமாகிவிடும். ஆகையால், இக்கடன் தொல்லையை இப்போதே ஒழித்துவிடுவதே நல்லது.

## 8. கடன் தொல்லைக் குறைவுக்காக இதுவரையில் பல மாகாணத்திலும் செய்யப்பட்ட வேலைகள்

மிகப் பழைய காலத்திலே கடன் தொல்லையை ஒழிப்பதற்கு ஒரு பழக்கம் இருந்தது: 50 வருஷத்துக்கு ஒருதரம் யூதர்கள் ஜூபிளி விழாக் கொண்டாடுவார்கள். அப்போது பழைய பாக்கிகளெல்லாம் கொடுத்துத் தீர்ந்ததாக எண்ணப்படும்.

சேர தேசத்திலே பன்னிரண்டு ஆண்டு முடிவை மாமாங்கம் என்று சொல்லி வந்தார்கள். அக்காலத்திலே மாமாங்கத்தின் போது பழைய கொடுக்கல் வாங்கல்களை முடிக்க வேண்டுமென்னும் பழக்கம் இருந்து வந்தது.

1865-ஆம் வருஷமுதல் 70-ஆம் வருஷம் வரையில் இந்திய பொருள்களின் விலை மிகக் குறைவாய் இருந்தது. அப்போது அரசாங்கம் விவசாயிகளின் கடனைக் குறைக்கக் கோர்ட்டுகளுக்கு அதிகாரத்தைத் தந்தது. மேலும், விவசாயிகள் எளிதில் கடன் பெற்று நன்மையடையவும் சில சட்டங்கள் செய்யப்பட்டன.

விவசாயிகளுக்கு, விவசாயத் தொழில் செய்வதற்காகக் கடன் கொடுக்க, கவர்ன்மெண்டார் முன்வந்தனர்; 1872-73ல் தக்காவிக் கடன் சட்டம் முதல் முதல் நிறை

வேற்றப்பட்டது. 1871, 1876, 1879 முதலிய வருஷங்களில் அச்சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

1875ல் டெக்கான் கலக விசாரணைக் கமிட்டியாரின் சிபாரிசின்படி 1879ல் டெக்கான் விவசாயிகளின் சகாயச் சட்டம் (**The Deccan Agriculturalists' Relief Act**) இயற்றப்பட்டது. இந்தச் சட்டப்படி கோர்ட்டார் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் வழக்கையும் பற்றி, எப்படி அது உண்டாயிற்று என்ற பல விஷயங்களையும் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென விதிக்கப்பட்டது. இந்தச் சட்டப்படி கடன் கொடுப்பவர் அப்போதைக்கப்போது இரசீதுகளைத் தரவேண்டுமென்றும், கணக்குச் சரியாக வைத்திருக்க வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தச் சட்டத்தால் விசேஷப் பயன் உண்டாகவில்லை.

1918-ஆம் வருஷத்தில் கடுவட்டிச் சட்டம் இயற்றப்பட்டது. அது 1926ல் திருத்தி அமைக்கப்பட்டது. அந்தச் சட்டப்படி, கடனுக்கு இவ்வளவு வட்டிக்குமேல் வாங்கக்கூடாது என்று வரையறுக்கப்பட்டது. அதல்லாமல், எந்தக் கடன் வழக்கையும் பற்றிக் கோர்ட்டார் தீர ஆலோசனையும் விசாரணையும் செய்ய வேண்டுமென்று விதித்தது.

1930-ஆம் வருஷத்தில் பஞ்சாப்புக் கணக்குச் சீர்படுத்தும் சட்டம் (**The Punjab Regulation of Accounts Act**) ஏற்படுத்தப்பட்டது. அந்த மாகாணத்திலுள்ள லேவாதேவிக்காரரெல்லாம், முறையாகக் கணக்கு வைத்திருக்கவேண்டுமென்றும், ஆறு மாதத்திற்கு ஒருமுறை தங்களிடம் கடன் வாங்கி இருப்பவர்கட்கெல்லாம்

தங்களிடமுள்ள பற்று வரவு விவரங்களை எழுதி அனுப்ப வேண்டுமென்றும் அரசாங்கத்தார் உத்தரவளித்தனர். அப்படிக் கணக்கு வைக்கத் தவறினாலும், கணக்கு அனுப்பத்தவறினாலும் கோர்ட்டார் வட்டிப் பாக்கியில் முழுவதையுமாவது, அல்லது ஒரு பகுதியையாவது தள்ளிவிடலாம். கோர்ட்டுச் செலவும் அநுமதிக்கப்படாது.

அரசாங்க விவசாயக் கமிஷன் பஞ்சாப்புச் சட்டத்தைப்போல எல்லா மாகாணங்களிலும் சட்டங்களை ஏற்படுத்தல் நல்லது என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், பல மாகாணங்களிலும் பாங்கி விசாரணை செய்த பாங்கி விசாரணைக் கமிட்டியார் இதைப் பற்றி ஒரே விதமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை. இம்மாதிரியான சட்டம் எல்லா மாகாணத்திலும் பயனுள்ளதாக இருக்குமா என்பதில் அபிப்பிராய பேதம் இருக்கிறது.

விவசாயியின் நிலம், விவசாயி அல்லாத மற்றவர்களிடம் போகாதவாறு தடுக்கப்பஞ்சாப்பிலே 1901-ஆம் வருஷத்திலே ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டது; எந்த விவசாயி இடமிருந்தும், விவசாயி அல்லாத எவரும் நிலத்தை வாங்கக்கூடாது. நிலத்தை அடைமானமாக வாங்கினாலும், 20 வருஷத்திற்குமேல் அடைமானமாக வாங்கிக்கொள்ளக் கூடாது.

இந்தச் சட்டமும் அதிக பயன் தரவில்லை. விவசாயி நிலத்தை வாங்கிக்கொள்ள இந்தச் சட்டம் இடந்தந்தது. அதனால், விவசாயிகளிடையே லேவாதேவிக்காரர் பலர் தோன்றினர். மேலும், இந்தச் சட்டப்படி, பட்டினங்களிலே படித்துப் பணம் சேர்த்தவர்கள், கிராமத்தில் குடி-

யேறி, விவசாயத்தைக் கவனிக்க விரும்பினால், அதை இச் சட்டம் தடுப்பதாயிற்று.

ஐக்கிய மாகாணங்களிலே சில சந்தர்ப்பங்களில் விவசாயியின் கடனை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு கொடுத்துத்தீர்த்துவிடலாமென விதிஅமைக்கப்பட்டது.

எல்லா மாகாணங்களிலும் கடு வட்டிச் சட்டமானது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதனாலும், கடு வட்டி ஒழிக்கப்பட்டு வருகிறது.

## கடன் சமரசச் சட்டம்:

மத்திய மாகாணம், பேராரிலேதான் கடன் சமரசச் சட்டமானது முதல்முதல் ஏற்படுத்தப்பட்டது. 1933-ஆம் வருஷ முதல் கடன் சமரசப் போர்டுகள் நியமிக்கப்பட்டு, கடன் பளுவை மிகவும் குறைத்து வந்திருக்கின்றன. இச்சட்டமானது அமுலுக்கு வந்த பிறகு அநேக கடன் கொடுத்தவர்களும் வாங்கியவர்களும் தங்களுக்குள்ளேயே சமரசமாக ஏற்பாடுகள்செய்துகொண்டு, கடனைத் தீர்த்துக்கொள்ளலானார்கள். கடன் கொடுத்தவர்கள், சமரசத்திற்கு உடன்படாவிட்டால், கடன் சமரசப் போர்டுகள் சாக்ஷிப் பத்திரங்களை வெளியிடும். அப்படிப் பட்ட கடன்களின்பேரில் அது முதல் நூற்றுக்கு 6க்கு மேல் வட்டி கிடையாது. கோர்ட்டுக்குச் சென்றால், கோர்ட்டுச் செலவும் அநுமதிக்கப்படமாட்டாது.

1934ல் பஞ்சாப்பு விவசாயக் கடன் உதவிச் சட்டம் (The Punjab Relief of Indebtedness Act) ஏற்படுத்தப்பட்டது. பதினாயிரத்துக்குக் குறைந்த கடன் தொகையாக இருந்தால், சமரசத்தை ஏற்படுத்தக் கவர்ன்மெண்

டார் போர்டுகளை நியமிக்கலாம். இந்த மாகாணத்தில் தண்டுபட்டு என்ற ஒரு பழைய முறை அநுஷ்டிக்கப்படு கிறது.

1935-ஆம் வருஷத்தில் வங்காளத்திலும் விவசாயிக ளின் கடன் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சட்டப்படி கடன் ஏற்பாடு (**Settlement**) போர்டுகள் நியமிக்கப்பட்டன. கடன் கொடுத்தவனாவது, கடன் வாங்கியவனாவது, கடன் ஏற்பாடு செய்யும்படி போர்டா ரிடம் விண்ணப்பித்துக்கொள்ளலாம். சட்டப்படி கடன் கொடுத்தவர் எல்லோருக்கும் நோட்டீஸ் அனுப்பப்படும். ஒரு கடனாளிக்குக் கடன் கொடுத்த யாராவது, போர்டா ரிடம் அவர்கள் கேட்கும்போது கடன் விவரங்களைக் கொடுக்கத் தவறினால், போர்டார் அக்கடனைப் பிறகு வாங்க அனுமதிக்கமாட்டார். கடனாளியின் ஏதாவ தொரு மொத்தக் கடனில் நூற்றுக்கு 40 அளவு கடன் கொடுத்தவர்கள் ஒருவித ஏற்பாட்டிற்கு உடன்பட்டால் அதை மற்றவர்களும் ஒத்துக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தப் போர்டாருக்கு அதிகாரம் உண்டு.

சென்னை மாகாணத்திலே மூன்று வருஷங்கட்கு முன்னே கடன் வாங்கியவர்களைக் காப்பாற்றுஞ் சட்டம் (**The Debtors' Protection Act**) ஒன்று ஏற்படுத்தப் பட்டது. அதனால் விசேஷ நன்மை ஒன்றும் விளைய வில்லை. சுமார் ஒரு வருஷத்திற்கு முன்பு கடன் சமரசச் சட்டம் இயற்றப்பட்டது. அந்தச் சட்டப்படி அரசாங் கத்தார் ஒரு ஜில்லாவுக்காவது, அல்லது ஒரு ஜில்லாவின் பகுதிக்காவது கடன் சமரசப்போர்டை ஏற்படுத்தலாம். எந்தக் கடனாளி போர்டுக்கு மனுச் செய்துகொள்ளுகி

ருனே, அவனுக்குக் கடன் கொடுத்தவர் எல்லாரிடமிருந்தும் கணக்குக் கேட்கப்படும். அப்போது தவறாமல் எல்லாக் கடன் கொடுத்தோரும் கணக்கை அனுப்பிவிட வேண்டும்.

ஒருவன் கொடுக்கவேண்டிய கடனில் பாதிப் பணம் யார் யாருக்கெல்லாம் செல்லுபடி ஆக வேண்டி இருக்கிறதோ, அவர்கள் ஒரு விதக் கடன் சமரசத் திட்டத்தை ஒத்துக்கொண்டால், அது பதிவு செய்யப்படும்.

போர்டார் விசாரணை செய்யும்போது எந்தக் கடன் கொடுத்தவனாவது சமரச உடன்பாட்டிற்கு ஒத்துக் கொள்ளாவிட்டால், போர்டார் ஒரு சாட்சிப் பத்திரத்தை எழுதி வெளியிடுவார். அதில் அந்தக் கடன் கொடுத்தவனுக்கு எவ்வளவு கடன் கொடுத்தால் போதுமென்பது குறிக்கப்படும். அப்படிச் சாட்சிப் பத்திரம் கொடுபட்டுவிட்டால், அந்தத் தொகைக்குக் கோர்ட்டில் பிரியாது செய்ய வேண்டுவதில்லை.

இந்தச் சட்டத்தாலும் சென்னை மாகாண விவசாயிகட்கு நன்மை அதிகமாக உண்டாகவில்லை; விவசாயிகளும் இந்தச் சட்டத்தை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

எனவே, அநேக அந்நிய நாடுகளில் செய்துள்ளதே போல, விவசாயிகளுக்குக் கடன் பளு மிகவும் குறையவும், கடன் தொல்லை அடியோடு ஒழியவும், சென்னை மாகாணத்திலே அரசாங்கத்தார் சட்டம் ஏற்படுத்தி இருக்கின்றனர். இந்த காரியம் பொது மக்களால் மிகவும் பாராட்டத்தக்கது. இதை அனைவரும் ஆதரிக்க வேண்டும். இவ்விதத் தீரச் செய்கையை வேறு எந்த

மாகாண அரசாங்கத்தாரும் செய்யவில்லை. இப்போது மாகாண அரசாங்கத்தார் நிறைவேற்றி இருக்கிற சட்டமானது அது விவசாய மக்களுக்குப் பெரிதும் நன்மையைத் தரும் என்பதில் சற்றும் சந்தேகமே இல்லை. ஆகையால், சென்னை மாகாண மக்கள் அனைவரும் இச்சட்டத்தை ஆதரிக்க வேண்டும்; அதுவுமல்லாமல் இச்சட்டத்தைக் கொண்டு வந்துள்ள மந்திரி சபையாருக்கும் நன்றி அறிதல் உடையவர்களாக இருக்க வேண்டும்.

இனிமேல் சர்க்கார் நிறைவேற்றியுள்ள கடன் நிவாரண சட்டத்தின் விவரங்களை ஆராய்வோம்:

## 9. கடன் நிவாரணச் சட்டத்தின் சுருக்கம்

### அத்தியாயம்—1

1. 2. இந்தச் சட்டம் சென்னை மாகாணம் முழுவதிலும் அமுலிலிருக்க வேண்டும்.

3. (1) இந்த சட்டத்தில் நபர் என்பது ஒரு கூட்டுக் குழுவையோ (**Body Corpopare**), அல்லது மத ஸ்தாபனத்தையோ, தர்ம ஸ்தாபனத்தையோ பதிவு செய்யப்படாத கம்பெனியையோ, சங்கத்தையோ குறிக்காது: இதில் ஒரு நபர் என்பது ஒரு தனி மனிதனையோ, அல்லது பாக வினையாகாத குடும்பத்தைச் சேர்ந்தவனையோ, மருமக்கள் தாயம் அல்லது இளைய சந்தான தர்வாடு அல்லது தாய் வழிகுடும்பம் இவற்றில் எவரையேனும் குறிக்கும்.

2. (a) விவசாயி என்பது, விற்கப் பாத்தியத்துடன் எவன் நிலத்தையோ, தோட்டத்தையோ சொந்

தத்தில் வைத்திருக்கிறனோ, அவனைக் குறிக்கும். அந்த நிலம் முனிஸிபாலிட்டியின் எல்லைக்குள்ளாவது, அல்லது கண்டோன்மெண்டின் எல்லைக்குள்ளாவது இருக்கக் கூடாது. அந்த நிலத்தின்பேரில் மாகாண அரசாங்கத்தார் வரி வசூல் செய்து வந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட வரி **பேஷ்கஷ்** அல்லது குயிட்ரெண்டு (**Quit-rent**) ஆக இருந்தாலும் போதும்; இனாம் நிலமாக இருந்தாலும் இருக்கலாம்; அது கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலமாய் இருக்க வேண்டும்.

(b) அல்லது அந்த விவசாயி, ஒரு பெரிய நிலச் சொந்தக்காரரின் கீழ்க் குடியானவனாகவாவது (சாகுபடி செய்பவன்—**Tenant**) ரயத்தாகவாவது, கீழ்க் குத்தகைக்காரனாகவாவது இருக்கலாம்.

(c) அல்லது மலபார்ச் சாகுபடிக்காரர் சட்டத்தின் (**The Malabar Tenancy Act**)படி நிலத்தில் ஏதாவதொரு சம்பந்தம் உள்ளவனாக இருக்கலாம்.

(d) அல்லது எவ்வித நிலச் சொந்தக்காரரிடமிருந்தாவது நிலத்தைக் குத்தகைக்கு வாங்கியவனாக இருக்கலாம்.

கீழ்க் காண்பவர்கள் விவசாயிகளாகக் கருதப்பட மாட்டார்கள் :—

(1) 1938ஆ மார்ச்சு மாதத்திற்கு முன்பு இரண்டு அரசிறை வருஷங்களில் (**Financial years**) வருமான வரியை, பிரிட்டிஷ் இந்தியாவிலாவது, சுதேச அரசாங்கத்திலாவது, அயல் நாட்டு அரசாங்கத்துக்காவது கொடுத்தவர்கள்.

(2) எந்த முனிஸிபல் சட்டத்தின்படியாவது, 1937ஆ அக்டோபர் மாதத்திற்கு முன்பு, இரண்டு வருஷத்திற்குள் 6 மாதத்திற்கு 300 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கு வருமான வரும்படி கொடுத்தவர்கள்.

1930ஆ ஆகஸ்டுமீ 26உக்கு முன்பு யூனியனைப் இருந்து இப்போது பஞ்சாயத்து ஆன இடத்தில், ஷை அளவுக்கு வருமான வரி தந்தவர்கள்.

(3) 1937ஆ அக்டோபர்மீ 1-ஆம் தேதிக்கு முந்திய இரண்டு அரசிறை வருஷத்தில் (**Financial year**) முனிஸிபல் எல்லைக்குள்ளாவது, 1930க்கு முன்பு யூனியனைப் இருந்து இப்போது பஞ்சாயத்து ஆன அந்த எல்லைக்குள்ளாவது, வருஷ குடிக்கூலி மதிப்பு 600க்கு மேல் உள்ள சொத்துக்காரர்கள்.

(4) எந்த எஸ்டேட்டின் பேரிலாவது 500 ரூபாய்க்கு அதிகமான தொகையைப் பேஷ்கஷாகக் கொடுப்பவர்கள்; 100க்கு மேற்பட்ட ஒரு தொகையைக் குயிட் ரெண்டாகவோ, ஜோடியாகவோ, கட்டுபடியாகவோ, பொறுப்பு முதலியவையாகவோ செலுத்துபவர்கள்; 500 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை மலையாளத்தில் நில வரியாகக் கொடுக்கிற ஜன்மி.

**கடன் :—**

ரொக்கமாகவோ, சாமானுகவோ வாங்கப்பட்டது கடன். அதை ஈட்டின் பேரிலும் வாங்கி இருக்கலாம்; ஈடு இல்லாமலும் வாங்கி இருக்கலாம்; டிகிரி பெறப்பட்டதாக இருக்கலாம்; சிவில் அல்லது ரெவினியூ கோர்ட்டாரின் உத்தரவுப்படி கொடுக்க வேண்டியதாய்

இருக்கலாம். அது விவசாயியால் கொடுபட வேண்டிய தாக இருத்தல் வேண்டும்.

ஆனால், கடன் என்பது 'குத்தகைத் தொகை' என்பதைக் குறிக்காது. கடன் வியாக்யானத்தில் 'காணுர்த்தம்' சேராது.

**குத்தகைத் தொகை (வாரத்தோகை) :—**

இது ஒரு நிலத்தைக் குத்தகைக்கு அல்லது குடி வாரத்துக்கு வைத்திருப்பவர் செலுத்தும் தொகையை அல்லது மிச்ச வாரத்தைக் குறிக்கும். இது குயிட்ரெண்டு, ஜோடி, கட்டுபடி, பொறுப்பு முதலிய எதையும் குறிக்கும். சிவில் கிரிமினல் கோர்ட்டு டிகிரித் தொகையாக இது இருக்கலாம். அல்லது 1920-ஆம் வருடச் சட்டப் படி நிலச் சொந்தக்காரன் வாங்கக்கூடிய நில உள்வரி (Cess) ஆகவும் இருக்கலாம்.

4. சில கடன்களையும் பொறுப்புகளையும் இச்சட்டம் பாதிக்காதென்பது :—

(1) மாகாணக் கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தப்படத் தக்க யாதொரு தீர்வை, வரி அல்லது செஸ், அல்லது கடனுகவோ வேறு விதமாகவோ அவர்களுக்குச் சேர வேண்டிய தொகை

(2) மத்திய கவர்ன்மெண்டாருக்குச் செலுத்த வேண்டிய மேற்கண்ட விவரங்களுக்குள் அடங்கிய தொகை

(3) யாதொரு ஸ்தல ஆட்சியாருக்கு (Local authority) கொடுக்க வேண்டிய தொகை

(4) யாதொரு முனிஸிபாலிட்டிலாவது, கண்டோன்மெண்டிலாவது, 1930-ஆம் வருஷச் சட்டத்திற்கு முன் யூனியனுயிருந்த யாதொரு பஞ்சாயத்திலாவது உள்ள வீட்டுச் சொத்தின் ஈட்டின்பேரில் மாத்திரமே வாங்கப்பட்ட எந்தக் கடன் தொகையும்

(5) கூட்டுறவுச் சங்கங்கள், அல்லது நில அடைமானப் பாங்கிகள் ஆகிய இவைகளுக்குச் சேர வேண்டிய தொகை

(6) ஏதாவது கம்பெனிக்குக் கொடுக்க வேண்டிய தொகை

(7) நம்பிக்கைத் துரோகத்தால் ஏற்படும் யாதொரு பொறுப்பு

(8) கோர்ட்டாரின் டிகிரிப்படியோ மற்றப்படியோ ஜீவனுமிசம் விஷயமாக ஏற்படும் பொறுப்பு

(9) வேறு விதச் சொத்து இல்லாமல், அக்டோபர் (1937) முதல் தேதியில், கடன் வர வேண்டிய தொகை மாத்திரம் 300க்கு மேற்படாத ஒரு சொத்தை மாத்திரம் வைத்திருக்கும் எந்தப் பெண்ணுக்கும் (**Woman**) கொடுக்க வேண்டிய தொகை

**குறிப்பு**—பெண்ணின் சொத்து மதிப்பிடும்போது அவளது நகை, துணி மணி, வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியவை சொத்தென மதிப்பிடப்படமாட்டா.

(10) விவசாய வேலையாள், அல்லது கிராம வேலையாளுக்குச் சேரவேண்டிய சம்பள பாக்கித் தொகைகள்

**5.** மருமக்கள் தாயம், அல்லது அலிய சந்தான தாவாடு, அல்லது தாவழிக் குடும்பமல்லாத எந்த ஹிந்து

பாக விஜேயாகாத குடும்பமாவது மேலே 3-ஆம் பிரிவில் சொல்லியபடி வருமானவரி கொடுத்தாலும், முனிஸிபல் வரி கொடுத்தாலும், வீட்டு வரிகொடுத்தாலும், அக்குடும்பம் 'விவசாயி' என்ற சொல்லினல் குறிக்கப்பட மாட்டாது. விவசாயிக்கு உண்டாகும் நன்மைகள் இச்சட்டத்தால் அவர்களுக்கு உண்டாக மாட்டா.

6. மருமக்கள் தாயம், அல்லது அலிய சந்தான தர்வாடு அல்லது தாவழியை அல்லாத ஹிந்து பொதுக் குடும்பத்தில்சேர்ந்த எவராவது விவசாயியாய் இராவிட்டால், அவராவது அவருடைய குமாரர்களும், சந்ததியாருமாவது, இந்தச் சட்டப்படி விவசாயிகளாகக் கருதப்படமாட்டார்கள்.

## அத்தியாயம்—2

### கடன் தொகையைக் குறைப்பதும், இனிமேலுள்ள வட்டி விகிதத்தைக் குறைப்பதும் :—

7. ஏற்பாடு, வழக்கம், சட்டம் எதன்படியேனும் வாங்கப்பட்ட கடனுைது இந்தச் சட்டப்படி குறைக்கப்படலாம்.

அப்படி இந்தச் சட்டப்படி குறைக்கப்பட்ட தொகையை அல்லாமல் அதிகமான தொகையை எவரும் வாங்கக்கூடாது ; அதற்காக நில ஜப்தி; விற்பனை முதலியவை செய்யக்கூடாது.

8. 1932-ஆம் வருஷம் அக்டோபர்மீ 1-ஆம் தேதிக்கு முன்பு வாங்கப்பட்ட கடன்கள் கீழ்க்கண்டபடி குறைக்கப்படும் :—

(1) 1937ஆ அக்டோபர்மீ 1வுக்கு முன்னுல் சேர்ந்த வட்டிப் பாக்கியானது, கடன் வாங்கியவனுல் கொடுக்கப்பட்டுவிட்டதாக இந்தச் சட்டப்படி கருதப் படும். வட்டி பாக்கி ரத்துபடியானுலும், முதல் தொகை முதலில் பாக்கி ஏதாவது இருந்தால், அது கொடுக்க வேண்டிய தொகையேயாகும்.

(2) ஒரு விவசாயி தான் வாங்கிய கடனுக்காக, வட்டிக்காவது, முதலுக்காவது, அல்லது வட்டி முதல் இரண்டுக்குமாவது, ஒரு கடன் கொடுத்தவனுக்கு, முதல் தொகை **(Principal)** யைப்போல இரண்டு பங்குதொகை யைக் கொடுத்து இருந்தால், அந்த விவசாயியின் கடன் தீர்த்துவிடப்படும் (ரத்து செய்யப்படும்).

(3) மேல் கண்டபடி கணக்கிடும்போது, வட்டி அல்லது முதல், அல்லது வட்டி முதல் இவற்றிற்காகக் கொடுக்கப்பட்ட தொகை, முதல் தொகையைப்போல இரண்டு பங்காக இராவிட்டால், அப்போது அதுவரை யில் கொடுக்கப்பட்ட தொகைக்கும், முதல் தொகையின் இரட்டிப்புத் தொகைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக் கிறதோ, அந்தத் தொகையைக்(முதலாயிருந்தாலும் சரி; முதலின் பகுதியாயிருந்தாலும் சரி; எது குறைவோ அதைக்) கொடுக்க வேண்டும்.

(4) மேல் மூன்று பாராவில் சொல்லப்பட்டிருக் கிறதன் பேரில், கடன் கொடுத்தவனுக்குச் செலுத்தப் பட்டுவிட்ட தொகைகளைத் திருப்பிக் கேட்டு வாங்க முடி யாது, அல்லது இந்தச் சட்டம் ஏற்படாவிட்டால்,கடன் வாங்கியவன் கொடுக்க வேண்டிய தொகையை அதிகப் படுத்தவும் கூடாது.

9. 1932ல் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப் பிறகு வாங்கப்பட்ட கடன்கள் கீழ்க்கண்ட மாதிரி குறைக்கப்படும்:—

(1) இந்தச் சட்டம் ஏற்படுகிற அந்தத் தேதி வரையில் 5 வீதம் வட்டி வாங்கலாம்; அல்லது கடன் வாங்கிய போது 5 வட்டிக்குக் குறைவாக வாங்கப்பட்டிருந்தால், அந்தக் குறைந்த விகித வட்டியையே வாங்க வேண்டும்.

அதனால்:—

அதுவரை கொடுக்கப்பட்ட வட்டிப் பணத்தை எல்லாம் வரவு வைத்துக்கொண்டு, புது வட்டி வீதம் எவ்வளவு ஆகிறதெனக் கணக்குப் பார்த்து, வட்டியாகக் கொடுத்ததுபோக இன்னும் கொடுக்கவேண்டி இருந்தால், அந்த பாக்கி தொகையைக் கொடுத்தால் போதும்.

(2) 1932க்குப் பிறகு ஏற்பட்ட கடன், பத்திரமோ நோட்டோ புதுப்பிக்கப்பட்டதால் உண்டான பழைய கடனாக இருந்தால், அந்தக் கடன் விஷயத்தில் 8-ஆம் செக்ஷனில் சொல்லப்பட்ட விதிகளையே அநுஷ்டிக்க வேண்டும்.

(3) 22 முதல் 25-ஆம் செக்ஷன் வரையில் கூறப்பட்ட விஷயங்களில் தவிர, மற்றைய விஷயங்களில், கடன் அல்லது வட்டித் தொகை அதிகப்படியாகக் கொடுக்கப்பட்டிருந்தால், அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கக் கூடாது.

(10) மேலே கூறப்பட்ட 8, 9 செக்ஷன்படி உள்ள சௌகரியங்கள் 1937ஆு அக்டோபர்மீ 1உ விவசாயியாகக் குத்தகை அல்லது உள் குத்தகை, அல்லது சாகுபடி செய்யாத எவருக்கும் தரப்படமாட்டா.

8, 9-ஆம் பிரிவுகளில் சொல்லப்பட்டவை கீழ்க் கண்ட கடன்களைப் பாதிக்கமாட்டா:—

(1) வட்டி வீதம் இவ்வளவு என்று குறிக்கப்படாத பெந்தகத்தின் பேரில், எவனாவது நிலத்தை அனுபவித்து வந்தால் அந்த கடனும்,

(2) நிலம் வாங்கி அதில் பாக்கி கொடுக்கவேண்டி இருந்தால் அந்த தொகை,

(3) ஒரு கம்பெனிக்கோ, பாங்கிக்கோ, 9 வட்டிக்கு மேல் அதிகப்படாத தொகை கொடுக்க வேண்டி இருந்தால் அந்த தொகை,

11. விவசாயி கொடுக்க வேண்டியதென 8, 9 செக்ஷன்படி சொல்லப்படும் தொகையில், கோர்ட்டு டிகிரியில் கண்ட கோர்ட்டுச் செலவு நில அடைமானம் வாங்கியவன் நியாயமாகச் செய்த செலவு முதலியவைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

12. கடன் தொகை குறைக்கப்பட்ட அந்த நாளிலிருந்து அந்தத் தொகைக்கு வட்டி, நூற்றுக்கு வருஷத்திற்கு $6\frac{1}{4}$ ரூபாய், அல்லது ரூபாய்க்கு மாதம் ஒரு பைசாவாகிய சாதாரண வட்டி, அல்லது ரூபாய்க்கு வருஷத்திற்கு 1 அணா வட்டி—இதைவிடக் குறைவாகக் கொடுக்கப்பட்டு வந்தால், அந்தக் குறைந்த வட்டியே கொடுக்கப்படலாம்.

13. கோர்ட்டார் விவசாயிகளின் கடன் விஷயத்தில் 100க்கு $6\frac{1}{4}$க்கு மேல்பட்ட வட்டியை அநுமதிக்கக் கூடாது.

14. ஹிந்து பிரிவினையாகாத குடும்பத்தில், எவனாவது ஓர் ஆசாமி விவசாயியாய் இராவிட்டால், அவன்

கொடுக்க வேண்டிய தொகைக்கு அவனிடமிருந்து, அல்லது அவன் பங்கு நிலத்திலிருந்து, கடன் கொடுத்தவன் தனக்குச் சேர வேண்டிய தொகையை வசூலிக்கலாம்.

அல்லது விவசாயியின் அல்லது விவசாயிகளின் பேரிலாவது, சொத்தின் பேரிலாவது தொடர்ந்து அந்தப் பகுதிக் கடனை மாத்திரம் கடன்காரன் வசூல் செய்து கொள்ளலாம்.

## அத்தியாயம்—3

## குத்தகைப் பாக்கி

15. 1345-ஆம் பசலியிலும், அதற்கு முந்திய பசலியிலும் கொடுக்க வேண்டிய குத்தகைப் பாக்கியைக் கொடுக்க வேண்டுவதில்லை. அந்த குத்தகைப் பாக்கிக்குக் கோர்ட்டு டிகிரி வாங்கி இருந்தாலும் அது செல்லாது.

1346, 1347-ஆம் பசலியின் குத்தகைத் தொகையில் எவ்வளவு கொடுக்கப்படுகிறதோ அதே விதாசாரப்படிதான். அதற்கு முந்திய பசலிகளின் குத்தகைப் பாக்கி தள்ளுபடி செய்யப்படும்.

1347-ஆம் பசலியின் குத்தகைத் தொகையை 1938ஹு செப்டம்பர்மீ 30-ஆம் தேதிக்குள் கொடுக்காத எந்தக் குத்தகைக்காரனுக்கும் இச்சட்டத்தாலுண்டான நன்மை தரப்படாது.

**உதாரணங்கள் :—**

1345-ஆம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் குத்தகைப் பாக்கியாக 500 ரூபாய் ஒரு குத்தகைதாரன்

கொடுக்க வேண்டி இருக்கிறது. பசலிக்கு 100 ரூ. வீதம் 1346, 1347-ஆம் பசலிக்குக் குத்தகைபாக்கி இருக்கிறது. அவன் 1347-ஆம் பசலிக் குத்தகைத் தொகையை 1938ௌ செப்டம்பர்மீ 30-ஆம் தேதிக்குள்ளே கொடுத்துவிடுகிறான். 1346-ஆம் பசலிப் பாக்கியை 1939-ஆம் வருஷம் செப்டம்பர்மீக்குள் கொடுத்துவிடுகிறான். அப்படியானால், பழைய பாக்கியாகிய 500 ரூபாயைக் கொடுக்க வேண்டுவதில்லை.

ஒருவன் 500 ரூபாய் குத்தகைப் பாக்கியாக, 1345-ஆம் பசலிக்கும் அதற்கு முந்திய பசலிகளுக்கும் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு பசலிக்கும் 100 ரூபாய் வீதம் கொடுக்க வேண்டும். 1347-ஆம் பசலிக்கு 1938ௌ செப்டம்பர்மீ 30-ஆம் தேதிக்குள் 100 ரூபாய் கட்டிவிடுகிறான். ஆனால், 1346-ஆம் பசலிக்கு 1939ௌ செப்டம்பர்மீ 30-ஆம் தேதிக்குள் பணம் கட்டத் தவறிவிடுகிறான். அப்படியானால், அவன் கொடுக்க வேண்டிய பாக்கி 500 ரூபாயும் தள்ளுபடி செய்யப்படாது ; 250 ரூபாய்தான் தள்ளுபடி செய்யப்படும்.

மேற்சொன்னபடியுள்ள விவசாயி 1938ௌ செப்டம்பர்மீ 30-ஆம் தேதிக்குள் 1347-ஆம் பசலிப் பாக்கியைக் கொடுக்கத் தவறினால், இந்தச் சட்டப்படி உள்ள நன்மைகள் அவனுக்கு அளிக்கப்படமாட்டா.

வேறு ஒருவன் 500 ரூபாய் பாக்கிவைத்திருக்கிறான். குறித்த தவணைக்குள் 1347-ஆம் பசலிக்காக 100ரூபாயையும் 1346-ஆம் பசலிக்காகப் பாதித் தொகையாகிய 50 ரூபாயையும் கொடுக்கிறான். அதாவது, இந்த இரண்டு பசலித் தொகையிலும் $\frac{3}{4}$ பங்கு கொடுத்துவிடுகிறான். அப்

படியானல், பழம் பாக்கியான 500 ரூபாயில் 375 ரூபாய் ($\frac{3}{4}$ பங்கு) கொடுபட்டதாகத் தள்ளப்படும். பாக்கி 150 ரூபாய் கொடுக்க வேண்டி நேரிடும்.

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு குத்தகைக்காரன் கொடுக்கும் பணத்தை முதலில் 1347-ஆம் பசலிக்கும் பிறகு 1346 பசலி குத்தகைப் பாக்கிக்கும் அல்லது வேறு பாக்கிக்கு ஈடு செய்துகொள்ள வேண்டும். அதற்கு முந்தி உள்ள பாக்கிக்காக ஈடு செய்துகொள்ளக்கூடாது.

எந்தக் குத்தகைதாரனும் குத்தகைப் பாக்கியைக் கோர்ட்டில் கட்டிவிட்டால் (கோர்ட்டுக் கலெக்டரையும் குறிக்கும்), கோர்ட்டார்கள் நிலக்காரனுடன் பாக்கித் தொகையை நிர்ணயித்து, பாக்கி கொடுக்க வேண்டி இருந்தால் அந்த தொகையையும் குறித்து, சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவார்கள்.

16. நிலச் சொந்தக்காரன் நிலச் செஸ்ஸை (**Land Cess**) ஆவது, அல்லது குத்தகைப் பாக்கிக்காகத் தண்ணீர் வரியையாவது நில வரியையாவது நிலச் சுவான்கள் கொடுத்து இருந்தால், சட்டப்படி அவன் கொடுக்க வேண்டுவதில்லையானல், அதையும் வசூலிக்கலாம். கோர்ட்டு டிகிரியாயிருந்தால், கோர்ட்டுச் செலவையாவது பெற்றுக்கொள்ளலாம்.

17. 1346, 1347-ஆம் பசலிப் பாக்கிகள் கொடுபடாது போனல், அந்தப் பசலிகளுக்கு முந்திய பசலிகளின் பாக்கித் தொகையையும் வசூலிக்கலாமென்று இச் சட்டம் விதித்திருக்கிறது. ஆகையால், இந்த விஷயங்களில், பழைய பாக்கி வாங்கும் விஷயத்தில், காலாவதி தோஷம் பாதிக்காது.

## அத்தியாயம்—4

# முறைகளும் பொதுவும்

18. 1937ஆ அக்டோபர்மீ 1-ஆம் தேதிக்கு முன்பு ஏதாவது டிகிரியானது விவசாயியின்மேல் எழுதப்பட்டிருந்தால், அந்த விஷயத்தில் இந்தச் சட்டப்படி எவ்வளவு கடன் தொகை குறைக்கப்படுமோ, அந்தத் தொகைக்கே கோர்ட்டுச் செலவை அநுமதிக்க வேண்டும்.

அதற்குமேல் இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு அனுமதித்திருந்தால், விவசாயியின் வேண்டுகோளின் பேரில், கோர்ட்டார் அந்தச் செலவுத் தொகையையும் குறைத்துவிடலாம்.

1938ஆ ஏப்பிரல்மீ காலாவதியாகக்கூடிய எந்தத் தஸ்தாவேஜியின் பேரிலும் போடப்பட்ட கேஸ்களுக்கு மேற்கண்ட மாதிரி செலவுத் தொகை குறைத்துக் கொடுக்கப்படமாட்டாது.

19. இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு டிகிரி ஆன தொகையை, விவசாயி விஷயத்தில், அந்தக் கடனாளி வேண்டுகோளின் பேரில், கோர்ட்டார் இந்தச் சட்டப்படியுள்ள நன்மைகளைச் செய்யலாம்.

ஆனால், வசூல் பண்ணிய, பண்ணப்படுகிற தொகைகளை முதலில் கோர்ட்டுச் செலவுத் தொகைக்காக ஈடு செய்துகொள்ள வேண்டும்.

20. ஒரு டிகிரியின்மேல் நடவடிக்கை எடுக்கப்படும் போது, ஒரு விவசாயி இந்தச் சட்டப்படி நன்மை பெற முடியுமானால், கோர்ட்டாருக்கு மனுச் செய்து நடவடிக்

கையை நிறுத்திவைக்கச் செய்யலாம். அதற்குமேல் முதலில் டிகிரி செய்த கோர்ட்டுக்கு மனுப்பண்ணிக்கொள்ளலாம். அப்படிப் போடப்படுகிற மனு கோர்ட்டாரால் தள்ளப்பட்டால், சட்டத்தாலான பிரயோசனம் கிடைக்காது.

21. ஒருவன் இன்சால்வெண்டாகப் போய், வீதாசாரப்படி கடன்காரர்களுக்குத்தொகை கொடுக்கப்பட்டிருந்தால், இச்சட்டம் அவனுக்குப் பிரயோசனமாகாது.

22. 1937ஸ்ரீ அக்டோபர்மீ 1-ஆம் தேதிக்குப் பிறகு விவசாயியின் கடனுக்காக, டிகிரி நிறைவேற்றும் போது ஏதாவது சங்கம சொத்து விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தால், அந்த விவசாயி 8 அல்லது 9, 12, 12 செக்ஷன்படி தனக்கு நன்மை தர வேண்டுமெனக் கோர்ட்டாருக்கு மனுச் செய்துகொள்ளலாம். கோர்ட்டார் இஷ்டப்பட்டால், புதுச் சட்டப்படி, கடன் கொடுத்தவனுக்கு எவ்வளவு சேரவேண்டி இருக்கிறதோ, அதைவிட அதிகமாக வசூலான தொகையைத் திரும்பி வாங்கிக் கடன் வாங்கியவனுக்குக் கொடுக்கலாம்.

ஆனால், இது டிகிரி ஹோல்டருக்குத் தெரிவித்த பிறகே செய்யப்பட வேண்டும்.

23. 1937ஸ்ரீ அக்டோபர்மீ 1-ஆம் தேதியிலாவது அதற்குப் பிறகாவது, விவசாயியின் ஏதாவது ஸ்தாவரச் சொத்து, கோர்ட்டாரின் டிகிரி நிறைவேற்றுதலின் பேரில் விற்கப்பட்டிருந்தால், அந்த விற்பனையை ரத்து செய்து, இந்தச் சட்டப்படி வரக்கூடிய நன்மையை விவசாயி அடையும்படி கோர்ட்டார், தங்களுக்கு மனுச் செய்துகொள்ளுவதன்பேரில், உத்தரவு செய்யலாம்.

அப்போது விற்பனை நடந்ததாகவே எண்ணப்பட மாட்டாது.

இது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இவ்விஷயம் தெரிவிக்கப்பட வேண்டும்.

24. ஒருவன் அந்த ஏல நிலத்தை வாங்கி, அதற்காக வேறொருவனுக்குப் பணம் கொடுத்திருந்தால், அந்தப் பணத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

25. எந்தக் கடன் வாங்கியவனாவது 1937-ஆம் வருஷம் அக்டோபர் மீ 1-ஆம் தேதியிலாவது அதற்குப் பிறகாவது நிலத்தை இழந்திருந்தால், அந்த நில விற்பனையானது 23-ஆம் செக்ஷனில் கூறப்பட்டபடி கோர்ட்டாரால் தள்ளுபடியாகும் பக்ஷத்தில், நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

26. எந்தக் கடன் கொடுத்தவனும், கலெக்டருக்கு மனுச் செய்துகொண்டால், கடன் வாங்கியவன் எவனாயினும், அவன் வருமான வரி முதலிய வரிகளை எவ்வளவு எப்போது கொடுத்தான் என்பது போன்ற விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

27. இதேமாதிரி முனிஸிபாலிட்டியாரும் ஏனையோரும் கடன் வாங்கியவனது வரி முதலிய விவரங்களை அளிப்பார்கள்.

28. மாகாண அரசாங்கத்தார்கள் இதற்கேற்ற விதிகளை அமைக்கக் கடமைப்பட்டவர்கள்.

## 10. முடிவுரை

சென்னை அரசாங்கத்தாரின் சட்டத்தில் உள்ள ஒரு முக்கியமான பழங்கொள்கைக்குத், 'தண்டுபட்டு' (Damdupat) என்பது பெயர். அதாவது, ஒருவன் ஒரு தொகையைக் கடனாக வாங்குகிறான். அவன் வாங்கிய கடனுக்கு வட்டி கட்டாமல் இருந்துவிடுகிறான். பல நாட்கள் ஆகிவிடுகின்றன. வட்டித்தொகை பெருகிவிடுகிறது. ஆனால், எவ்வளவு நாளைக்கு வட்டித்தொகை பாக்கி இருந்தாலும், அந்தத்தொகை எவ்வளவு ஆனாலும், கொடுத்த கடன் முதல் தொகை எவ்வளவோ, அதைவிட அதிகமான தொகையை வட்டியாக வாங்கக் கூடாது என்பது அந்த ஏற்பாட்டின் உண்மை. உதாரணமாக ஒருவன் 100 ரூபாய்க் கடன் வாங்குவதாக வைத்துக் கொள்வோம். அவன் பல வருஷங்கள் வரையில் வட்டி கொடாது இருந்து வருகிறான். கணக்குப் பார்த்தால், வட்டிப் பாக்கி 200 ரூபாய் ஆகிவிடுகிறது. ஆனால், அவன் வட்டிக்காக 200 ரூபாய் வாங்க முடியாது. ஏனெனில், 100 ரூபாய்க்கடனுக்கு மிகவும் அதிகமாக வாங்கினால், 100 ரூபாய்தான் வட்டியாக வாங்கலாம். அதற்குமேல் வாங்கக் கூடாது.

சுமார் 90 வருஷங்களுக்கு முன்னே திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஓர் இராணியார் இதைவிட இன்னும் ஒரு படி அதிகமாகவே உள்ள சட்டத்தை இயற்றினார். அதன்படி முதல் தொகையில் பாதி வரையில் உள்ள தொகையைத்தான் வட்டியாகக் கொடுக்கலாம். அதா

வது, 100 ரூபாய்க்கு 50 ரூபாய்க்குமேல் அதிகமாக வட்டியைக் கொடுக்கவாவது வாங்கவாவது கூடாது என்பதாம்.

நமது மாகாண அரசினர் 'தண்டுபட்டு' என்ற அந்தப் பழைய முறையைத் தழுவி இக்கடன் ஒழிப்புச் சட்டத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர். இதைக் கண்டு யாரும் மருள வேண்டுவதில்லை. இந்த ஒருமுறை பம்பாய் மாகாணத்திலும் வங்காளத்திலும் இன்றுகூட நடைமுறையில் இருக்கிறது. ஆகவே, இந்த முறையை அரசினர் புதுப்பிப்பதில் அபிப்பிராய பேதம் இருக்க வேண்டுவதே இல்லை.

இந்தச் சட்டத்திலே 1932-ஆம் வருஷத்திற்கு முன்புவாங்கிய கடனுக்கும், அதற்குப்பிந்திய கடனுக்கும் வெவ்வேறு விதமான முறை கையாளப்பட்டிருப்பது போற்றத்தக்கது. விலைவீழ்ச்சியால் 1932-ஆம் வருஷத்திற்குமுன் வாங்கிய கடன் பளுதான் திடீரென அதிகமாகி விட்டது. ஆனல், 1932லும் அதற்குப் பின்னும் வாங்கிய கடன்கள், குறைந்த விலை விற்ற காலத்தில் வாங்கப்பட்டவையாகையாலும், 1932க்குப் பிறகு விலை வாசி குறையவில்லையாதலாலும், கடன் சுமை கடன் வாங்கிய போது இருந்த அந்த அளவிலேதான் இருக்கிறது; அதிகமாகவில்லை. 1932க்கு முன்பு வாங்கின கடன்களின் விஷயமோ, அப்படியல்ல. அக்கடன்கள் விவசாயிகட்குத் தெரியாமலே அதிகமாகிவிட்டன. இவ்விஷயம் இந்நூலிலேயே முன் பகுதிகளில் விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடன் வாங்கிய காலத்துக்கேற்றபடி, கடன் நிவாரண முறையும் செய்யப்பட்டிருப்பது கொண்டாடத்தக்கது.

கடன் கொடுத்த தொகையைக் குறைப்பது, வட்டியைக் கட்டாயமாகக் குறைப்பது, குத்தகைப் பாக்கியை ரத்து செய்வது இவைகளைப் புரட்சி தரக் கூடிய, விரும்பத்தகாத புத்தம்புதிய முறைகளெனச் சிலர் கூறுவது அவர்களின் அறியாமையைக் காட்டும்; ஏனென்றால், இந்த முறைகளில் சிலவேனும், பலவேனும், பல வேறு நாடுகளிலே அந்நாட்டு அரசினர்கள் கையாண்டு பலனை அடைந்திருக்கிறார்கள். உதாரணமாக,

(1) முதல் தொகையைக் குறைப்பது :—

கொடுக்க வேண்டிய வட்டி முதல் தொகையை மிக அதிகமாகக் குறைத்து, விவசாயிகள் பல வருஷங்கள் வரையில் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்துக் கடன் அடைக்கும்படி பல தேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே ஏற்பாட்டை ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, டென்மார்க்கு, போலந்து முதலிய நாடுகளில் காணலாம். 1934-ஆம் வருஷச் சட்டப்படி விவசாயியின் கடன் நூற்றுக்கு ஐம்பது வீதம் போலந்து தேசத்தில் குறைக்கப்பட்டது. யூகோஸ்லேவியாவிலும் அதே போல நூற்றுக்கு ஐம்பது வீதம் கடன் தொகை குறைக்கப்பட்டது.

கடன் தொகை வட்டியை அநேகமாக எல்லா நாடுகளிலும் கட்டாயமாகவே குறைத்து இருக்கிறார்கள். 1933ல் ஜெர்மனியில் $4\frac{1}{2}$ வீதமாகவும், 1935ல் பெல்ஜியத்தில் 6 வீதமாகவும், 1930ல் இத்தாலியில் சுமார் 4 வீதமாகவும், 1934ல் ஸ்விட்சர்லாந்தில் $4\frac{1}{2}$ வீதமாகவும், 1933ல் டென்மார்க்கில் 4 வீதமாகவும், 1936ல் பல்கேரியாவில் 5 வீதமாகவும், 1933ல் கிரீஸில் 6 வீதமாக

வும், 1933ல் ஹங்கேரியில் 5 விகிதமாகவும் குறைக்கப்பட்டிருக்கின்றது. டென்மார்க்கு, ஸ்வீடன் முதலிய தேசங்களிலெல்லாம் இத்தனை வட்டிக்கு மேலே வாங்கக் கூடாதெனச் சட்டமே விதிக்கப்பட்டது.

இதல்லாமல் வேறு பல வகைகளாலேயும், அந்நிய நாட்டு அரசாங்கங்கள் தங்கள் தங்கள் நாட்டு விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகப் பல முயற்சிகளைச் செய்திருக்கின்றன.*

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலே இதைப்பற்றி நடந்த வேலையைப்பற்றிக் கூறுவோம்: அங்கே அரசாங்கத்தார், பழைய கடன்களைத் தீர்ப்பதற்காக விவசாயிகளுக்கு ஏராளமான பணத்தைக் கடனாகக் கொடுத்தார்கள். பெரும்பாலும் கடன் கொடுத்தவர்களுக்குச் சேர வேண்டிய தொகை மிகவும் குறைக்கப்பட்டது. வட்டியானது நூற்றுக்கு 5 சத விகிதத்திலிருந்து $3\frac{1}{2}$ விகிதமாகக் குறைக்கப்பட்டது. வட்டியானது மிகவும் குறைந்து போகும்படி செய்யப்பட்டது. அதற்குமுன் அமெரிக்க விவசாயிகள் தங்கள் வரும்படியில் நூற்றுக்கு 10 பங்கை வட்டி கொடுப்பதற்காகச் செலவிட்டார்கள். ஆனால், இப்போதோ, தங்கள் வரும்படியில் நூற்றுக்கு $4\frac{1}{2}$ பங்கை வட்டிக்காகக் கொடுத்தால் போதும். இதையல்லாமல் விவசாயிகள் தாங்களே நடத்திப்பயன்பெறக்கூடிய கடன்கொள்ளு முறைத் திட்டத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.†

---

* Dr. P. J. தாமஸ் கூட்டுறவு மகாநாட்டின் தலைமை உரை.

† இவ்விவரங்களை இந்நூலாசிரியரின் "அன்னிய நாடுகளில் கடன் ஒழிப்பு" என்னும் நூலில் காண்க.

இந்த மாதிரியாக மேல் நாடுகள் பலவற்றிலும் பல முறைகளாலும் விவசாயிகளின் கடன் தொல்லையை ஒழிக்க, அந்நாட்டு அரசாங்கங்கள் முயல்கின்றன.

சுயேச்சை பெற்ற அந்த நாடுகளில் விவசாயியின் கடன் கஷ்டத்தை நிவர்த்திக்கப் பலவிதத்திலும் முயற்சி செய்ய வசதி உண்டு. அடிமைப்பட்ட இந்த நாட்டிலே அந்தச் சுதந்திர நாடுகளில் செய்யும் காரியங்கள் அனைத்தையும் செய்ய முடியாது. ஓரளவு மாகாணச் சுதந்திரம் வந்திருப்பதாலேதான் சென்னை மந்திரி சபையார் இச் சிறந்த சட்டத்தை நிறைவேற்றி இருக்கின்றனர். இது விவசாயிகளுக்குப் பெரிய வாழ்க்கை நலத்தைத் தருமென்று நிச்சயமாக நம்பலாம். இச்சட்டம் விவசாயிக்குப் பெரிதும் நன்மை விளைவிப்பதாக !

" வாழிய செந்தமிழ் ! வாழ்கநற் றமிழர் !
வாழிய பாரத மணித்திரு நாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மைவந் தெய்துக ! தீதெலாம் நலிக !"

—பாரதியார்

## இந்நூலாசிரியர் எழுதிய வேறு நூல்கள்

---

**1. கடன் நிவாரணச் சட்டமும் அதைப் பற்றிய முழு விவரங்களும் :—**

இதில் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டியதேன்? கடனைப்பற்றிய விஷயங்கள், குடிவாரப் பாக்கிகளைப் பற்றியவை, சட்டத்தின் முக்கிய அமிசங்கள், சட்டத்தின் விளக்கம், சட்டத்தின் சுருக்கம், சட்டத்தின் சரியான தமிழ் மொழி பெயர்ப்பு, சட்டம் (ஆங்கிலத்தில்) முதலியவை அடங்கி உள்ளன. யாவரும் படிக்க வேண்டியது. (2 வர்ணப் படங்களுடன்) விலை அணு 12.

**2. அந்நிய நாடுகளில் கடன் ஒழிப்பு :—**

வெளி நாடுகளில் 21 தேசங்களில் விவசாயிகளின் கடனை ஒழிக்க என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதன் முழு விவரமும் கூறுவது. அழகிய சித்திரப் படங் கொண்டது. விலை அணு 12.

**3. கிராமச் சீர்திருத்தம் :—**

கிராமப் பொருள் நிலை முதலியவைகளைப்பற்றிப் பல புள்ளி விவரங்களுடன் காட்டி, கிராமப் பொருள் நிலை, சுகநிலை, வாழ்க்கை நிலை இவைகளை எல்லாம் எப்படி எளிதில் மேம்படுத்த முடியும் என்பதை விளக்கும் நூல்.

கனம். டாக்டர் சுப்பராயனவர்களின் முகவுரையுடன் கூடியது. (பல படங்களுடன்) விலை ரூ. 1

**தேசீய வித்யா சங்கம்,**

16, செம்புதாஸ் தெரு :: ஜார்ஜ் டவுன், சென்னை.